இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள் - 28

சுடர் 32 | கதிர் 128 | வள்ளுவர் ஆண்டு 2048 | பங்குனி 21 திங்கட்கிழமை 03.04.2017

## தெற்காசியாவில் பயங்கரவாதத்தை ஒழித்தல் மாநாடு கொழும்பில் இன்று

கொழும்பு, ஏப். 3
தெற்காசியாவில் பயங்கரவாதத்தை ஒழித்தல் மற்றும் வன்முறையான கடும்போக்குவாதத்தை ஒடுக்குதல் தொடர்பான பிராந்திய மாநாடு கொழும்பில் இன்று ஆரம்பமாகவுள்ளது.
பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி இந்த மாநாட்டுக்குத் தலைமை >> 24

முச்சந்தி முரளி



எத்தின உயிர்களைக் காவு கொள்ள வந்ததோ தெரியாது...

## ரூ. 16 கோடி ஹெரோயின் காங்கேசன் கடற்பரப்பில் மாட்டியது

6 இந்திய மீனவர்களும் கைது



யாழ்., ஏப்ரல் 3
"வடக்குக் கடற்பரப்பில் 16.2 கோடி (162 மில்லியன்) ரூபா பெறுமதியான உயிர்க்கொல்லிப் போதைப் பொருளான ஹெரோயின் (பிறவுண் சுகர்) நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு கடற்படையினரால் கைப்பற்றப்பட்டது. அதனைக் கடத்திய குற்றச்சாட்டில் இந்திய மீனவர்கள் 6 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் பயணித்த நாட்டுப் படகும் கடற்படையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளது"
இவ்வாறு காங்கேசன்துறை பொலிஸார் தெரிவித்தனர்.
மூன்று >> 24

## முல்லையில் 40,000 ஏக்கர் காணிகள் படையினர் வசம்

நல்லிணக்கச் செயலணி அதனை மூடிமறைக்கிறது எனச் சாடல்

முல்லைத்தீவு, ஏப். 3
முல்லைத்தீவு மாவட்டத்தில் பாதுகாப்புப் படையினர் வசம் 40 ஆயிரம் ஏக்கர் காணிகள் உள்ளன. ஆனால் மொத்தம் 9 ஆயிரத்து 148 ஏக்கர் காணிகள் மட்டுமே படையினர் வசம் உள்ளன என்று நல் >> 24

## இரு இளைஞர்கள் மீது நேற்றிரவு வாள்வெட்டு

மட்டுவிலில் பயங்கரம்

தென்மராட்சி, ஏப். 3
மோட்டார் சைக்கிளில் வந்த 4 பேர் வீதியோரத்தில் கதைத்துக் கொண்டிருந்த 2 இளைஞர்கள் மீது வாள்களால் சரமாரியாக வெட்டி விட்டு அங்கு நின்ற முச்சக்கரவண்டியையும் சேதப்படுத்தித் தப்பிச் சென்றனர்.
மட்டுவில் வடக்கு முத்துமாரி அம்பாள் ஆலயத்தை அண்டிய பகுதியில் நேற்றிரவு 7.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது என்று தெரிவிக்கப்பட்டது
அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள் காயமடைந்தவர்களை வாகனத்தில் ஏற்றி சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர். அவர்கள் இருவரும் மேலதிக சிகிச்சைக் >> 22

## பன்றிக் காய்ச்சலால் இதுவரை 17 பேர் சாவு

கொழும்பு, ஏப். 3
எச்1என்1 வைரஸ் தொற்றான பன்றிக் காய்ச்சலால் நாடு முழுவதும் இதுவரை கர்ப்பிணிப் பெண் உட்பட 17 பேர் உயிரிழந்துள்ளனர் என மத்திய மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் தெரிவித்தார்.
"மத்திய மா10காணத்தில் மாத்திரம் இந்த வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட 115 நோயாளர்கள் தற்பொழுது வைத்தியசாலையில் தங்கிச் சிகிச்சை பெற்று வருகின்றனர்.
மத்திய மாகாணத்தின் கண்டி, மாத்தளை ஆகிய மாவட்டங்க >> 24

## புதிய அரசமைப்பு மீதான பொது வாக்கெடுப்பு வெற்றியைத் தரும்

அரசு நம்பிக்கை

கொழும்பு, ஏப். 3
"புதிய அரசமைப்புக்கான பொது வாக்கெடுப்பு கூட்டு அரசுக்குக் கடினமான திருப்பமாக இருந்தாலும் அது நூறு வீதம் வெற்றி பெறக் கூடிய இலக்காகும்"
இவ்வாறு அயலுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.
சமகால அரசியல் தொடர்பில் 'சண்டே ஒப்சேவர்' பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
"புதிய அரசமைப்பு உருவாக்கப் >> 22

## வாக்குறுதிகளை நிறைவேற்றினால் கொழும்புக்கு இராணுவ உதவிகள்

நிபந்தனை விதிக்கிறது அமெரிக்கா



கொழும்பு, ஏப். 3
"அமெரிக்கா- இலங்கை இடையேயான இராணுவ ஒத்துழைப்பு அதிகரித்து வருகின்றது. நல்லிணக்கம் மற்றும் நீதி செயன்முறைகளில் இலங்கையின் முன்னேற்றத்தையே அது பிரதிபலிக்கின்றது. கொழும்பு அரசு தமது மக்களுக்கும் பன்னாட்டுச் சமூகத்துக்கும் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் தொடர்ந்தும் முனைப்புக் காட்டுவது. இரண்டு நாட்டு >> 24

## அரசமைப்பு வழிநடத்தல் குழு கூட்டம் 3 நாள்களுக்கு நீடிப்பு

இடைக்கால அறிக்கையை விரைந்து இறுதி செய்வதற்காக

யாழ்ப்பாணம், ஏப். 3
புதிய அரசமைப்பு உருவாக்கம் குறித்த இடைக்கால அறிக்கையை உடனடியாக இறுதி செய்து அதனை நாடாளுமன்றத்தில் முன்வைப்பது என்று வழிகாட்டல் குழு முடிவு செய்துள்ளது. அதற்காக நாளை ஆரம்பமாகும் வழிநடத்தல் குழுவின் அடுத்த கூட் >> 24

## சிறப்புத் தேவையுடையோருக்கான திட்டங்களுக்கு நிதி வழங்கத் தயார்

வடக்கு சுகாதார அமைச்சிடம் முன்மொழிவைக் கேட்கிறார் ராஜித

யாழ்ப்பாணம், ஏப். 3
வடக்கு மாகாணத்திலுள்ள சிறப்புத் தேவையுடையோருக்கான செயற்றிட்டங்கள் தொடர்பில் முன்மொழிவை முன்வைத்தால் நிதியுதவி வழங்கத் தயாராக உள்ளதாகக் கொழும்பு அரசின் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.
வவுனியா பொது வைத்தியசாலையில் நேற்று நடைபெற்ற குருதி வங்கித் திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
இதனைத் >> 24

## ரணில் மீளவும் உறுதி

## வெளிநாட்டு நீதிபதிகளுக்கு இடமளியோம்

பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றை இலங்கை ஏற்காது எனவும் தெரிவிப்பு



கொழும்பு, ஏப். 3
"இலங்கையில் வெளிநாட்டு நீதிபதிகள் நீதித்துறை சார்ந்த செயற்பாட்டை மேற்கொள்வதற்கு இடமில்லை. பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்தை இலங்கை அங்கீகரிக்கப் போவதில்லை"
இவ்வாறு [illegible] தமாகத் [illegible] >> 24

## தமிழரின் நம்பிக்கையை வென்றால் நீதி விசாரணைப் பொறிமுறை தேவையற்றதாகப் போகலாம்!

இப்படிக் கூறுகிறார் அமைச்சர் மங்கள



கொழும்பு, ஏப். 3
"இலங்கை அரசு உருவாக்கத் தீர்மானித்துள்ள காணாமற்போனோர் அலுவலகம் மற்றும் உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழு ஆகி >> 24

## 12,000 போராளிகளைத் தண்டிப்பதானால் பன்னாட்டு விசாரணையை நடத்தமுடியும்

அமைச்சர் சம்பிக்க மீளவும் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 3
"பன்னாட்டு விசாரணைகள்தான் தமிழர் தரப்பினருக்கு அவசியம் என்றால், கடந்த காலத்தில் விடுவிக்கப்பட்ட 12 ஆயிரம் புலிகளைக் கைது செய்து தண்டிக்க வேண்டும். இதற்குத் தமிழர் தரப்பு தயார் என்றால், நாமும் பன்னாட்டு விசாரணைகளை முன்னெடுக்கத் தயார். பக்கச்சார்பான எந்தவொரு விசாரணையையும் அரசு ஏற்காது" >> 24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## வேலைவாய்ப்புக்கள் கேட்டு அரசியல்வாதிகளின் பின்னால் இளையோர் செல்லும் யுகம் முடிவுக்கு வரவேண்டும்

*மைத்திரி வலியுறுத்து*

திருகோணமலை, ஏப். 3
"இளையோர் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்காக அரசியல்வாதிகளின் பின்னால் செல்லும் யுகம் முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும். இளையோரின் அறிவு, ஆற்றல்கள் மற்றும் ஆக்கத்திறனின் ஊடாக அவர்களுக்கான சமூகத்தின் கதவுகள் திறக்கப்பட வேண்டும்"
இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.
திருகோணமலையில் நடைபெற்ற யொவுன் புரண நிகழ்வின் இறுதிநாள் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டதாக அரச தலைவர் ஊடகப் பிரிவு அனுப்பியுள்ள பத்திரிகை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,
வேலையற்ற பட்டதாரிகளின் பிரச்சினைகளுக்குத் துரிதமான தீர்வுகளைப் பெற்றுத் தருவேன். முறையான மதிப்பீடுகளோ அல்லது திட்டமிடலோ இன்றி முறையற்ற விதத்தில் கடந்த காலத்தில் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்புக்கள் வழங்கப்பட்டன. இதனால் தொழிலில் ஈடுபட்டுள்ள பட்டதாரிகளும் பல்வேறு சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளனர். தற்போதைய அரசின் கீழ் முறையான திட்டத்துடன் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
நாட்டில் இளையோருக்குச் சிறப்பான எதிர்காலத்தை ஏற்படுத்திக் கொடுக்கும் பொறுப்பு அரசைச் சாரும். எவ்வாறான குற்றச்சாட்டுக்கள் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்ட போதிலும் நாட்டுக்குத் தேவையான அபிவிருத்தியுடன் அரசின் செயற்பாடுகள் முன்னோக்கிக் கொண்டு செல்லப்படும். இளையோருக்கு முன்னுரிமையளித்து அவர்களது பலத்தையும், ஆக்கத்திறனையும் நாட்டின் எதிர்காலத்துக்காகப் பயனுள்ள விதத்தில் உபயோகிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
மீண்டும் நாட்டில் இளைஞர்கள் ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்வதற்கான தேவையை ஏற்படுத்தாதிருப்பது ஆட்சியாளர்களின் பொறுப்பாகும். இளைஞர்களுக்கு உரிய சமூக அங்கீகாரத்தை, அவர்கள் செல்ல வேண்டிய பாதையையும் அமைத்துக் கொடுக்கும் பணியை அரசு நிறைவேற்றும்.
இன்று எமது நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வுகளைக் கண்டறிந்து தேசிய பொருளாதாரத்தை பலப்படுத்துவதற்கான பெருமளவு பங்களிப்பை வழங்கக்கூடிய இளைஞர்களை தேசிய உற்பத்தி நடைமுறைகளை வலுப்படுத்தி, ஏற்றுமதிகளை அதிகரித்து, தேசிய பொருளாதார இலக்குகளை வெற்றிகொள்வதற்காக இணைத்துக் கொள்வதற்கான திட்டங்கள் வினைத்திறனான முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று அரச தலைவர் உரையாற்றியதாக பத்திரிகை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ-5)

## ரயில் குண்டுப் புரளியை ஏற்படுத்திய மாணவிக்கு 2 வருடங்கள் நன்னடத்தை

கொழும்பு, ஏப். 3
கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 26ஆம் திகதி கொழும்புக் கோட்டை தொடருந்து நிலையத்திலிருந்து பதுளைக்குச் செல்லவிருந்த இரவு தபால் தொடருந்தில் குண்டு இருப்பதாகப் புரளியைக் கிளப்பி பெரும் பதற்றத்தை ஏற்படுத்திய குற்றத்துக்காக 18 வயது மாணவிக்கு இரண்டு வருட நன்னடத்தைக் காலத்தை வழங்கி கொழும்புக் கோட்டை நீதிவான் செல்விலங்காஜயரத்ன உத்தரவிட்டார்.
மாணவியை ஒரு இலட்ச ரூபா ஆள் பிணையில் அவரது தாயாரிடம் ஒப்படைக்குமாறும் நீதிமன்று கட்டளையிட்டது
சம்பவ தினம் தனது காதலன் தன்னுடைய விருப்பத்துக்கு மாறாக அந்தத் தொடருந்தில் அவரது நண்பர்கள் சிலருடன் சுற்றுலா செல்லவிருந்ததாகவும், அவரது பயணத்தைத் தடுத்து நிறுத்தவே தான் இந்தக் குண்டு புரளியைக் கிளப்பிவிட்டதாகவும் மாணவி விசாரணைகளின் போது ஒப்புக் கொண்டிருந்தார் என்று கோட்டைப் பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.
இந்த மாணவி செய்திருப்பது பாரதூரமான குற்றமென சுட்டிக்காட்டிய நீதிவான், அவரது எதிர்காலத்தைக் கருத்திற் கொண்டு தண்டனை வழங்காமல் நன்னடத்தை உத்தரவைப் பிறப்பிப்பதாகக் கட்டளையிட்டார். (வ-5)

## பன்னாட்டு விசாரணைக்கு தேவையான ஆதாரங்கள் நிபுணர்களிடம் உள்ளன

*போர்க்குற்றம் இடம்பெறவில்லை என நிரூபிக்க முடியாது என்கிறார் கிழக்கு விவசாய அமைச்சர்*

தாளங்குடா, ஏப்.3
"பன்னாட்டு விசாரணை என்கின்ற விடயம் வெறுமனே சொல்லப்பட்டதல்ல. இது தொடர்பான ஆதாரங்களை எல்லாம் பன்னாட்டு நிபுணர்கள் எற்கனவே சேகரித்து வைத்திருக்கின்றார்கள். முழுப்பூசனிக்காயை சோற்றுக்குள் புதைக்கவும் முடியாது புண்ணுக்கு புழுகு பூசி அதன் துர்நாற்றத்தை இல்லாமல் செய்திடவும் முடியாது"
இவ்வாறு கிழக்கு மாகாண விவசாய அமைச்சரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளருமாகிய கி.துரைராசசிங்கம் தெரிவித்தார்.
மட்டக்களப்பு தாளங்குடா றோ. க. பாடசாலையில் இடம்பெற்ற விளையாட்டு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
"எந்தக் காரணம் கொண்டும் இந்த நாட்டின் படை வீரர்களை நான் குற்றவாளிகளாக ஆக்கமாட்டேன்" என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன சொல்லிக் கொண்டிருக்கின்றார். வழக்கமாக குற்றவியல் வழக்குகளில் குற்றஞ்சாட்டப்படும் ஒருவர் அவருடைய சட்டத்தரணியை அணுகுகின்ற போது அவரை சட்டத்தரணி முதலில் விசாரிப்பார். அப்போது குற்றம் சாட்டப்பட்டவர் அனைத்து விடயங்களையும் சொல்லுவார். சட்டத்தரணி இவற்றையெல்லாம் கேட்கும் போது, அவருக்குத் தெரியும் குற்றம் சாட்டப்பட்டவர் குற்றம் செய்திருப்பார் என்பது. எனவே அவரை இந்த சட்டத்தினுடைய ஓட்டைகளுக்குள்ளே சென்று எவ்வாறு காப்பாற்றலாம் என்று சட்டத்தரணி முயற்சிப்பார். குற்றவியல் வழக்குகளில் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கும் போது, சந்தேகநபர் குற்றவாளியல்ல என்று தீர்ப்பு வழங்காது. அவர் மீதான குற்றம் நிரூபிக்கப்படவில்லை என்றுதான் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கும்.
எனவே அரச தலைவராக இருக்கட்டும், அல்லது அரசியல் தலைவர்களாக இருக்கட்டும் முதலில் உங்கள் இராணுவ வீரர்கள் பன்னாட்டு சட்ட நியமங்களுக்கு உட்பட்டு போர் செய்திருக்கின்றார்களா என்பதை நீங்கள் அறிய வேண்டும். ஜவகர்லால் நேருவின் உலக சரித்திரத்தினுடைய ஒரு பார்வை என்ற புத்தகத்தில் "போர் செய்கின்ற எல்லோரும் தங்களுடைய தலைகளை இழந்துவிடுகின்றார்கள், அவர்கள் அதுவரையில் கடைப்பிடித்து வந்த நாகரீகங்களை இழந்து விடுகின்றார்கள், காட்டுமிராண்டிகளாக மாறிவிடுகின்றார்கள். எனவே போர்களை யாருமே நியாயப்படுத்தி விட முடியாது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.
அரசியல் தலைவர்கள் ஒன்றை நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும், தங்களுடைய வீரர்கள் ஒரு விதத்திலே பன்னாட்டு நியமங்களுக்கு மாறாக நடந்திருக்கின்றார்கள். ஆனால் அவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற கடமை உங்களுக்கு இருக்கின்றது என்று நீங்கள் உணருகின்றீர்கள் என்றால், முதலில் நீங்கள் உண்மையை ஒத்துக் கொள்ளக் கூடிய மனநிலைக்கு வர வேண்டும். உங்களுடைய போர் வீரர்களை உங்களுடைய புத்த குருமாருக்கு முன்னிலையிலோ அல்லது உங்களது அதியுயர்ந்த குடிமக்களுக்கு முன்னிலையிலோ ஒரு மிக இரகசியமான இடத்துக்கு அழையுங்கள். அவர்கள் என்ன என்ன செய்தார்கள் என்பதை அவர்களைச் சொல்லச் செய்யுங்கள். அவ்வாறு செய்கின்ற போது, அவர்கள் என்ன என்ன செய்தார்கள் என்பதை நீங்கள் அறிந்து கொள்ள முடியும். ஏனெனில் பன்னாட்டு விசாரணை என்கின்ற விடயம் வெறுமனே சொல்லப்பட்டதல்ல. இது தொடர்பான ஆதாரங்களை எல்லாம் பன்னாட்டு நிபுணர்கள் எற்கனவே சேகரித்து வைத்திருக்கின்றார்கள்.
குழந்தைகள் மீது மேற்கொள்ளப்பட்ட குற்றங்கள், பெண்கள் மீது மேற்கொள்ளப்பட்ட கொடூரங்கள், இளைஞர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட அக்கிரமமான சித்திரவதைகள் என்பவற்றுக்கெல்லாம் சான்றுகள் உண்டு. இந்த சான்றுகளுக்கிடையே உங்கள் இராணுவ வீரர்கள் குற்றம் செய்யாதவர்கள் என்று உங்களால் நிரூபிக்க முடியாது.
இந்த நாட்டின் சொந்தக்காரர்களான இந்த மக்களை இந்த நாட்டு இராணுவமே கொன்றது. நாங்கள் தமிழர்கள். பாதிக்கப்பட்ட மக்களுடைய எதிர்காலம் நோக்கி நாங்கள் உறுதியான எண்ணப்பாட்டோடு செயற்பட வேண்டும். எமக்கு சரியான நீதி கிடைக்க வேண்டும். அந்த நீதி கிடைப்பதற்கான பொறிமுறைகள் தற்போது உருவாகிக் கொண்டிருக்கின்றன. அந்தப் பொறிமுறைகள் சரியான முறையில் செயற்படுத்தப்பட்டு எங்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்கின்ற உறுதிப்பாட்டோடு நாங்கள் செல்ல வேண்டும். அந்த நீதியைப் பெற்றுக் கொடுப்பதற்கான செயற்பாட்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அதன் தலைமையும் தொடர்ந்து செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது என்றார். (வ-101)

## மைத்திரியின் யோசனையை முதலமைச்சர்கள் நிராகரிப்பு

*சகல மாகாண சபைகளுக்கும் ஒரே நாளில் தேர்தல் நடத்தும்*

கொழும்பு, ஏப். 3
அனைத்து மாகாண சபைகளுக்குமான தேர்தலை ஒரே நாளில் நடத்துவது தொடர்பாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன முன்வைத்த யோசனையை, மாகாண முதலமைச்சர்கள் நிராகரித்துள்ளனர்.
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முதலமைச்சர்களுக்கும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையேயான முக்கிய சந்திப்பு கடந்த திங்கட் கிழமை இரவு இடம்பெற்றது. இந்தச் சந்திப்பில் அனைத்து மாகாண சபைகளுக்குமான தேர்தலை ஒரே நாளில் நடத்தும் யோசனையை அரச தலைவர் மைத்திரி முன்வைத்தார்.
இந்தத் திட்டம், சில மாகாண சபைகளை முன்கூட்டியே கலைக்கும் உள்நோக்கம் கொண்டதாகும். இந்த ஆண்டு செப்ரெம்பர் மாதத்துடன், சப்ரகமுவ, வடமத்திய, கிழக்கு மாகாண சபைகளுக்கான பதவிக்காலம் முடிவடையவுள்ளன. மத்திய, மற்றும் வடக்கு மாகாண சபைகளின் பதவிக் காலம் 2018ஆம் ஆண்டு செப்ரெம்பரில் முடிவடையவுள்ளது. மேல் மாகாண சபையின் பதவிக்காலம் 2019ஆம் ஆண்டு ஏப்ரலிலும், ஊவா, மற்றும் தென் மாகாண சபைகளின் பதவிக்காலம் 2019ஆம் ஆண்டு செப்ரெம்பரிலும் முடிவடையவுள்ளன.
எல்லா மாகாண சபைகளுக்கும் ஒரே நாளில் தேர்தலை நடத்துவதாயின், சில மாகாண சபைகளை முன்கூட்டியே கலைக்க வேண்டும் அல்லது பதவிக்காலம் முடியும் மாகாண சபைகளில் ஆளுநர் ஆட்சியை நடைமுறைப்படுத்த வேண்டும். எனவேதான் முன்கூட்டியே சில மாகாண சபைகளைக் கலைத்து தேர்தலை நடத்தும் யோசனைக்கு முதலமைச்சர்கள் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர். மாகாணசபையை முன்கூட்டியே கலைப்பதற்கு முதலமைச்சரின் அனுமதி பெறப்படுவது அவசியமாகும். (வ-5)

## கடலில் மூழ்கி 2 மாணவர்கள் பரிதாபச் சாவு

**பரீட்சை சித்தியடைந்த கொண்டாட்டத்தில்**

*தப்பிய மாணவன் விடயத்தை மூடி மறைத்தாராம்*

கொழும்பு, ஏப். 3
தங்காலை, சீனிமோதர கடலில் கடந்த வியாழக்கிழமை நீராடச் சென்ற மூன்று மாணவர்களில் இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்று தங்காலை தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.
ஜி.சீ.ஈ சாதாராண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் கடந்த வாரம் வெளியாகியிருந்தன. இதில் சிறப்பாகச் சித்தியடைந்த இவர்கள் மூவரும் வெற்றியைக் கொண்டாடுவதற்காக சீனிமோதர கடலில் நீராடச் சென்றிருந்தபோதே இந்தச் சோகச்சம்பவம் நிகழ்ந்துள்ளது.
பெலியத்த, பள்ளியகஹாவத்த பிரதேச வாசியான ஜனித் இசான் லக்சித (வயது 17) மற்றும் தங்காலை பொலம்மாருவ பிரதேச வாசியான சமுதித தில்சான் (வயது 17) ஆகிய இரு மாணவர்களுமே உயிரிழந்துள்ளனர்.
இவர்களுடன் சென்ற மூன்றாவது மாணவன் தெய்வாதீனமாகத் தப்பிப் பிழைத்த போதிலும் இந்தச் சம்பவத்தை வெளியில் சொல்ல அச்சப்பட்டு தனது பிரத்தியேக வகுப்புக்குச் சென்றுவிட்டார். உயிரிழந்த இருவரினதும் சடலங்கள் 25 மணித்தியாலங்களின் பின்னர் கடந்த 31ஆம் திகதி பகல் ஒரு மணியளவில் குடாவெல்ல கடற்கரையில் ஒதுங்கியிருந்த நிலையில் மீட்கப்பட்டன.
தப்பிப் பிழைத்த திசான் சந்துருவன் பொலிஸ் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட பின் அவரது வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த உயிரிழந்தவர்களின் புத்தகப் பைகள் மீட்கப்பட்டன. இந்தச் சம்பவம் தொடர்பில் தங்காலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (வ-5)

## மேல் நீதிமன்ற நீதிபதி இராமநாதன் கண்ணனை பதவி நீக்கவேண்டும்

*நீதிமன்ற சேவைகள் சம்மேளனம் தீர்மானம்*

கொழும்பு, ஏப். 3
மேல் நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்ட சட்டத்தரணிகள் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட பிரதிநிதி இராமநாதன் கண்ணனை அந்தப் பதவியிலிருந்து நீக்கவேண்டும் என்று வலியுறுத்தி நீதிமன்ற சேவைகள் சம்மேளனம் 5 தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது.
இந்தத் தீரமானங்களை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு அனுப்பிவைக்கவும் சம்மேளனம் தீர்மானித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. மேல் நீதிமன்ற நீதிபதியாக இராமநாதன் கண்ணன் நியமிக்கப்பட்டமை தொடர்பாக நீதிமன்ற சேவைகள் சம்மேளனம் கொழும்பில் நேற்றுமுன்தினம் சிறப்புக் கலந்துரையாடலொன்றை நடத்தியது. இதன் போது இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
இராமநாதன் கண்ணனின் நியமனமானது சட்ட வலுவற்றது என்று நீதிமன்ற சேவைகள் சம்மேளனம் அண்மையில் தெரிவித்திருந்தது. அந்த நியமனத்துக்கு எதிர்ப்பையும் அது வெளியிட்டிருந்தது. (வ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





முரசுமோட்டை றோமன் கத்தோலிக்க மிசன் பாடசாலையின் வருடாந்தப் பரிசளிப்பு விழா நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கல்வி ராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஸ்ணன், நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், சி.சிறிதரன் ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களுக்குப் பரிசில்களை வழங்கி வைத்தனர். அமைச்சரும் இதன் போது கௌரவிக்கப்பட்டார். (ஐ)

# 33 நாள்கள் கடந்து தொடர்கின்றது கேப்பாப்பிலவு அறவழிப் போராட்டம்



முல்லைத்தீவு, ஏப்.3

இராணுவம் கையகப்படுத்தியுள்ள காணிகளை விடுவிக்க வற்புறுத்திக் கேப்பாபிலவு மக்கள் நடத்தும் போராட்டம்நேற்று33ஆவது நாளாகவும் தொடர்ந்தது.

காணிகள் விடுவிக்கப்படும் என்று மீள்குடியேற்ற அமைச்சு அறிவித்துள்ள போதும், தமது காணிகள் விடுவிக்கப்பட்டாலே போராட்டத்தைக் கைவிடுவோம் என்று போராட்டம் நடத்தும் மக்கள் உறுதியுடன் உள்ளனர்.

கேப்பாபிலவில் பொதுமக்களுக்குச் சொந்தமான 482 ஏக்கர் காணிகளை இராணுவம் கையகப்படுத்தியுள்ளது. அதில் முல்லைத்தீவு மாவட்ட பாதுகாப்புப் படைத் தலைமைக் காரியாலயம் அமைக்கப்பட்டுள்ளது.

அந்தக் காணிகளுக்கு உரிமையாளர்களான 138 குடும்பங்கள் தமது காணிகளை விட்டு இராணுவத்தினர் வெளியேற வேண்டும் என்று வற்புறுத்தி மார்ச் மாதம் முதலாம் ஆம் திகதி முதல் தொடர் அறவழிப் போராட்டம்நடத்துகின்றனர்.

பொதுமக்களின் தொடர் போராட்டத்தை அடுத்து எதிர்வரும் மே மாதம் 15ஆம் திகதியளவில் காணிகள் விடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. எனினும் தமது காணிகளில் கால்பதிக்கும்வரை தாம் போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை என்று கூறியுள்ளனர்.

கேப்பாபிலவு, நந்திக்கடல் பகுதியில் உள்ள இராணுவ நிலைகள் பலப்படுத்தப்படுகின்றன என்றும், பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் எவரும் இதுவரை தம்மைச் சந்தித்து முழுமையான விளக்கத்தை வழங்கவில்லை என்றும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் ஏக்கத்துடன் தெரிவித்தனர். (ற-7)

# வெளிவாரி மருந்தாளர் கற்கை நிலையம் வடக்கில் விரைவில் நிறுவ நடவடிக்கை

## மாகாண சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 3

"வடக்கு மாகாணத்தில் மருந்தாளர்களுக்கான வெளிவாரி கற்பித்தல் நிலையம் ஒன்று கொழும்பு சுகாதார அமைச்சுடன் ஆலோசித்து அமைக்கப்படும். இனி வரும் காலங்களில் வடக்கு மாகாணத்தில் புதிதாக தனியார் மருந்தகங்களுக்கு அனுமதிகளை வழங்குவதில்லை"

இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் பா. சத்தியலிங்கம் தெரிவித்தார்.

வடக்கு மாகாண அகில இலங்கை தனியார் மருந்தக உரிமையாளர் சங்கத்துக்கும் கொழும்பு சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவுக்கும் இடையே யாழ்ப்பாணம் கிரீன் கிராஸ் விடுதியில் நடைபெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தில் அநேகமான தனியார் மருந்தகங்களில் நன்கு பயிற்றுவிக்கப்பட்ட மருந்தாளர்கள் பணியில் இல்லை. இதனால் தனியார் மருந்தகங்களில் சேவையில் நிற்பவர்கள் தாங்கள் மருத்துவர்களாகச் செயற்படுகின்ற நிலைமையும் காணக்கூடியதாக இருக்கின்றது. எனவே இந்தப் பிரச்சனைகளை போக்குவதற்கு எமது மாகாணத்துக்கு என வெளிவாரியாக ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் பயிலக்கூடிய வகையில் மருந்தாளர் பயிற்சி நெறிக்கான பயிற்சி நிலையம் ஒன்றை புதிதாக அமைப்பது தொடர்பாக கொழும்பு சுகாதாரஅமைச்சுடன்ஆலோசனை செய்து வருகின்றேன்.

அத்துடன் இனிவரும் காலங்களில் வடக்கு மாகாணத்தில் புதிதாக தனியார் மருந்தகங்களுக்கு அனுமதிகளை வழங்க கூடாது என்பது தொடர்பாகவும் ஆராய்ந்து வருகின்றோம்.

போரால் பாதிக்கப்பட்ட எங்கள் மக்களுக்குமேலும்நோய்களால் பாதிக்கும் வகையில் நாம் செயற்படக் கூடாது. மாறாக அவர்களுக்கு ஏற்படும் நோய்களை போக்கும் வகையிலேயே செயற்பட வேண்டும். பொதுமக்கள் மீள்குடியேறும் பகுதிகளில் நிலமைகளை ஆராய்ந்து அவ்வாறான இடங்களுக்கு மட்டும் புதிய அனுமதிகளை வழங்குவது தொடர்பாக முடிவு எடுக்கப்படும்.

தனியார் மருந்தகங்களுக்கு அனுமதி வழங்கப்படும் போதே அந்த மருந்தகங்களில் நன்கு பயிற்றுவிக்கப்பட்ட ஒரு மருந்தாளராவது இருக்க வேண்டும் என்பது கட்டாயமாகும். ஆனால் எமது பிரதேச நிலைமைகளை அறிந்து நாம் இன்றுவரை சட்ட நடவடிக்கைகளுக்கு செல்லவில்லை.எனினும் நோயாளர்களை பாதிக்கும் வகையில் செயற்படும் மருந்தகங்களுக்கு எதிராக பாரபட்சமின்றி நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

இந்த நிகழ்வில் மருந்தக உரிமையாளர்களால் கொழும்பு அமைச்சருக்கு நினைவுச் சின்னங்களும் வழங்கப்பட்டன. நிகழ்வில் வடக்கு மாகாண தனியார் மருந்தக உரிமையாளர்கள், கொழும்பு சுகாதார அமைச்சின் அதிகாரிகள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (வ-8)

# கபடிப்போட்டியின்நிறைவில் ரசிகர்களிடையே கைகலப்பு

கபடிப் போட்டியின் பின்னர் ஏற்பட்ட சொற்போர் கைகலப்பில் முடிவடைந்தது. இந்தச்சம்பவம்நேற்று வடமராட்சி திக்கம் மைதானத்தில் நடைபெற்றது. சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது :

திக்கம் இளைஞர் விளையாட்டுகழகம் வடக்கு மாகாண ரீதியிலான கபடிச் சுற்றுப் போட்டியை நடாத்தி வருகின்றது. இதன் காலிறுதியாட்டம் நேற்று குறித்த கழக மைதானத்தில் மின்னொளியில் நடைபெற்றது. இதில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கிளிநொச்சி உழவர் ஒன்றியம் அணி மோதியது. இரு அணிகளும் சம பலத்துடன் மோதிய போதும் ஆட்ட நேர முடிவில் உழவர் ஒன்றியம் அணி வெற்றி பெற்றது. அதன் பின்னர் இரு அணிகளும் வெற்றி தோல்வியை சமமாக மதிக்கும் தன்மையில் கைலாகு கொடுத்தனர். அப்போது பார்வையாளர்களின் சீண்டலால் ஆத்திரமுற்ற ஏனைய பார்வையாளர்களுக்கும் இடையே கைகலப்பு தொடங்கியது.

இதனால் மோட்டார் சைக்கிள் தலைக்கவசங்களாலும் அருகில் இருந்த பொல்லுகளாலும் தாக்குதல் நடத்தினர். இதில் இருவர் தலையில் காயமடைந்ததாக தெரிவிக்கப்பட்டது. அதன் பின்னர் இரு அணிகளும் அந்த இடத்தை விட்டு அகன்று சென்றன.

இதன் தொடர்ச்சியாக நேற்று இரவு பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் குமார் பொன்னம்பலம் ஞாபகார்த்த வெற்றி கிண்ணத்துக்கான கால்பந்தாட்டப் போட்டி நடைபெற்றது. இதில் தாக்கப்பட்டவர்களின் ஆதரவாளர்கள் சிலர் போட்டி நடைபெற ஏற்பாடாகிய போது வாள் மற்றும் பொல்லுகள் கொண்டு வந்து மைதானத்தில் வாய் தர்க்கத்தில் ஈடுபட்டனர். இதனால் சுமார் அரை மணித்தியாலங்களுக்கு மேலாக பதற்ற நிலை ஏற்பட்டது. சமரசத்தின் பின்னர் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற போட்டி தொடர்ந்தும் நடைபெற்றது. (வ-422)

# விபத்துக்களால் இருவர் படுகாயம்

தென்மராட்சி, ஏப். 3

தென்மராட்சியில் இருவேறு இடங்களில் இடம்பெற்ற சாலை விபத்துக்களில் சிக்கி படுகாயமடைந்த இருவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். அவர்கள் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

இந்தச் சம்பவங்கள் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றன என்று விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டது.

கொடிகாமம், கச்சாய் சாலையைச் சேர்ந்த சின்னத்துரை லோகநாதன் (வயது - 51) என்பவர் வாகனம் மோதி சில்லு காலில் ஏறியதில் கால் சிதைவடைந்த நிலையிலும் பளை பெரிய பளையைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை ஜதீஸ்வரன் (வயது -32) என்பவர் வாகனத்துடன் மோதுண்டு காயங்களுக்கு இலக்கான நிலையிலும் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். அவர்கள் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ - 9)

# ரயில் கடவைக் காவலரை தாக்கிய முதியவர் கைது

யாழ்ப்பாணம்,ஏப்.3

தெல்லிப்பழைப் பகுதியில் தொடருந்துக் கடவைக் காவலாளியைத் தாக்கிவிட்டு தப்பிச்சென்ற முதியவர் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டார் என்று தெல்லிப்பளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

தெல்லிப்பழை வைத்தியசாலை சாலையில் நேற்று முன்தினம்பகல்வேளை11.30 மணியளவில் தொடருந்து வருவாத கிடைத்த உத்தரவையடுத்து கடவை காவலாளி சமிக்கையை ஒலிக்கவிட்டு பாதையை தடை செய்துள்ளார் . அந்த நேரம் அங்கே வருகை தந்த 76 வயது ஓய்வூதியர் ஒருவர் தொடருந்து அருகில் வரவில்லை எனக் காரணம் கூறி கடவையைக் கடக்க முயன்றுள்ளார்.

இதனைஅவதானித்தகடவை காவலாளி குறித்த முதியவரைத் தடுத்துள்ளார். எனினும் காவலாளியின் உத்தரவை மதியாத முதியவர் காவலாளியைத்தாக்கிவிட்டு கடவையைக் கடந்து சென்றுள்ளார். இதன் காரணமாக அச்சமடைந்த காவலாளி குறித்த முதியவர் பயணம் செய்த மோட்டார் சைக்கிள் இலக்கத்தை குறித்தெடுத்து மேற்படி விடயம் தொடர்பில் தெல்லிப்பழை பொலிஸ்நிலையத்தில்முறையிட்டார்.

காவலாளியின் முறைப்பாட்டையடுத்து மோட்டார் சைக்கிளின் இலக்கத்தின் உதவியுடன் உடுவில் பகுதியைச் சேர்ந்த 76 வயது ஓய்வூதியரை நேற்றைய தினம் தெல்லிப்பழைப் பொலிஸார் கைது செய்தனர். இவ்வாறு கைது செய்யப்பட்டவர் இன்றைய தினம் மல்லாகம் நீதிவான் மன்றில் முற்படுத்தப்படுவார்" என்று பொலிஸார் தெரிவித்தனர். (வ -101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணம் பறிக்க முயற்சி; மற்றொருவரும் கைது

யாழ்ப்பாணம், ஏப். 3

பருத்தித்துறைப் பகுதியில் வெளி நாட்டிலிருந்து ஊருக்கு வந்தவரிடம் 4 பேர் கொண்ட கும்பல் ஒன்று அச்சுறுத்திப் பணம் பெற முயற்சித்த குற்றச்சாட்டில் 2 பேர் தேடப்பட்டு வந்தனர். அவர்களில் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டார் என்று பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த வாரம் கொடுக்கப்பட்ட முறைப்பாட்டின் பிரகாரம் 4 பேரில் கடந்த வியாழக்கிழமை 2 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் இருவரும் நேற்று பருத்தித்துறை பதில் நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டனர். சந்தேக நபர்களை எதிர்வரும் 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதிவான் உத்தரவிட்டார்.

சந்தேக நபர்களை தேடிச் சென்ற போது பொலிஸாருக்கு இடையூறு விளைவித்ததாக குற்றச்சாட்டப்பட்ட நபருக்கு உரிய நடவடிக்கை எடுக்க நீதிவானால் பொலி ஸாருக்கு அனுமதி வழங்கப்பட்டது. (வ-10-26)

## நெஞ்சுறுத்தும் நிஜங்கள் நூல் வெளியீடு நாளை

தென்மராட்சி, ஏப். 3

வயலூரான் எழுதிய ' நெஞ்சுறுத்தும் நிஜங்கள் ' என்ற கவிதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை பி.ப.3.30 மணிக்கு மட்டுவில் கிழக்கு மெய்கண்டான் வீதி மாதுமை கல்வி நிலைய மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

மாதுமை கல்வி நிலைய இயக்குநர் சி.சிவகாந்தன் தலைமையில் நடைபெறும்நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக ஓய்வுநிலை அதிபர் க.அருந்தவபாலனும் சிறப்பு விருந்தினராக தென்மராட்சி உதவிப் பிரதேச செயலர் செல்வி ரஞ்சனா நவரத்தினமும் கலந்து கொள்வர். நூல் வெளியீட்டுரையை தென்மராட்சி பிரதேச செயலக கலாசார அலுவலர் சி.சிவமுகுந்தனும் நூல் ஆய்வுரையினை பருத்தித்துறை பிரதேச செயலர் கவிஞர் த.ஜெயசீலனும் நிகழ்த்துவர்.

நூலின் முதல் பிரதியை சாவகச்சேரி திருக்கணித பதிப்பக முகாமையாளர் கா.சிவஞானசுந்தரம் பெற்றுக் கொள்வார் என்று தெரிவிக்கப்பட்டது.

(வ-9)

# வடக்குப் போராட்டங்களுக்கு உரிய தீர்வைத் தரவேண்டும்

*அரச தலைவருக்கு முதலமைச்சர் விக்கி கடிதம்*

யாழ்ப்பாணம், ஏப். 3

காணாமல் ஆக்கப்பட்டவர்கள், காணி விடுவிப்புப் போராட்டம் மற்றும் வேலையற்ற பட்டதாரிகளின் போராட்டங்கள் தொடர்பில் அரச தலைவருக்கு எடுத்துக்கூறியுள்ள வடக்கு மாகாண முதலமைச்சர், அவருக்கு சில பரிந்துரைகளையும் முன் வைத்துள்ளார்.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு அனுப்பிய கடிதம்தொடர்பில்வடக்குமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்அனுப்பிவைத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

**காணாமற்போனவர்கள்**

காணாமற்போனவர்களின் தொடர்ச்சியான போராட்டம் கிளிநொச்சியில் 49 நாட்களாகவும், வவுனியாவில் 38 நாட்களாகவும்முல்லைத்தீவில் 26 நாட்களாகவும்வடமராட்சியில் 19 நாட்களாகவும் திருகோணமலையில் 29 நாட்களாகவும் நடைபெற்று வருகின்றது. இவர்களில் பலரும் அறுபது வயதுக்கு மேற்பட்டவர்கள். அவர்கள் நோயாளிகள். வெய்யிலிலும் குளிரிலும் இரவு பகலாக தற்காலிகக் கொட்டகைகளில் இருந்தவாறு போராடுகின்றார்கள். அவர்கள் தங்களுடைய உறவுகள் உயிருடன் இருக்கின்றார்களா அல்லது இறந்து விட்டார்களா என அறிய விரும்புகின்றார்கள்.

தலைமை அமைச்சர் உட்பட பலரும் மாறுபட்ட கருத்துக்களைத் தெரிவிக்கின்றார்கள். இறந்திருக்கக் கூடும் என்று தலைமை அமைச்சர் தெரிவிக்கின்றார். ஆனால் அவர்கள் கைது செய்யப்பட்டு பல வருடங்களின் பின்னர் எடுக்கப்பட்ட ஒளிப்படங்களை ஆதாரமாகக் காட்டி அவர்கள் இன்னமும் உயிருடன் இருக்கின்றார்கள் என்று உறவினர்கள் கூறுகின்றனர்.

உதாரணமாக தேர்தல் காலத்தில் எடுத்த படம் ஒன்றில் தங்களுக்கு முன்னால் இடது பக்கத்தில் தனது மகள் இருப்பதாக ஒரு தாய் காட்டுகின்றார். அவருடைய பெயர் செல்வி.ஜெயவதனா. இன்னும் இருவர் அடையாளம் காட்டப்பட்டனர். இவர்களைக் கண்டு பிடிப்பது தங்களுக்குக் கஷ்டமாக இருக்காது. இதுபோல பல சான்றுகள் கைவசம் வைத்திருக்கின்றார்கள். எனவே குறைந்தளவுக்கு இவர்களுக்காக பின்வருவனவற்றையாது தங்களால் செய்ய முடியும் என எதிர்பார்க்கின்றேன்.

✦ காணாமற்போனோர் தொடர்பான 'பரணகம' அறிக்கையை இதுவரை வெளியிடாவிட்டால் வெளியிடல்.

✦ காணாமற்போனவர்களில் பத்திரிகைகளில் இனங்காட்டப்பட்டவர்களை கண்டுபிடிப்பதற்கான விசாரணைக்கு உத்தரவிடல்.

✦ நீதிமன்றத்துக்கு முன் நிறுத்தாது இதுவரை தடுத்து வைக்கப்பட்வர்களின் விவரத்தை வெளியிடல்.

✦ தமது அன்புக்குரியவர்கள் அடையாளங் காணப்பட்டால் அவர்கள் அதன்பின்பு காணாமற்செய்யப்படக்கூடும் என்றபயம் உறவினர்களிடம் உண்டு. அதனைத் தாங்கள் கண்காணிப்பீர்கள் என நம்புகின்றேன்.

✦ காணமற்போனவர்களுக்கான அலுவலகத்தை உடன்இயங்கச் செய்தல்.

✦ காணாமற்போனோர் என உறுதிப்படுத்தப்பட்ட பின்பு பொருத்தமான சான்றிதழ்களை வழங்கல்.

**காணிகளை விடுவித்தல்**

போரின் பின் எட்டு வருடங்களாகியும் மக்களின் காணிகள் விடுவிக்கப்பட வில்லை. இராணுவத்தினருடைய பிரசன்னம் இனியும்தேவையற்றபடியால் அவர்கள் வசமுள்ள காணிகளை விடுவிக்கலாம். புலனாய்வு வேலைகளை பொலிஸார் மேற்கொள்ள முடியும். மிகுதியாக மயிலிட்டியிலுள்ள போர் தளபாடங்களை முன்னர் ஒரு முறை செய்தது போல் அழிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். இவைதொடர்பாகபின்வரும் ஆலோசனைகளைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

✦ [illegible]

முள்ள காணிகளின் விவரங்களை வெளியிடல்.

✦ மக்கள் செறிந்து வாழும் இடங்களிலிருந்து இராணுவத்தினரை வெளியேற்றல். சிங்கள மக்களின் இடங்களில் அவர்களை வைத்திருப்பின் அவர்கள் எதிர்க்க மாட்டார்கள். ஏனெனில் அவர்கள் அவர்களின்உறவினர்கள். ஆனால் தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களில் பல்வேறு பிரச்சினைகள் உருவாகின்றன.

✦ கூகிள் வரைபடங்கள் மூலம் காட்டுப் பகுதிகளில் பல்வேறு நடவடிக்கைகள் நடத்தப்படுவதாக அறிய வருகின்றது. பெறுமதி மிக்க மரங்கள் கடத்தப்பட்டுள்ளதாக வெளியிடப்பட்டுள்ளன. எங்களுடைய வளங்கள் சூறையாடப்பட்டு வருகின்றன.

✦ பெண்களைத் தலைமையாகக் கொண்ட குடும்பங்கள் இராணுவ முகாம்கள் அருகில் இருப்பதால் பல பிரச்னைகளைஎதிர்நோக்குகின்றனர்.

**வேலையற்ற பட்டதாரிகள்**

வேலையற்ற பட்டதாரிகள் ஒரு மாதத்துக்கும் மேலாக தொடர்ந்து கவனவீர்ப்பு போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றார்கள். அவர்களுக்கு உரிய வேலை வாய்ப்பை வழங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். வேலையற்ற பட்டதாரிகள் தொடர்பாக பின்வரும் ஆலோசனைகளைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

✦ வடக்கு கிழக்கிலுள்ள கொழும்பு மற்றும் மாகாண அரச வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கைகள் எடுத்தல்.

✦ பொலிஸாரின் ஏஎஸ்பிதரத்தில் நியமனங்களை விரும்புகின்றபட்டதாரிகளுக்கு அந்தப் பதவிகளைவழங்கஉதவுதல்.

✦ இதேபோன்றுவேறு அரச நிறுவனங்களிலும் வேலைகள் வழங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

✦ தனியார் துறையில் பொருத்தமான வேலைகளை வழங்கல்.

✦ சுற்றுலாத் துறையில் இவர்களுக்கு வேலைகளை வழங்கநடவடிக்கைஎடுத்தல்.

இவை யாவற்றையும் தங்கள் கவனிப்புக்கு கொண்டு வரும் அதே நேரம் விரைவில் அவர்கள் சார்பாக நல்ல நடவடிக்கைகளை எடுக்க முன்வருவீர்கள் என எதிர்பார்க்கின்றேன் - என்றுள்ளது. (வ-4)



சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் 60ஆவது ஆண்டை முன்னிட்டு கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று குருதிக் கொடை நிகழ்வு கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது. கல்லூரி பழைய மாணவர்கள் 'பிறர் உயிர் காக்க எம் உதிரம் ஈய்வோம்' என்ற திட்டத்தில் வழங்கிய குருதியை யாழ்.போதனா வைத்தியசாலை குருதிக் காப்பகத்தினர் பெற்றுக் கொண்டனர். (வ-9)

## சங்கானை பல நோக்குக் கூட்டுறவு சங்கத்தின் 22 கிளைகள் மூடல்

யாழ்ப்பாணம், ஏப். 3

சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 33 கிளைகள் இயங்கி வந்த நிலையில் அவற்றுள் 22 கிளைகள் மூடப்பட்டுள்ளன. தற்போது 11 கிளைகள் மட்டுமே இயங்கு நிலையில் உள்ளதாக பொதுமக்கள் தெரிவித்தனர்.

சங்கானைப் பிரதேசத்தில் சங்கங்களின் கிளைகள் குறைவடைந்த மையால் தனியார் கடைகளில் பொருள்களை கொள்வனவு செய்ய வேண்டிய கட்டாய நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

"சங்கானைப் பிரதேசம் யாழ்ப்பாண மாவட்டத்தில் [illegible]பி விருத்தி அடைந்து வரும் பிரதேசமாகும். வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட குடும்பங்கள் பல உள்ளனர். அவர்கள் தங்களின் வருமானத்துக்கு ஏற்ற வகையில் தங்களின் அன்றாடத் தேவைகளுக்கு சங்கக் கடைகளிலேயே பொருள்களை கொள்வனவு செய்து வாழ்ந்து வருகின்றனர். எனவே இருக்கின்ற கிளைகளையாவது சீராக நடத்தி மக்களின் தேவைகளுக்காக சங்கக்கடைகள் இயங்க வேண்டும்" என்று அந்தப் பிரதேச வாசி ஒருவர் தெரிவித்தார்.

"சங்கானை கூட்டுறவுச் சங்கம் ஆரம்பகாலத்தில் 33 கிளைகளு டன் இயங்கியது. பின்னர் ஒரு சில கிளைகள் மூடப்பட்டன. 2010ஆம் ஆண்டு வரை 27 கிளைகளுடன் இயங்கிக் கொண்டிருந்தது. இந்த சங்கத்தின் தலைவராக நான் கடைமையேற்று ஒரு வருட காலப்பகுதி ஆகின்றது. பதவி ஏற்கும் போதே 11 கிளைகள்தான் இயங்கிக் கொண்டிருக்கின்றன. கடந்த 6 வருடங்களாக சங்கத்தின் கணக்காய்வுகள் முடிவுறுத்தப் படாமல் இருந்தது. அதனை கூட்டுறவு திணைக்கள அதிகாரிகளும் இது தொடர்பாக உரிய கவனம் செலுத்தாமல் இருந்துள்ளனர். தற்பொழுது கூட்டுறவு அபிவிருத்தி அலுவலக உத்தியோகத்தர்களின் கண்காணிப்புடன் கடந்த 3 ஆண்டுகளுக்கான கணக்காய்வுகள் நிறைவுறுத்தப்பட்டுள்ளன. சங்கானை பல நோக்கு கூட்டுறவு சங்கத்தின் முன்னாள் பொது முகாமையாளர் நிர்வாகத்தை சீரற்ற விதத்தில் கையாண்டார். அவருக்கு தற்பொழுது பணித்தடையும் விதிக்கப்பட்டுள்ளது" என்று சங்கத்தின் தலைவர் தெரிவித்தார்.

"சங்கானை பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் ஆரம்பகாலத்தில் 33 கிளைகளுடன் இயங்கினாலும் எனது காலப் பகுதியில் 27 கிளைகளுட னேயே இயங்கிக் கொண்டிருந்தது. எமது சங்கம் பெரியளவிலான நட்டத்தில் இயங்கியமையால் சங்கத்தில் பணியாற்றிய உத்தியோகத்தர்களுக்கு 6 மாதங்களாக சம்பள கொடுப்பனவை வழங்க முடியாமலிருந்தது. இதனால் பல உத்தியோகத்தர்கள் சங்கத்திலிருந்து விலகினார்கள். இதனாலேயே கிளைகளை குறைக்க வேண்டிய நிலமை ஏற்பட்டது. அத்துடன் என் மீது 37 குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. அவற்றின் பிரகாரம் எனக்கு தற்பொழுது பணித்தடை வழங்கப்பட்டுள்ளது" என்று முன்னாள் பொது முகாமையாளர் தெரிவித்தார். அத்துடன் தனக்கு வழங்கப்பட்ட பணித்தடை முறையற்ற விதத்தில் வழங்கப்பட்டுள்ளதாக கூட்டுறவு உதவி ஆணையாளர் சங்கானை பல நோக்கு கூட்டுறவு சங்கத்துக்கு கடிதம் ஒன்றையும் அனுப்பியுள்ளார் எனவும் அவர் கூறினார். (வ-8-29)

### மரண அறிவித்தல்கள்

## முத்துலிங்கம் சுப்பிரமணியம்



கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், ஏழாலை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துலிங்கம் சுப்பிரமணியம் நேற்று (02.04.2017) ஞாயிற்றுக்கிழமை மரணமடைந்துவிட்டார்.

அன்னார் கமலாவின் அன்புக் கணவரும் மோகன், முகுந்தன், முரளி, அனுஷா ஆகியோரின் அன்புத்தந்தையும் சுமதி, தர்ஷினி, ரம்யா, ராஜ் ஆகியோரின் அன்பு மாமனாரும் சௌமி, நியூஷிகா, கனிஷ்டிகா, அஸ்வின், மிதுஷன், அக்ஷயா, தேனு ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.04.2017) திங்கட் கிழமை பி.ப. 4 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஏழாலை உசத்தியோடை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஏழாலை மேற்கு.**
**077 5722 560**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## செல்வி சுகிர்தலக்சுமி சபாநாயகம்

**(ஓய்வுபெற்ற கணித ஆசிரியர் மட்டுவில் ம.வி., வட்டு. இந்துக் கல்லூரி, கிளி. ம.வி.)**

வட்டு. தென்மேற்கைச் சேர்ந்த செல்வி சுகிர்தலக்சுமி சபாநாயகம் நேற்று (2.4.2017) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியை பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

**வட்டு. தென் மேற்கு**
**வட்டுக்கோட்டை**

**தகவல்:**
**ஜே. ஆனந்தி**
**021 2250426**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள் சுழற்சி திண்மக் கழிவுகளை சேகரிக்க 3 புதிய நிலையங்கள்

## யாழ்ப்பாண மாநகர சபை அமைக்கிறது

யாழ்ப்பாணம், ஏப். 3
யாழ்ப்பாண மாநகரப் பகுதியில் மீள் சுழற்சிக்கான திண்மக் கழிவுகளைச்சேகரிப்பதற்கான மூன்று நிலையங்கள் அமைக்கப்பட்டு விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

நல்லூர், பாஷையூர் மற்றும் முதன்மைச் சாலை மடத்தடி குடிதண்ணீர்த் தாங்கிப் பகுதியில் இந்த மீள் சுழற்சிக்கான திண்மக் கழிவுகளைச் சேகரிக்கும் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் பழுதடைந்த இலத்திரனியல் மற்றும் கண்ணாடிப் பொருள்கள் மட்டுமே சேகரிக்கப்படும் என்று கூறப்பட்டது.

"புதிதாக அமைக்கப்படும் மீள் சுழற்சி நிலையங்களை அண்டியுள்ள குடியிருப்பாளர்கள் தமது வீட்டுச் சுற்றாடல்களில் உள்ள பழுதடைந்த இலத்திரனியல் பொருள்களை அந்த நிலையங்களில் ஒப்படைக்க வேண்டும். பழுதடைந்த இலத்திரனியல் பொருள்கள் மற்றும் கண்ணாடிப் பொருள்களைத் திண்மக் கழிவுகளுடன் சேர்த்துச் சேகரிப்பதைத் தவிர்க்க வேண்டும்" என்று மாநகர ஆணையாளர் பொ.வாகீசன் கேட்டுள்ளார். (வ-17)

# கோப்பாய் கல்விக் கோட்டத்தில் இன்று புத்தாண்டு விழா

யாழ்ப்பாணம், ஏப். 3
சித்திரைப் புத்தாண்டுக் கொண்டாட்டம் கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயத்தில் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும் என்று பாடசாலை அதிபர் அறிவித்தார்.

"கோப்பாய் கல்விக் கோட்ட மட்டத்தில் இந்தக் கொண்டாட்டம் நடைபெறுகிறது. கோட்டக் கல்விப் பணிப்பாளர் ந.சிவனேசன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் ந.தெய்வேந்திரராஜாவும், சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாண வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான கோ.வரதராஜமூர்த்தி, இ.இரவீந்திரநாதன், அ.அகிலதாஸ், சி.மாணிக்கராஜா ஆகியோர் கலந்து கொள்வர்" என்று அவர் மேலும் தெரிவித்தார். (வ-10)

# பொலிஸாருக்கு எதிராக முறையிட வடக்கில் விழிப்புணர்வுவேண்டும்

## ஆணைக்குழுவின் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 3
"பொலிஸாரின் மீறல்கள் தொடர்பில் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்ய முடியும் என்று வடக்கு மாகாண மக்களுக்கு போதிய விழிப்புணர்வு இல்லை. அத்துடன் பொலிஸாருக்கு எதிராக முறைப்பாடு செய்வதற்கான அச்சமும் மக்களிடம் உள்ளது"

இவ்வாறு தேசியபொலிஸ் ஆணைக்குழுவின் வடக்கு மாகாண பணிப்பாளர் சு.சண்முகரட்ணம் தெரிவித்தார்.

"தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் வடக்கு மாகாண அலுவலகம் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ளது. பொலிஸாருக்கு எதிராக கடந்த முன்று மாதங்களில் 9 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. அதில் கடந்த மாதம் மட்டும் 6 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

கடந்த வருடம் மொத்தமாக 25 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன. பொலிஸாருக்கு எதிராக முறைப்பாடுகளை வழங்க வடக்கு மாகாண மக்கள் அஞ்சுகின்றனர். அத்துடன், பொலிஸாரின் மீறல்கள் தொடர்பில் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவில் முறையிடலாம் என்று மக்களுக்கு போதிய விழிப்புணர்வு காணப்படவில்லை.

இதன் காரணமாகவே முறைப்பாடுகளின் எண்ணிக்கை குறைவடைகின்றன. மக்கள் வழங்கும் முறைப்பாடுகளை பதியாமை, முறைப்பாடுகளுக்கு உரிய நடவடிக்கை எடுக்காமை , லஞ்சம் வாங்கும் நடவடிக்கைகள், பக்கச்சார்பாக செயற்படுதல், சந்தேக நபர்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளுதல், சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடுதல் , முறைகேடான வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொள்ளுதல் போன்றவற்றுக்கு எதிராக தேசிய பொலிஸ் ஆணைக்குழுவில் பயமின்றி முறையிட முடியும்" என்று ஆணைக்குழுவின் வடக்கு மாகாண பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (வ-ரி)

# யாழ். மாநகரில் மேலும் 10 சந்திகளுக்கு குவிவாடிகள்

யாழ்ப்பாண மாநகரப் பகுதியில் உள்ள சாலைகளின் மேலும் 10 குவிவாடிகள் பொருத்தப்படவுள்ளன. இதற்கான குவிவாடிகள் கொழும்பில் இருந்து எடுத்து வரப்பட்டுள்ளன என்று மாநகர ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்தார்.

"ஏற்கனவே மாநகரப் பிரதேசத்தில் 10 குவிவாடிகள் பொருத்தப்பட்டுள்ளன. முக்கிய சாலைகளின் சந்திகளுக்கு மேலும் 10 குவிவாடிகள் விரைவில் அமைக்கப்படவுள்ளன. இதில் கே.கே.எஸ்.சாலையில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிச் சந்தி, நாவலர் சாலை யில் பாப்பையா கடைச் சந்தி ஆகியவற்றின் திருப்பு முனைகளில் அமைக்கப்பட்ட குவிவுவாடி கள் சேதமாக்கப்பட்டுள்ளன.

சேதமாக்கப்பட்ட இந்தக் குவிவ வாடிகளுக்குப் பதிலாக புதிதாகக் குவிவாடிகள் பொருத்தப்படும்.

மாநகரப்பிரதேசத்தில் வாகனப் போக்குவரத்து வசதிக்காக பொருத்தப்படும் இந்தக் குவிவாடிகளை மக்கள் பாதுகாக்க வேண்டும்" என்றும் ஆணையாளர் கேட்டுள்ளார். (வ-17)

**சிறப்பு விலையில்**

**Desktop Pc & Laptop**

Laptop
HP AMD Quad-core 1.8Ghz , 500GB , 4GB Ram , 15.6" - 43,000/=
HP 15-ay 119TU 7thG,i3,4GB,1TB,15.6" - 66,500/=
HP 15-ay 119TX 7thG,i3,4GB,1TB,2GB,15.6" - 68,000/=
HP i5 7thG,4GB,1 TB,2GB VGA,15.6" - 83,000/=

Branded pc
HP Pro400G3TWR G3 i3,4GB,500GB,Dos - 73,500/=
HP Pro400G3TWR G3 i5,4GB,500GB,Dos - 85,000/=

**Printers**

Inject Printer
Hp 1112 Printer - 3600/=
Canon pixma ip2870s - 3500/=
Hp 2135 (Print/ Copy/ Scan) Printer - 10000/=
Hp 3835 (Print/ Copy/ Scan/Wireless) Printer 15,500/=
Brother DCP-300 (Print/ Copy/ Scan) Printer - 28,000/=

Laser 3 in 1 Printer
Samsung Xpress M2070 Printer - 20,500/=
Hp Laserjet M225dn Printer - 59,000/=

Laser Printer
Hp 1102 Printer - 15,300/=
Hp 1102w Printer - 17,900/=
Brother 1210w Printer - 12,500/=
Hp 201dw Wireless Printer - 36,000/=
Hp m402dn Printer - 46,000/=

Colour Laserjet Printer
HP CP1025 Printer - 41,000/=

Dotmatrix Printer
Epson LQ310 Dotmatrix Printer - 33,500/=

**CCTV Security Camera**

1 Mega pixel Camera - 3750/=
2 Mega pixel Camera - 4850/=
4CH DVR - 9500/=
8CH DVR - 14500/=
VR Camera - 14,950/=
Baby Monitering Camera 9,500/=
Wireless ip Camera KIT 64,500/=

**Home Theatre Speakers**

MiPAQ
USB FM micro SD
280v2 - 3,350/=
M100v2 - 3,600/=
BT-600- 5,600/=
Zumba 2945 - 7,750/=
Conga2485 - 6,250/=
Karokke 17,000/=
Condition apply
free Headphone (April 20 ம் திகதி வரை மட்டும்)

**MICRO PC SYSTEMS**

No - 218, Hospital Road , Jaffna.
E-mail - accountsjaffna@micropcsystems.com
Web : www.micropcsystems.com
071 035 6065 / 077 396 3280 / 021 222 5893

| | | |
|---|---|---|
| Jaffna : | 218, Hospital Road, Jaffna | - 021 222 5893 |
| Nelliyadi : | Pointpedro Road , Nelliyadi | - 021 226 2929 |
| Vavuniya : | 66b, 2nd Cross Street | - 024 222 1969 |

**காணி விற்பனைக்கு**

மன்னார் ஸ்ரேடியம் சந்தியில் இருந்து 25m தூரத்தில் மூர் வீதியில் அமைந்துள்ள 6.3 பேர்ச் காணியுடன் சிறிய வீடும் வளவும் விற்பனைக்குண்டு.

077 958 3343

**காணி விற்பனைக்கு**

கரணவாய் கிழக்கு, மணற்பாதி, ஜனசக்தி சனசமூக நிலையத்துக்கு அருகில் வட்டுவத்தை என்று அழைக்கப்படும் நிலப்பரப்பு 14 விஸ்தீரணமுள்ள காணி, நன்னீர் கிணற்றுடன், மாமரங்கள், தென்னை மரங்களுடன் வீடுகட்டுவதற்கு உகந்த வசதிகளுடன் விற்பனைக்குண்டு. தரகர்கள் தேவையில்லை.

தொடர்பு: 076 391 2670

**மணமகன் தேவை**

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1982 ஆம் ஆண்டு ரேவதி நட்சத்திரம், கிரகபாவம் 7, BA பட்டதாரி அரச சேவையில் பணிபுரியும் கிளிநொச்சி மாவட்டத்தை வதிவிடமாகக் கொண்ட மணமகளுக்கு தகுந்த வரனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

T.P: Vibar : 077 545 2892

**BIO CENTRE**

பிறவுண்வீதி, நீராவியடி பிள்ளையார்கோயில் முன்பாக
புதிய ஆரம்பம் 04.04.2017
2019 - உயிரியல் [illegible]
2018 - அலகு (1 முதல் 6)
2017 மற்றும் அலகு (7 முதல் 13)
Revision
வேறு நேர ஒழுங்குகளும் சாத்தியம்
தொடர்பு: 077 665 5290
பாடமாக்குவதால் பல்கலைக்கழகம்
Senior Lecturer
NARENTHIRAN (வளவாளர்)

**மணமகன் தேவை**

வயது 32, அழகான குடும்பப்பெண், நோர்வே குடியுரிமையுடைய கிறிஸ்தவம், எமது மகளுக்கு உறுதி மிக்க கிறிஸ்தவ, தொழில்சார் மணமகனை ஐரோப்பாவில் இருந்து தேடுகின்றோம்.

selvaratnam73@yahoo.com NORWAY
004791650650 (Phone + Viber)

உ
சிவமயம்

**கரைச்சி புளியம் பொக்கணை நாகதம்பிரான் ஆலய ஆண்டுற்சவ பொங்கல் விழா**

**09.04.2017 ஞாயிற்றுக்கிழமை**

தண்டல் சம்பந்தமான அறிவித்தல்

நாகதம்பிரான் ஆலய பொங்கல் விழாவை முன்னிட்டு 03.04.2017 திங்கட்கிழமை தொடக்கம் நேர்த்திப் பொருள்கள் சேகரிக்கும் தொண்டர்கள் உழவு இயந்திரங்களில் வட்டக்கச்சி, கல்மடுநகர், இராமநாதபுரம், விசுவமடு, புன்னைநீராவி, மயில்வாகனபுரம், உடையார்கட்டு, சுதந்திரபுரம் போன்ற பகுதிகளுக்கு வருகை தர உள்ளனர் என்பதை அறியத்தருகின்றோம்.

ஆலயபரிபாலன சபை
நாகதம்பிரான் ஆலயம்
புளியம் பொக்கணை

**பாராட்டி வாழ்த்துகின்றேன்**

எமது சங்கத்தில் லிகிதர் ஆகக் கடமையாற்றிய

செல்வி **கஜானா நற்குணராஜாவுக்கு**

வடக்கு மாகாண சபையால் **13.03.2017** அன்று வழங்கப்பட்ட **பல்கலைக்கழக பட்டதாரி ஆசிரியர்** நியமனம் கிடைக்கப் பெற்றதையொட்டி அவர்களை மனமாரப் பாராட்டி வாழ்த்துவதோடு அவர் மேலும் பல பட்டங்கள் பதவிகள் பெற வாழ்த்துகின்றேன்.

[illegible]க்குக் கூட்டுறவுச்சங்க
[illegible]சிய முகாமையாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அனலைதீவு ம.வி. அதிபர் கௌரவிப்பு

கடந்த வாரம் வெளியான ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் பிரகாரம் கணித பாடத்தில் 100 வீத சித்தி பெற வைத்த, அனலைதீவு மகா வித்தியாலய அதிபர் நா.இராதாகிருஷ்ணன் தீவக வலயக் கல்வி அலுவலகத்தால் கடந்த வெள்ளிக்கிழமை கௌரவிக்கப்பட்டார்.

இந்தப் பாடசாலையின் கணித பாட ஆசிரியர் து.புஷ்பகாந்தனின் முயற்சி யால், பரீட்சைக்குத் தோற்றிய 23 மாணவர்களில் 18 மாணவர்கள் அதிவிசேட சித்தியையும் ( ஏ ) 2 மாணவர்கள் விசேட சித்தியையும் ( பி ) மூன்று மாணவர்கள் சிறப்புச் சித்தியையும் கணித பாடத்தில் பெற்றுக் கொண்டனர். இதனையடுத்து தீவக கல்வி வலயத்தினரால் அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலய அதிபர் வலயப் பணிப்பாளரால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். (ஐ-9)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

கடந்த 03.04.2016 காலமான எமது குடும்பத் தலைவர்

**பத்திநாதர் அன்ரனிடயஸ்**

**(செல்வக்குமார்)**



அவர்களின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி இன்று (03.04.2017) திங்கட்கிழமை காலை 6.30 மணிக்கு தாளையடி புனித அந்தோனியார் தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் மதிய போசன நிகழ்வும் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உடுத்துறை வடக்கு, தாளையடி
077 056 9579

குடும்பத்தினர்.

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



**அமரர் திருமதி திலகவதி அமுதலிங்கம்**

(தம்பக்கடவை,இடைக்காடு, அச்சுவேலி)

பூவுலகில் 16.10.1948

இறையுலகில் 15.03.2017

கடந்த 15.03.2017 புதன்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி அமரர் திருமதி திலகவதி அமுதலிங்கம் அவர்களின் மறைவையொட்டி அனைத்து வழிகளிலும் ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும் இறுதிச் சடங்கில் பங்குபற்றியவர்களுக்கும். அனைத்து வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு நாளை (04.04.2017) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தம்பக்கடவை, சந்நிதி வீதி,
இடைக்காடு, அச்சுவேலி.

குடும்பத்தினர்.
077 788 3831, 077 306 6646,
077 725 4306

# ஜி.சீ.ஈ.சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறு

**யா/ உரும்பிராய் இந்துக் கல்லூரி**

ஜே.மாதுரிகா,7ஏபிசி,ஜே.கிறிஸ்மினா 3ஏ3பி2சிஎஸ்,கோ.கஜினா 3ஏ3பி2சி, டோ.றொசானி 3ஏபிசி4எஸ்,கு. லக்சிகா 2ஏ3பிசிஎஸ், கு.சாரா ஏ4சி4எஸ்

**யா/ஹாட்லிக் கல்லூரி**
**பருத்தித்துறை**
**(ஆங்கிலமொழி மூலம்)**

வ.அனுசன் 9எ, கு.மாலன்பன் 9ஏ , தி.மிருதுலன் 9ஏ, ந.ரமணன் 9ஏ, பி.திவ்விகன் 9ஏ, ந.விதுஷன் 9ஏ, ஸ்ரீ.நிவேர்ஜன் 8ஏபி, வ.உமைபாலன்8ஏபி, இ.பிரன்ஜன்8ஏபி, வ.ஹரிராஜ்8ஏபி, அ.அனோசன்8ஏபி, இ.யதுர்சன்8ஏபி, ஜெ.ஜெனோசன்8ஏபி, அ.கோபிநாத்8ஏபி, இ.குருபரன் 7ஏ2பி, உ.லக்ஸ்சன் 7ஏ2பி, சி.பவித்திரன் 7ஏ2பி, ப.கஜந்த் 7ஏபிசி, வ.அரிராஜ் 7ஏபிசி, த.ஜெயகுமாரன் 7ஏபிசி, நர்த்தனன் 7ஏபிசி, அ.வாதவூரன் 7ஏபிசி, பா.ஆனந்த்7ஏபிசி, செ.சிந்தரசன்7ஏபிஎஸ்,

**(தமிழ்மொழி மூலம்)**

ஜெ.சாரங்கன் 9ஏ, தி.சுஜிவன் 9ஏ, த.தபிஷேக் 9ஏ, ந.வின்சன் 9ஏ, கு.கஜீவன் 9ஏ, சி.யதுர்சன் 9ஏ, சே.கௌரீசன் 9ஏ, யோ.ரஜீவன் 9ஏ, செ.வேணுஜன் 9ஏ, க.கஜானன் 9ஏ, சி.ரமணன் 9ஏ, ச.சங்கமன் 9ஏ, ரு.ஜெனிஸ்ரன் 9ஏ, மு .அபிராம்8ஏபி, ரா.பிரதீப் 8ஏபி, சி.சாரங்கன்8ஏபி, ஜெ.ஜெயவர்மன்8ஏசி, சி.கோகுலன்8ஏபி, பா.மாதவன் 8ஏபி, பா.நவநீதன்8ஏஎஸ், அ.றிசாட்நிதர்சன் 8ஏபி, தே.தயாளன்8ஏசி, ச.அபிராம்8ஏபி, த.சாருகன் 8ஏபி, சி.சுஜிபன் 8ஏஎஸ், யோ.சுஜிவன் 8ஏசி, ஸ்ரீ.ஆர்த்திகன்8ஏசி, க.கஜவர்ணன்7ஏ2பி, சி.குகநிஷாந்தன்7ஏ2பி, ஜெ.ஆர்த்தனன் 7ஏபிசி, ஜெ.தர்சிகன்7ஏபிசி, கி.நாகராசன் 7ஏபிசி, ம.அனிஸ்ரன் றொமிலஸ்7ஏபிசி, ஸ்ரீ.தினேஸ்குமார்7ஏ2சி, இ.நிதுஷன் 7ஏபிஎஸ், ந.சங்கீதன்7ஏபிஎஸ், இ.ஜெனார்தன்6ஏ3பி, த.கஜலக்சன் 6ஏ2பிசி, க.கோகுலதாஸ் 6ஏ2பிசி, கு.மதுஜன்6ஏ2பிசி, இ.புவிதரன் 6ஏ2பிஎஸ், பு. கிஷோகரன் 6ஏ2பிஎஸ், சி.பிரியங்கன் 6ஏ2பிஎஸ், ஸ்ரீ.சாரங்கன் 6ஏபி2சி, த.தனுஷன் 6ஏபி2சி, ரா.குணதீப் 6ஏபி2சி

**5ஏ**

ச.ஜெயசுதன், கி.காங்கேயன். பி.மனோஜன், சி.அருணோயன், கி.நிரோசன், க.சஜீசன், கி.சங்கரன், ஜெ.விபுலன், ந.ராகவன், க.அஜந்தன், சி.தனோஜன், ஞா.அபிசனன், சி.ஆர்த்திகன், பா.கேசவன், ப.கேகயன், அ.ரனுசன்போல், மு.வினோ, ப.பானுசாந்த்

**யா/ அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம்**

அ.கதீசன் 8ஏசி, த.கஜகோபன் 7ஏ2சி,யோ.பவித்திரன் 6ஏபிசிஎஸ், நி.சதுஜன் 6ஏபி2சி, ப.நிசாந்தன் 5ஏ4பி, ப.சாருஜன் 5ஏபி2சி, டொ.சிந்துஜன் 5ஏபி2சிஎஸ், வி.ரதுஷா 2ஏ3பிசி 2எஸ், சி.வஞ்சிதா 2ஏபி3சி2எஸ்

## 21 ஆவது ஆண்டு நினைவு முகம்

பெற்றதாய் மடியில் 19 . 06 . 1942



உற்றதாய் அடியில் 25 . 03 . 1996

அமரர் **முருகேசு பாலசிங்கம்** (சந்தம் புளியடி - காரைநகர்)

காலம் முழுவதும் எண்ணி வாழ்வதனால்
காப்பாயிருந்து வாழ்விக்கின்றீர்கள்
நீளும் உங்கள் நினைவுகளால்தான்
நினைப்பவை யாவும் நிறைகின்றன

118/2. சிவராஜா அவனியூ,
பலாலி வீதி, திருநெல்வேலி.

குடும்பத்தினர்.

## ஓராண்டு நினைவலைகள்

அமரர்

**மாணிக்கம் தம்பிராஜா**

மல்ரி சொப் உரிமையாளர் (தம்பி ஐயா)



மலர்வு 17 * 06 * 1944

உதிர்வு 13 * 04 * 2016

ஓராண்டு கடந்து
போனாலும் நீங்கள்
எம்முடன் வாழ்ந்த
நாள்களை மறக்க முடியுமா?
சடுதியாய் ஆயுள் முடிந்து
கண்ணுறங்கினாலும்
நீங்காதப்பா உங்கள்
நினைவுகள்
ஆயுள் முழுவதும்
உங்களை நினைப்போம்
ஆண்டவன் பாதம்
நீங்கள் அமர்ந்திட
வணங்குகிறோம்
எவ்வேளையிலும்
உங்கள் நினைவுகளைச்
சுமந்து வாழும்
எங்களது கண்ணீர்த்
துளிகள் - தினமும்
உங்கள் திருப்பாத
மலர்களுக்கு சமர்ப்பணம்.

தகவல் :
குடும்பத்தினர்
வல்லை றோட்,
அச்சுவேலி வடக்கு.
தொடர்பு: 0776621834

# மாணவர்கள் கௌரவிப்பு

அச்சுவேலி ஏப்.3 புத்தகலட்டிஸ்ரீ விஷ்ணு வித்தியாலயத்தில் இருந்து ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சை 2016 க்கு தோற்றி சிறந்த பெறுபேறுபெற்ற மாணவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு இன்று 3ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப. 11 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. பாடசாலை அதிபர் க.செந்தில் வடிவேலு தலைமையில் நடைபெறும் நிகழ்வில் விருந்தினர்களாக யாழ். கல்வி வலய கல்விப் பணிப்பாளர் என். தெய்வேந்திரராசா, வடக்கு மாகாண சபை உறுப்பினர் வே.சிவயோகன் ஆக்கியோர் கலந்து கொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் யாழ்ப்பாண மாநகரில் தீவிரம்

யாழ்ப்பாணம்,ஏப்.3
தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு வாரத்தை முன்னிட்டு யாழ்ப்பாண மாநகரப் பிரதேசத்தில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த 29ஆம் திகதி ஆரம்பமான தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் நாளை செவ்வாய்க்கிழமை வரை நடைபெறுகிறது.

யாழ்ப்பாண மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையால் முன்னெடுக்கப்படும் இந்த விழிப்புணர்வு நடவடிக்கைகள் இந்த முறை மாநகரப் பிரதேசம் முழுவதும் முன்னெடுக்கப்படுகிறது. டெங்கு நோய் தொற்றின் தாக்கம் அதிகமாக இனம் காணப்பட்ட இடங்களில் நுளம்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

மாநகராட்சி மன்றத்தின் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுகளில் டெங்கு விழிப்புணர்வுச் செயற்பாடுகள் இந்த முறை பெரியளவில் முன்னெடுக்கப்ப டுகின்றன. நாளைமறுதினம் புதன்கிழமை தொடக்கம் 8ஆம் திகதி சனிக்கிழமை வரைக்குமான காலப்பகுதியிலும் இந்த டெங்கு விழிப்புணர்வு செயற்பாடுகள் மேலதிகமாக நடத்தப்படும்.

தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு வாரத்தின் போது மாநகர வட்டார ரீதியாகத் திண்மக் கழிவகற்றல்,வடிகால்கள் துப்புரவு செய்தல், குடியிருப்புக்கள் தரிசித்தல் மற்றும் சிரமதானப் பணிகள் போன்றவையும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

(வ-17)

# நிறமூட்டப்பட்ட குளிர்பானங்கள் சிறுநீரகப் பாதிப்பை ஏற்படுத்தும்

*யாழ்ப்பாண தாதிய பயிற்சிக் கல்லூரி போதனாசிரியர் நந்தகுமார் சுட்டிக்காட்டு*

யாழ்ப்பாணம்.ஏப். 3
நாம் பருகும் குளிர் பானங்களில் சேர்க்கப்படுகின்ற நிறங்கள் சிறுநீரகப் பிரச்சினைகளை ஏற்படுத்தும். நிறமூட்டப்பட்ட குளிர்பானங்களை நாம் பருகும் போது அதில் சேர்க்கப்பட்டுள்ள நிறமும் சிறுநீரகம் வழியாகவே வெளியேறுகின்றது.

அதன்போது சிறுநீரகம் வழமையான வேலையை விட அதிகம் செயற்படுகின்றது. அதனால் மிக விரைவாக சிறுநீரகம் பாதிப்படைகின்றது.

இவ்வாறு தெரிவித்தார் யாழ்ப்பாண தாதிய பயிற்சிக் கல்லூரியின் போதனாசிரியர் கே.நந்தகுமார்.

வடமாகாண ஓய்வூதியர் நலன்புரிசங்கங்கள் ஏற்பாடு செய்த முதியோர் மாதாந்த ஒன்றுகூடல் நிகழ்வு நேற்று யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் மண்டபத்தில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:
எமது உடலில் நோய்கள் ஏற்படுவதற்கு நாமே காரணம். ஆரம்ப காலத்திலேயே நமது உணவுப் பழக்கவழக்கங்களை சரியான முறையில் கடைப்பிடித்தால் நாம் முதிய வயதில் நல்ல ஆரோக்கியமாக இருக்கலாம்.

தற்போது நாம் பயன்படுத்துகின்ற அரிசியிலும் நிறமூட்டல்கள் காணப்படுகின்றன. அரிசியின் நிறம் மற்றும் இராசயனங்கள் கூடுதலாகக் காணப்படுகின்றன.

இவையும் சிறுநீரகப் பாதிப்பை ஏற்படுத்த வல்லவை என்பதை நாம் அறிவதில்லை. கடையில் கிடைக்கின்றது என்பதற்காக எளிதாக பணம் கொடுத்து வாங்கிக் கொள்கிறோம். அவற்றில் எது நல்லது என்பது நமக்குத் தெரிவதில்லை.

எமது நோய்களுக்கு எமது உணவுப் பழக்கங்கள் தான் காரணம் என்பதை முதலில் நாம் புரிந்து கொள்ள வேண்டும் - என்றார்.

நிகழ்வில் 12ஆவது முதியோர் மாதாந்த சஞ்சிகையும் வெளியிடப்பட்டது. (ற-12)

# புங்குடுதீவு றோ.க.த.க. பொதுக் கூட்டம்

புங்குடுதீவு, ஏப். 3
யாழ்ப்பாணம் புங்குடுதீவு றோ.க.த.க. பாடசாலையின் பழைய மாணவர் சங்க ஆரம்பப் பொதுக் கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை மு.ப. 11 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

பாடசாலையின் அனைத்துப் பழைய மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு பாடசாலையின் அதிபர் கேட்டுக் கொண்டுள்ளார். (வ)


## மரண அறிவித்தல்கள்



தோற்றம்
04 . 03 . 1947

மறைவு
01 . 04 . 2017

**திருமதி இராசபூமணி மாணிக்கவாசகர்**

முல்லைவீதி, 4ஆம் கட்டை, முரசுமோட்டையைச் சேர்ந்த திருமதி இராசபூமணி மாணிக்கவாசகர் 01.04.2017 சனிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி சிவகுரு சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற மாணிக்கவாசகரின் அன்புமனைவியும், சந்திரகுமார் (கனடா), கலாநிதி (கனடா), ஜெயநிதி (ஜேர்மனி), உதயகுமார் (கொழும்பு), இராசநிதி (நோர்வே), ராஜகுமார் (கனடா), சுரேஸ் (வட்டக்கச்சி) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதி அஞ்சலிக்காக முல்லை வீதி, 4ஆம் கட்டை, முரசுமோட்டை இல்லத்தில் வைக்கப்பட்டு நாளை (04.04.2017) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் இறுதிக் கிரியைகள் நடைபெற்று நண்பகல் 12 மணியளவில் தகனக்கிரியைக்காக முரசுமோட்டை பொதுமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
திரு.திருமதி குலேந்திரன் இராசநிதி
(நோர்வே)

076 566 1773, 0047 2168 9290



## மரண அறிவித்தல்கள்

**திருமதி பரமேஸ்வரி சுப்பிரமணியம்**

மலேசியாவைப்பிறப்பிடமாகவும், காரைநகர், களபூமி, பிள்ளையார் கோயிலடியை வசிப்பிடமாகவும், தற்போது 383/22, கோயில் வீதி, நல்லூரடியை தற்காலிகவதிவிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி சுப்பிரமணியம் நேற்று (02.04.2017) ஞாயிற்றுக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா (மலேசிய பென்சனியர்)- தங்கம்மா தம்பதிகளின் சிரேஷ்டபுத்திரியும், காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்புமனைவியும், காலஞ்சென்ற வல்லிபுரம் (கணக்காய்வாளர்) மற்றும் லீலாவதி, நடராசா (Dr) ஆகியோரின் அன்பு சகோதரியும், காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரி (ஆசிரியை), சண்முகநாதன் (ஓய்வுபெற்ற படவரைஞர்) மற்றும் ராஜேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.04.2017) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

383/22, கோவில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல்
Dr. S.K. நடராசா



## மரண அறிவித்தல்

**செல்லத்துரை ஐயர் சிவானந்த சர்மா**



யாழ்ப்பாணம் சாவ கச்சேரி மட்டுவில் வடக்கு சந்திரபுரம் செல்லப்பிள்ளை யார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை ஐயர் சிவானந்த சர்மா நேற்று (02.04.2017) ஞாயிற்றுக் கிழமை அதிகாலை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (03.04.2017) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக மட்டுவில் பொது மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள் ளவும்

தகவல்:
மீனலோசனா (மனைவி),
செ.செல்வநாத சர்மா (சபேஷ்),
செ.ஜோகானந்த சர்மா (சின்னவி)
மற்றும் குடும்பத்தினர்

011 233 6789, 021 790 4717,
077 228 0042, 077 155 9706





**திருமதி சின்னத்துரை சிவக்கொழுந்து (கட்டியம்மா)**

யாழ்.அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்துரை சிவக்கொழுந்து 30.03.2017 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - கற்பகம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பண்டாரி - சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சின்னத்துரையின் (உரிமையாளர் - கிருஷ்ணா மோட்டோர்ஸ் வேக்ஸ் - யாழ்ப்பாணம்) பாசமிகு மனைவியும், கிருஷ்ணமூர்த்தி (பிரான்ஸ்), தேவமலர், பாசமலர், இராசகருணா (ஜேர்மனி), சிவமூர்த்தி (நெதர்லாந்து), கிருபா (நோர்வே) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.04.2017) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உடுவில் பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

செபமாதாகோயிலடிவடக்குவீதி,
உடுவில், சுன்னாகம்.

தகவல்
குடும்பத்தினர்.





**செல்லத்துரை தில்லை நடராஜா**
(தொலைத் தந்தி பரிசோதகர் D.T)

நல்லூர் முடமாவடியைப் பிறப்பிடமாகவும் வின்சன்றோட் முதலாம் வாய்க்கால் திருவையாறு கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை தில்லை நடராஜா (தொலைத் தந்தி பரிசோதகர் D.T) 31.03.2017 இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் சுசிலாதேவியின் அன்புக்கணவரும் மகாலட்சுமி (கனடா) காலஞ்சென்ற சண்முகராஜா(தொலைத்தந்தி பரிசோதகர்) மற்றும் தருமராஜா ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்றவர்களான செல்வரட்ணம்(பொறியியலாளர்), இரத்தினேஸ்வரி மற்றும் தர்மசொரூபி காலஞ்சென்ற சோமசுந்தரம் மற்றும் யோகாம்பிகை (நியூசிலாந்து), பாலகிருஷ்ணன்(ஆஸ்திரேலியா) ஆகியோரின் மைத்துனரும் சொரூபராசா(ஆஸ்திரேலியா - மருத்துவநிபுணர்), தர்மசொரூபன்(கொழும்பு), கோமதி(மருத்துவநிபுணர்) காலஞ்சென்ற திருக்குமரன் மற்றும் சாயிகுமார்(கனடா), கௌரி (மருந்தாளர்), சுமதி(கனடா), சுபனா, மஞ்சுளா, சுலோஜனா (நியூசிலாந்து) ஆகியோரின் பெரியதந்தையும் சிவகுமார் (விரிவுரையாளர்), பிரணவச்செல்வன்(பங்கு முகவர் Sony), ஸ்ரீகுமார் (கொழும்பு), ஜெயகுமார்(லண்டன்), லோகீசன், ஜெயனாதன், யசோதா(கனடா), கோகுலன்(ஆஸ்திரேலியா), லோகீசன் (லண்டன்), பர்மிளா(ஆஸ்திரேலியா), மதுரா(ஆஸ்திரேலியா), செல்வி (இந்தியா), நிறஞ்சலா(கனடா), தர்மினி, ராஜினி(ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.04.2017) திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் (திருவையாறு, கிளிநொச்சி) நடைபெற்று பூதவுடல் இரணைமடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சிவகுமார் (மருமகன்) 077 239 6741
பிரணவச் செல்வன் (மருமகன்) 077 791 7748


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்மராட்சியில் மார்ச்சில் மட்டும்

# டெங்கு நோயால் 168 பேர் பாதிப்பு

தென்மராட்சி, ஏப். 3

தென்மராட்சிப் பிரதேசத்தில் கடந்த மாதம் டெங்கு நோய்த் தொற்றால் 168 பேர் பாதிக்கப்பட்டனர். 8 பேர் உண்ணிக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த முதல் பத்து நாள்களில் 95 பேரும், ஏனைய 21 நாள்களில் 73 பேரும் டெங்கு நோய்த் தொற்றால் பீடிக்கப்பட்டுள்ளனர் என்று புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த பெப்ரவரி மாதத்தின் முற்பகுதியில் டெங்கு நோய்த் தொற்றின் தாக்கம் குறைவடைந்த நிலையில் பிற்பகுதியில் பெய்த மழையை அடுத்து மார்ச் மாத முற்பகுதியில் தினமும் காய்ச்சலால் பீடிக்கப்பட்டு நூற்றுக்கணக்கானோர் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர். இவர்களின் குருதி மாதிரிகள் வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் பரிசோதிக்கப்பட்டன. தினமும் பத்துக்கு மேற்பட்டோர் டெங்கு நோய்த் தொற்றால் பீடிக்கப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டன. அவர்கள் விடுதிகளில் சேர்க்கப்பட்டனர்.

மார்ச் மாதத்தின் முதற் பத்து தினங்களில் வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் தினமும் எண்ணூறுக்கு மேற்பட்ட குருதி மாதிரிகள் தனியொரு ஆய்வுகூட அலுவலரால் பரிசோதிக்கப்பட்டன. அதற்கு மேற்பட்ட நோயாளர்களின் குருதி மாதிரிகள் தனியார் ஆய்வுகூடங்களில் பரிசோதிக்க வேண்டிய நிலை காணப்பட்டது.

இந்த வருடத்தில் சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களம், பிரதேச செயலகம், அரச உள்ளூராட்சித் திணைக்களம் ஆகியவற்றின் அலுவலர்கள், பொலிஸார் மற்றும் கிராமிய டெங்கு கட்டுப்பாட்டுக் குழுவினர் இணைந்து டெங்கு நுளம்பைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். ஐந்து டெங்கு நோய்த் தொற்றுத் தாக்கம் அதிகமாகக் காணப்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளில் டெங்கு கட்டுப்பாட்டு பரிசோதனைகள் 5 தடவைகள் அவர்களால் முன்னெடுக்கப்பட்டன.

மதில்களில் வைக்கப்பட்டிருந்த பூச்சாடிகள், விலங்குகள் மற்றும் பறவைகளுக்கு நீர் வைக்கப்பட்டிருந்த பாத்திரங்கள் போன்றவற்றில் டெங்கு நுளம்பு குடம்பிகள் காணப்பட்டதால் 50க்கு மேற்பட்டோருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

கடந்த பத்தாம் திகதிக்குப் பின்னர் வெயிலின் தாக்கம் அதிகமாகக் காணப்பட்டதால் டெங்கு நோய்த் தொற்றின் தாக்கமும் குறைவடையத் தொடங்கியது.

கடந்த 29ஆம் திகதி தொடக்கம் தேசிய டெங்கு கட்டுப்பாட்டு வாரச் செயற்பாடுகள் சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினர், பொலிஸார், படையினர் அரச, உள்ளூராட்சி திணைக்கள அலுவலர்களுடன் தரிசிப்புகளை மேற்கொண்டு வருகின்றனர். மீசாலை கிழக்கு, மீசாலை மேற்கு, மட்டுவில் தெற்கு, மட்டுவில் வடக்கு, சரசாலை தெற்கு, கொடிகாமம், சாவகச்சேரி நகரம், கோயிற்குடியிருப்பு போன்ற கிராம அலுவலர் பிரிவுகளில் நேற்றுமுன்தினம் வரை டெங்கு நோய்த் தொற்றுப் பாதிப்பு அதிகமாகக் காணப்பட்ட 4 ஆயிரத்துக்கு மேற்பட்ட இடங்களில் தரிசிப்புகளை அவர்கள் மேற்கொண்டுள்ளனர். இந்த இடங்களில் டெங்கு நுளம்பு உற்பத்தியாகக்கூடிய ஏது நிலையில் காணப்பட்ட ஆயிரத்துக்கும் அதிகமான குடியிருப்பாளர்களுக்கு சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளதுடன், 22 பேருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குப் பதிவையும் அவர்கள் செய்துள்ளனர்.

இவர்களில் கடந்த வியாழக்கிழமை தாக்கல் செய்யப்பட்ட 4 வழக்குகளில் தலா 3 ஆயிரம் ரூபா வீதம் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது எனவும் ஏனையோருக்கு இந்த வாரம் வழக்குகள் தாக்கல் செய்யப்படுமெனவும் சாவகச்சேரி சுகாதாரத்துறையினர் தெரிவித்தனர்.

இந்த வருடத்தின் முதல் மூன்ற மாதங்களில் டெங்கு நோய்த் தொற்றால் பீடிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 350 ஐத் தாண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்புட்டது. (வ-9)

## பரிசளிப்பு விழா

உரும்பிராய் இந்துக்கல்லூரியின் நிறுவுநர் தினமும் பரிசில் நாள் நிகழ்வும் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரியின் நூற்றாண்டு மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

கல்லூரி அதிபர் அ.அருணந்திசிவம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக பழைய மாணவனும் கட்டடப் பொறியியலாளருமான ச.சசிகுமார், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண சபை உறுப்பினர் அ.பரஞ்சோதி, கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் நா.சிவநேசன் ஆகியோர் கலந்துகொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ)

# ஆறுமுகம் திட்டத்துக்கு நிதியை வழங்கத் தயார்

யாழ்ப்பாணம், ஏப். 3

குடாநாட்டுக்கான குடிதண்ணீர்த் தேவையை நிறைவு செய்யும் திட்டமான ஆறுமுகம் திட்டத்துக்கு, வட மாகாண சபை ஒப்புதல் வழங்கினால், அதற்கான நிதியை வழங்குவதற்குத் தயார் என்று தலைமை அமைச்சரின் செயலாளர் தெரிவித்தார்.

ஆறுமுகம் திட்டத்தை நடைமுறைப்படுத்த உதவுமாறு அதிகாரிகளினாலும் சில அரசியல்வாதிகளினாலும் ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் தலைமை அமைச்சரின் அலுவலகங்களில் கோரிக்கை விடப்பட்டிருந்தது. அதற்கமைவாக கடந்த வியாழக்கிழமை வட மாகாண அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் இடம்பெற்றது. அபிவிருத்திக் கூட்டம் தலைமை அமைச்சரின் செயலாளரான சரித்த ரத்வத்த மற்றும் பாஸ்கரலிங்கம் ஆகியோரின் தலைமையில் இடம்பெற்றது.

மேற்படி சந்திப்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

குடாநாட்டுக்கான குடிதண்ணீர்த் திட்டத்துக்கு, ஆறுமுகம் திட்டத்தை நடைமுறைப்படுத்த கொழும்பு அரசின் இணக்கமும், நிதிவழங்குநர்களின் ஒப்புதலும் கிடைத்துள்ளது. அதனால் இந்தத் திட்டத்தின் மூலம் புதிய தேக்கத்தில் இருந்து குடாநாட்டுக்கான தண்ணீர் விநியோகத்தை மேற்கொள்ள முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

> "குடாநாட்டுக்கான குடிதண்ணீர்த் திட்டத்துக்கு, ஆறுமுகம் திட்டத்தை நடைமுறைப்படுத்த கொழும்பு அரசின் இணக்கமும், நிதி வழங்குநர்களின் ஒப்புதலும் கிடைத்துள்ளது."

இதனால் இந்தத் திட்டத்துக்கான வட மாகாண சபையின் எழுத்து மூலமான ஒப்புதலை வழங்கினால், அதற்கான அடுத்தகட்ட நடவடிக்கையை முன்கொண்டு செல்ல முடியும்.

அதனை அடுத்த ஒரு மாத காலத்துக்குள் சமர்ப்பிக்க வட மாகாண முதன்மைச் செயலாளர் நடவடிக்கை எடுத்து சம்மதம் கிடைத்தால், அதற்கான நிதியீட்டலுக்கான பணியைப் தலைமை அமைச்சரின் அலுவலகம் மேற்கொண்டு வழங்கும் என்றனர். (ஜ-101)

# மரண அறிவித்தல்



மலர்வு
18.12.1948

உதிர்வு
31.03.2017

## சின்னத்தம்பி கிருஷ்ணபிள்ளை

அத்தாய் அல்வாய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி கிருஷ்ணபிள்ளை 31.03.2017 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் சின்னத்தம்பி - சின்னம்மா தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும், பேராலை சின்னையா - பொன்னு தம்பதியரின் மருமகனும், அன்னலட்சுமியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் கருணைப் பிரகாசம், சிவலிங்கம், தங்கவேலாயுதம், காலஞ்சென்ற சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சசிகலா, சசீந்திரன், லோகேந்திரன், ரவீந்திரன், சர்மிளா, வத்சலா ஆகியோரின் பாசமிகு தந்தையும், ராஜாஜி, சியாமளா, நாளினி, தர்சினி, யோகேஸ்வரன், மயூரன் ஆகியோரின் அன்பு மாமனும், சுகேன், பிரசான், தருண், நிஷான், நினேகா, விவேனிஹரிசன், லேனி, டேனுஷன், சாருவின், சாயா, கப்பி, ஸ்ரீஜன்சிகா ஆகியோரின் அருமைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.04.2017) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2.00 மணியளவில் தகனக்கிரியைக்காக பூதவுடல் கருகம்பன் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

அத்தாய்,
அல்வாய் கிழக்கு.

தகவல்:
பிள்ளைகள்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி விடுவிப்புப் போராட்டம் 11 நாள்கள் கடந்து நீள்கின்றது

## மன்னார், முள்ளிக்குளம் கிராமத்தில்

### காணிகளை கடற்படை விடுவிக்கும்வரை தொடர்வோம் என மக்கள் உறுதி



மன்னார், ஏப்.3

கடற்படையினர் கையகப்படுத்தி வைத்திருக்கும் தமது பூர்வீக நிலங்களை விடுவிக்க வேண்டும் என்று வற்புறுத்தி முள்ளிக்குளம் மக்கள் நடத்திவரும் போராட்டம் நேற்று 11ஆவது நாளாகவும் தொடர்ந்தது.

தமது காணிகளைக் கடற்படையினர் விடுவிக்கும் வரை போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை என்று கிராம மக்கள் உறுதியுடன் தெரிவித்தனர்.

முள்ளிக்குளம் கிராம மக்களின் போராட்டத்துக்குப் பல தரப்பினரும் ஆதரவு தெரிவித்து வருகின்றனர். பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாண அமைச்சர்கள், வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் எனப் பல தரப்பினரும் போராட்டம் நடத்தப்படும் இடத்துக்குச் சென்று மக்களுக்குத் தமது ஆதரவை வெளிப்படுத்துகின்றனர்.

நேற்றுமுன்தினம் அமைச்சர் ரிசாத் பதியுதீன், வட மாகாண சபை உறுப்பினர் றிப்கான் பதியுதீன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ்த்தேசிய முன்னணியின் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் ஆகியோர் போராட்டம் நடைபெறும் இடத்துக்குச் சென்று மக்களுடன் கலந்துரையாடினர்.

தமது போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் அனைத்துத் தரப்பினருக்கும் நன்றி தெரித்துள்ள கிராம மக்கள், தங்கள் போராட்டம் வெற்றி பெறுவதற்கு அனைவரும் ஒத்துழைப்புத் தர வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர். (ற-21)

---

## கால்நடைகளைத் திருடுவோரின் கைவரிசை மீள முழங்காவிலில்

### தடுத்து நிறுத்த அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைக்கவேண்டும் எனக் கோரிக்கை

கிளிநொச்சி, ஏப்.3

``கிளிநொச்சி, முழங்காவிலில் கால்நடைத் திருட்டுக்கள் அதிகரித்துள்ளன. அதைக் கட்டுப்படுத்த உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்".

இவ்வாறு முழங்காவில் மில்க்கோ கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் து.அ.ஜெகநாதன் கோரியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

முழங்காவிலில் முன்னரும் கால்நடைகள் திருடப்பட்டன. கால்நடைகளின் உரிமையாளர்களும், சங்கமும், பொலிஸாரும் இணைந்து மேற்கொண்ட முயற்சியால் அது ஓரளவுக்குக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. அண்மைக்காலமாக கால்நடைகள் திருட்டுப் போவது அதிகரித்துள்ளது.

கடந்த ஒருவாரத்தில் மட்டும் எமக்குத் தெரிந்த வகையில் 6 கால்நடைகள் களவாடப்பட்டுள்ளன. அவற்றைத் திருடுபவர்கள் தொடர்பாக எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. வாழ்வாதாரத்துக்காக வளர்க்கப்படும் கால்நடைகள் திருடப்படுவதால் அவற்றின் உரிமையாளர்கள் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர்.

கால்நடைகள் திருடப்பட்டு இறைச்சியாக்கப்படுவதைத் தடுப்பதற்கு அனைவரும் ஒத்துழைப்புத் தர வேண்டும். கூட்டு முயற்சியாலேயே இவ்வாறான செயற்பாடுகளைத் தடுக்க முடியும்- என்றார். (ற-101)

---

## வடக்கில் ஏன் ஆயுதம் ஏந்தினார்கள் என தெற்கு இளைஞர்கள் சிந்திப்பது சிறந்தது

### அங்கஜன் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.3

"வடக்கில் உள்ள இளைஞர்கள் ஏன் ஆயுதம் ஏந்திப் போராடினார்கள் என்பதை தெற்கில் உள்ள இளைஞர்கள் சிந்திப்பது வரவேற்கத்தக்கது."

இவ்வாறு தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன்.

தேசிய இளைஞர் மாநாடு தொடர்பாக செய்தியாளர் சந்திப்பு கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்டது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார். வடக்கிலுள்ள இளைஞர்கள், தெற்கு மற்றும் மலையகத்தில் உள்ள இளைஞர்களை ஒன்றிணைக்கும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் வேலைத் திட்டம் இன, மத வேறுபாடுகளைக் கடந்த தூய அரசியலை ஏற்படுத்தும் திட்டமாகும்.

நாளை நடைபெறவுள்ள இளைஞர் மாநாட்டில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய பகுதிகளில் இருந்து 500க்கும் மேற்பட்ட இளைஞர், யுவதிகள் கலந்து கொள்ளவுள்ளனர்-என்று நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஊடகப்பிரிவு அனுப்பிவைத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-10)

---

## சிறார் தொடர்பாக 2016இல் வடக்கில் 2,211 வழக்குகள்

யாழ்ப்பாணம், ஏப்.3

கடந்த ஆண்டில் மட்டும் வடக்கு மாகாணத்தில் சிறுவர்கள் தொடர்பான 2 ஆயிரத்து 211 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்று வடக்கு மாகாண சிறுவர் திணைக்களப் பணிப்பாளர் தி.விஸ்வரூபன் தெரிவித்தார்.

வடக்கில் உள்ள அனைத்துச் சிறுவர் இல்ல முகாமையாளர்களுடனான சந்திப்பு ஒன்று திணைக்களத்தில் நடத்தப்பட்டது. அதன்போதே பணிப்பாளர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தில் உள்ள 9 நீதிமன்றங்களில் இந்த வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. யாழ்ப்பாண மாவட்டத்தில் ஊர்காவற்றுறை நீதிமன்றில் 92 வழக்குகளும், பருத்தித்துறையில் 318 வழக்குகளும், யாழ்ப்பாணம் நீதிமன்றில் 280 வழக்குகளும், சாவகச்சேரி நீதிமன்றில் 79 வழக்குகளும், மல்லாகம் நீதிமன்றில் 374 வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டன.

வவுனியா நீதிமன்றில் 493 வழக்குகளும், மன்னார் நீதிமன்றில் 393 வழக்குகளும், கிளிநொச்சி நீதிமன்றில் 89 வழக்குகளும், முல்லைத்தீவு நீதிமன்றில் 120 வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டன.

பாலியல் ரீதியான 180 வழக்குகளும், சிறுவர் திருமணம் தொடர்பான 61 வழக்குகளும் இவற்றுள் உள்ளடங்குகின்றன-என்றார். (ற-101)

---

## ஒட்டுசுட்டானில் விவசாயக் கிணறுகள் அமைக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப்.3

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் விவசாயக் கிணறுகளை உருவாக்க வேண்டும் என்று பிரதேச விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

"தற்போது ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றத்தால் குளங்களில் நீர் வற்றியுள்ளது. தோட்டச் செய்கைகள் கைவிடப்படுகின்றன. மிளகாய், வெங்காயம் என்பவற்றுடன் மரக்கறிகளும் முன்னர் நன்றாகச் செய்கை பண்ணப்பட்டன. தற்போது வறட்சியால் அவற்றுக்கு வெளிமாவட்டத்தை நம்பி இருக்க வேண்டியுள்ளது.

இந்தப் பிரதேசத்தில் விவசாயக் கிணறுகளை அமைப்பதற்கு ஆவன செய்ய வேண்டும்" என்று அவர்கள் கோரிக்கை விடுத்தனர். (ற-500)



கோப்புப்படம்

---

## முஸ்லிம் மக்களின் போராட்டத்துக்கு ரெலோ கட்சி ஆதரவு

கரணவாய், ஏப்.2

வில்பத்து வனப் பகுதியில் முஸ்லிம் மக்களின் காணிகளை வன எல்லையாக அறிவிக்கப்பட்டதைக் கண்டித்து மக்கள் நடத்தி வரும் போராட்டத்துக்கு ரெலோ கட்சியின் கொள்கைப் பரப்புச் செயலர் ஆதரவு தெரிவித்தார்.

வில்பத்து வடக்கில் முஸ்லிம் மக்களுக்குச் சொந்தமான காணிகளை வன எல்லையாக அரசு அறிவித்துள்ளது. அது தொடர்பாக வர்த்தமானி அறிவித்தலும் வெளியிடப்பட்டுள்ளது. அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மக்கள் போராட்டம் நடத்துகின்றனர்.

நேற்றுமுன்தினம் அந்தப் பகுதிக்கு ரெலோ கட்சியின் கொள்கை பரப்புச் செயலாளர் கணேஸ்வரன் வேலாயுதம் மற்றும் க.சதீஸ் ஆகியோர் நேரில் சென்றனர். அவர்களின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தனர். போராட்டத்தில் ஈடுபடும் மக்களுக்கான வசதிகளை ஏற்படுத்துவதற்கு ஒரு தொகைப் பணத்தையும் வழங்கினர். (ற-108)



---



## மரண அறிவித்தல்



### திருமதி வள்ளியம்மை நடேசு

பொன்னாலையைப் பிறப்பிடமாகவும் நவாலி அரசடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வள்ளியம்மை நடேசு 29.03.2017 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வாரிக்குட்டி - பார்வதி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - கண்மணி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நடேசுவின் அன்பு மனைவியும், ஜெகதீஸ்வரி, விக்னேஸ்வரன் (விக்கி), காலஞ்சென்ற ஜெகதீஸ்வரன் மற்றும் வனராஜ் (லண்டன்), பாமினி, ஜெயகோபி (பிரான்ஸ்), பிரபாகரன் (லண்டன்), சுரேசன் (லண்டன்), சுபேந்திரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், துரைராஜா மற்றும் பொன்னுத்துரை, மகாலக்ஷ்மி, காலஞ்சென்ற தர்மலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான பெரியதம்பி, தம்பிராசா, தில்லையம்பலம், தளையசிங்கம் மற்றும் செல்லத்துரை, காலஞ்சென்ற அரியம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், தெய்வேந்திரம், ரேவதி, வக்சலா (லண்டன்), சிவலோகநாதன், பகீரதி (லண்டன்), கலாவதி, சுலேகா (லண்டன்), விஜிதா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும், அகிலன் (சுவிஸ்), பாஸ்கரன் - சயந்தினி (லண்டன்), ரஜிதா, அனுஷன் (லண்டன்), அஜந்தன் (லண்டன்), காலஞ்சென்ற மதுஷா மற்றும் மதுஷன், துலகீஷனா (லண்டன்), நிதர்ஷனா (லண்டன்), தர்ஷனா (லண்டன்), நிருஷன், தர்ஷன், சயந்தன் (லண்டன்), யசிக்கா (லண்டன்), சஜித் (லண்டன்), கௌசிகா, துலக்ஷன், துவாரகன், துலசிகன் (லண்டன்), விதுஷன் (லண்டன்) ஆகியோரின் பேர்த்தியும், டியானா (லண்டன்), ஆரிஜன் (லண்டன்), அரீஜன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.04.2017) திங்கட்கிழமை பி.ப. 1.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நவாலி ஆரியம் பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நவாலி தெற்கு,
அரசடிச்சந்தி, மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முல்லை. மண்ணின் வரலாற்றை பாதுகாப்பதற்கு முன்வரவேண்டும்

*சிவமோகன் எம்.பி. அழைப்பு*

முல்லைத்தீவு, ஏப்.3

"முல்லைத்தீவு மண்ணின் வரலாற்றுச் சான்றுகள் பாதுகாக்கப்பட வேண்டும். எம்முன்னே நிறையக் கடமைகள் உள்ளன. அவற்றை உணர்ந்து ஒவ்வொருவரும் பங்கெடுக்க வேண்டும்."

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்தார்.

கற்சிலைமடு, பண்டாரவன்னியன் வளாகத்தில் பண்டாரவன்னியன் சிலை திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எங்கள் பிரதேசத்தின் வரலாற்றை அழியவிடக் கூடாது. பண்டாரவன்னியன் தோற்கடிக்கப்பட்டான் என்று நடப்பட்ட கல்லின் மீது அவரது சிலையை அமைத்துள்ளோம். கடந்த ஆண்டு நாடாளுமன்ற ஒதுக்கீட்டில் மக்களுக்காகப் போராடிய பல பெரியார்களுடன் மாவீரன் பண்டாவரன்னியனின் சிலையையும் அமைக்க அனுமதி பெற்றேன். அதற்குப் பின்னர் தடை வந்தபோதும் மீண்டும் அனுமதி பெற்றேன். சிலைகளை அமைக்க நடவடிக்கை எடுத்தபோது சிலை அமைப்பதை எதிர்த்தோரும் வேகமாகச் செயலாற்றினர்.

இந்த விடயத்தை மாகாண சபைக்கு எடுத்துச் சென்று அசௌகரியங்களை ஏற்படுத்தினர். நான் அவற்றைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. எமது முயற்சிகளை நாம் தொடர்ந்தோம். பண்டாரவன்னியனின் நினைவாகப் பாதுகாக்க வேண்டிய இடங்கள் பல இருக்கின்றன. வெள்ளையர்கள் இங்கு இருந்திருக்கிறார்கள் என்பதற்கு அடையாளமாக கயட்டைக் காடுகள் உள்ளன. அவை குதிரைகளின் உணவுக்காக வளர்க்கப்பட்டவை. அதேபோன்று குமிழமுனை செல்லும் பாதையில் கற்பூரப்புல்வெளி அமைந்துள்ள இடமும் ஓர் அடையாளமாகும்.

கன்னியர்கேணி பண்டாரவன்னியன் காலத்தில் பெண்கள் குளிப்பதற்காக அமைக்கப்பட்டது. முத்துஐயன்கட்டுக் குளத்தை அண்டிய பகுதிகளில் உள்ள பல கல்வெட்டுகள், கற்களால் அமைக்கப்பட்ட குளக்கட்டு கள் இன்னும் அடையாளமாக இருக்கின்றன. அவற்றைப் பாதுகாக்க வேண்டும். இந்தச் செயற்பாட்டில் அனை வரும் பங்கெடுக்க வேண்டும். என்றார். (ற-21-500)

# டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய 5, 000 இடங்கள் கிளிநொச்சியில்

*நான்கு நாள்கள் சோதனையில் கண்டுபிடிப்பு*

கிளிநொச்சி, ஏப்.3

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த 4 நாள்களில் மேற்கொள்ளப்பட்ட டெங்குக் கட்டுப்பாட்டுச் செயற்பாடுகளில் டெங்கு நுளம்பு உற்பத்தியாவதற்கு ஏது நிலையுடன் கூடிய 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இடங்கள் இனங்காண்ப்பட்டுள்ளன என்று மாவட்ட சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு வாரம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதை அடுத்து தற்போது டெங்குக் கட்டுப்பாட்டுச் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படுகின்றன. குடியிருப்புகள், கல்வி நிறுவனங்கள், அரச நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், தொழிற்சாலைகள், கட்டுமானங்கள், மத வழிபாட்டிடங்கள் என்பன சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன.

கண்டாவளை சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் சுவேந்திரன், கரைச்சி சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் லிங்கம், பளை சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் சுகந்தன், பூநகரி சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் கோகுலன் ஆகியோரின் நெறிப்படுத்தலில், மலேரியா தடை இயக்க பொறுப்பு வைத்திய அதிகாரி மருத்துவர் ஜெயராசா ஒருங்கிணைப்பில் இந்த டெங்கு ஒழிப்புச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

அவர்களுடன் நான்கு பிரதேச செயலகங்களது பணியாளர்கள் மற்றும் கிராம சேவை அலுவர்கள், கிராமமட்ட பொது அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள் நுளம்புக் கட்டுப்பாட்டு வாரச் செயற்பாட்டுக்கு உதவி வழங்கினர்.

பொதுமக்களும் தமது முழுமையான ஒத்துழைப்பையும், பங்களிப்பையும் வழங்குகின்றனர். தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு வாரத்தின் ஐந்தாம் நாளான நேற்றும் சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

கரைச்சிப் பிரதேசத்தில் கிளிநொச்சி பொதுச் சந்தை, கிளிநொச்சி புகையிரத நிலையம், பூநகரிப் பிரதேசத்தில் முழுங்காவில் நகரம் (பிள்ளையார் கோவிலடி), பூநகரி நகரம் (வாடியடி), பளைப் பிரதேசத்தில் அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்கள் கண்டாவளைப் பிரதேசத்தில் விசுவமடு நகர்ப்பகுதி, கல்மடுநகர் பத்து ஏக்கர் சந்தி (கிருபாகடையடி) மற்றும் பரந்தன் நகரம் ஆகிய பகுதிகளில் சிரமதானப் பணிகள் அந்தப் பகுதி பொதுச்சுகாதாரக் குழுக்களால் ஒழுங்கமைக்கப்பட்டன. (ற-21-35)

## சிமெந்து உறை பைகள் மீண்டும் விற்பனையில்

தென்மராட்சி, ஏப்.3

சாவகச்சேரி பொதுச் சந்தையில் சீமெந்து உறையில் தயாரிக்கப்பட்ட பைகள் விற்பனைக்கு வந்துள்ளன.

எதிர்வரும் 22ஆம் திகதிக்குப் பின்னர் பொலித்தீன் பைகள் சந்தைக்குள் உபயோகிப்பதுதடை செய்யப்பட்டுள்ளதை அடுத்தே இவ்வாறான பைகள் விற்பனைக்கு வந்துள்ளன.

பொலித்தீன் பாவனையைக் கட்டுப்படுத்தும்நோக்கில் இந்தநடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. உக்கக் கூடிய காகிதப் பைகளை பொதுமக்கள் உபயோகிப்பதற்குமுன்வரவேண்டும்என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. சிமெந்துஉறைகளில்தயாரிக்கப்பட்ட பைகளைக் கொள்வனவு செய்வதில் மக்கள் மத்தியில் ஆர்வம் காணப்படுகின்றது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற-9)

## தண்ணீரூற்று சந்தை அருகே புடவைக் கடையில் தீ விபத்து

*முள்ளியவளைப் பொலிஸாரின் உடனடி நடவடிக்கையால் பெரும் சேதம் தவிர்ப்பு*

முல்லைத்தீவு, ஏப்.3

முள்ளியவளை, தண்ணீரூற்று சந்தைக்கு எதிரே உள்ள புடைவைக் கடையொன்று நேற்று முன்தினம் இரவு தீப்பிடித்தது முள்ளியவளைப் பொலிஸாரின் உடனடி நடவடிக்கையால் தீ அணைக்கப்பட்டு சேதங்கள் தவிர்க்கப்பட்டன.

இரவு 10 மணியளவில் முள்ளியவளைப் பொலிஸார் வாகனத்தில் தமது வழமையான ரோந்து நடவடிக்கையை மேற்கொண்டனர். அப்போது கடை தீப்பற்றியிருந்ததை அவதானித்தனர். உடனடியாகக் கடைக் கதவை உடைத்து தீயைக் கட்டுப்படுத்தினர். கடையில் இருந்த ஒரு தொகுதிப் புடவைகள் எரிந்து நாசமடைந்தன. பெரும் சேதங்கள் தவிர்க்கப்பட்டன.

அழிவடைந்த பொருள்களின் பெறுமதி கணக்கிடப்படவில்லை என்று முள்ளியவளைப் பொலிஸார் தெரிவித்தனர். தீப் பற்றியமைக்கான காரணம் தொடர்பாக மேலதிக விசாரணைகள் நடைபெறுகின்றன என்றும் தெரிவித்தனர். (ற-102)

## வற்றாப்பளை ஜவாகு வீதியை திருத்தித் தருமாறு கோரிக்கை


முல்லைத்தீவு, ஏப்.3

வற்றாப்பளையில் 150க்கும் மேற்பட்ட குடும்பங்கள் நாளாந்தம் உபயோகிக்கும் ஜவாகு வீதி போக்குவரத்துச் செய்ய முடியாத அளவு மோசமாகப் பாதிப்படைந்துள்ளது. அதைத் திருத்தித் தருவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

"கடந்த ஆண்டு ஒரு மில்லியன் ரூபா நிதிச் செலவில் 100 மீற்றர் வீதி சீரமைக்கப்பட்டது. அப்போது அதிகம் சேதமடையாதிருந்த வீதியே திருத்தப்பட்டது. அதன்பின்னர் அந்த வீதி பெரிதும் சேதடைந்தது. போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையில் உள்ளது. ஓரளவுக்கேனும் போக்குவரத்துச் செய்யக் கூடியவாறு வீதியைத் திருத்தித் தாருங்கள் என்று நாங்கள் கோரிக்கை விடுத்தோம். இதுவரை அது நிறைவேற்றப்படவில்லை. இது தொடர்பாக அதிகாரிகள் கவனம் எடுக்க வேண்டும் என்று பிரதேச மக்கள் தெரிவித்தனர். (ற7)



## மரண அறிவித்தல்



தோற்றம் 08 . 06 . 1948

மறைவு 30 . 03 . 2017

### இராசையா வேலுப்பிள்ளை (செல்வராசா)

மாமூலை, முள்ளியவளையைப் பிறப்பிடமாகவும், இரண்டாம் குறுக்குத்தெரு, பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா வேலுப்பிள்ளை (செல்வராசா) 30.03.2017 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்வராசா - ராணிஅம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், செல்வராணியின் அன்புக் கணவரும், தவச்செல்வம், கலைச்செல்வன், கலைவாணி, வசந்தன், சாளினி ஆகியோரின் அன்புத் தந்தையும், சரண்யா, சன்சியா, அமுதன், சிவபரத் ஆகியோரின் அன்பு மாமனாரும், கிரிசாகி, கீர்த்திக், தனுஜா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.04.2017) திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோரியடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

2ஆம் குறுக்குத்தெரு,
பருத்தித்துறை.

தகவல்
குடும்பத்தினர்.

077 756 3016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டில் நிரந்தர அமைதியை ஏற்படுத்தவேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் வலியுறுத்து

திருமலை, ஏப். 3

"இந்த நாட்டை ஒரு குறிப்பிட்ட பிரிவினர் தாங்கள் நினைத்தபடி ஆட்சி செய்தார்கள், அந்த நிலைமை இந்த நாட்டில் மீண்டும் ஏற்படாத வண்ணம் நீதி நியாயத்தின் அடிப்படையில், ஒரு நிரந்தர அமைதியை ஏற்படுத்த வேண்டியது எமது கடமையாக இருக்கிறது."



இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

திருகோணமலை மெக்கெய்சர் விளையாட்டரங்கில் யொவுன்புர இளைஞர் நிகழ்வின் இறுதி நாள் நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை இடம் பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்ட வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

இன்று எமது நாடு ஒரு புதுயுகத்தை நோக்கிப் பயணித்துக்கொண்டிருக்கிறது. ஏறத்தாழ 30 வருடங்களாக எமது நாட் டில் போர் நிகழ்ந்தது. அந்தப் போர் நிகழ்வதற்கு சில பல காரணங்கள் இருந்தன. போர் இடம்பெற்ற முறையை எல்லா விதங்களிலும் நாங்கள் அங்கீகரிக்கா விட்டாலும் கூட, அதற்குப் பல காரணங்கள் இருந்தமையை நாங்கள் மறுக்கமுடியாது.

போர் நடந்தமைக்கு சில காரணங்கள் இருந்தமையின் நிமித்தம்தான், இந்த நாட்டை ஆட்சி புரிந்தவர்கள், எந்தக்கட்சியாக இருந்தாலும் சரி, போர் நடத்தியவர்களுடன் பேச்சுக்கள் நடத்தினார்கள்.

போரை முடிவுக்குக் கொண்டு வர பல்வேறு பிரேரணைகள் முன்வைக்கப்பட்டன. வெவ்வேறு அரசுகளால் அவை மேற்கொள்ளப்பட்டன.

எமது நாட்டில் நாம் பல்வேறு பிரச்சினைகளை எதிர் நோக்குகின்றோம். அவ்வாறான பல்வேறு பிரச்சனைகளுக்குத் தீர்வு காணப்படவேண்டியிருக்கின்றது. பொருளாதாரப் பிரச்சினைகள், நாட்டினுடைய கடன் சுமை, நாட்டினுடைய வறுமை, நாட்டில் சட்டம், ஒழுங்கு நிறைவேற்றப்படாமல் இருந்த நிலமை, நாட்டினுடைய நிறுவனங்கள், நீதிமன்றம் சுதந்திரமாகச் செயற்பட முடியாமல் இருந்தமை, நாடாளுமன்றம் தனித்துவத்தை இழந்திருந்தமை என்பன காணப்பட்டன.

மறுபுறத்தில், போரின் காரணமாக எழுந்த காணிப்பிரச்சினைகள், காணாமல் ஆக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகள், கைதிகளின் பிரச்சினைகள் என பல்வேறு விதமான பிரச்சினைகள் காணப்பட்டன.

எல்லாவற்றுக்கும் மேலாக நாட்டில் ஒரு நிரந்தரமான அமைதியை ஏற்படுத்துவதற்கான முயற்சி தற்போது உள்ளது.

சமத்துவத்தின் அடிப்படையில் ஜனநாயகத்தினூடாக, புரிந்துணர்வின் ஊடாக, நீதியின் அடிப்படையில் நியாயத்தின் அடிப்படையில், இந்த நாட்டில் வாழுகின்ற சகல மக்களும் தாங்கள் இந்த நாட்டைச் சார்ந்தவர்கள், இந்த நாடு எங்களுக்கும் சொந்தமான நாடு என்பதைத் தலை நிமிர்ந்து சொல்லக்கூடிய நிலைமையை ஏற்படுத்தக்கூடிய வகையில் இந்த நாட்டில் அமைதி ஏற்பட வேண்டும்.

இந்த நாடு ஒரு காலகட்டத்தில் சர்வாதிகாரப்போக்கில் போய்க் கொண்டிருந்தது. ஜனநாயகம் புறக்கணிக்கப்பட்டது. சட்டம் ஒழுங்கு முதன்மையிடத்தை பெற்றிருக்கவில்லை. நீதி நியாயத்தின் அடிப்படையில் ஒரு அமைதியை ஏற்படுத்த வேண்டியது எமது கடமையாக இருக்கிறது-என்றார்.

இந்த நிகழ்வில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரம சிங்க உட்பட அரச உயர் மட்டத்தினர் கலந்து கொண்டனர்.

(ஐ-10-40)

# காணிகளற்ற குடும்பங்களுக்கு கப்பல்துறையில் காணியுடன் வீடு

## நேற்று முன்தினம் அடிக்கல் நடப்பட்டது

திருமலை, ஏப். 3



காணியற்ற 24 இளம் குடும்பங்களுக்கு காணிகள் வழங்கி, அவர்களுக்கான வீடுகள் அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை திருகோணமலையில் இடம்பெற்றது.

வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாச தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன், கிழக்கு மாகாண முதலமைச்சர் நசீர் அகமட், நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகருப், கிழக்கு மாகாணசபை வீதி அபிவிருத்தி அமைச்சர் ஆரியவதி கலபதி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

யொவுன் புரய இளைஞர் செயற்திட்டத்தின் ஓர் அம்சமாக, தமிழ் முஸ்லிம் சிங்கள இனங்களைச் சேர்ந்த தலா 8 குடும்பங்கள் வீதம் 24 குடும்பங்கள் இந்தத் திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளனர். திருகோணமலை பட்டினமும், சூழலும் பிரதேச செயலகப்பிரிவுக்கு உட்பட்ட கப்பல்துறை கிராமத்திலேயே இந்தக் காணிகள் வழங்கப்பட்டுள்ளன.

"எக்கமுதுகம" என்ற பெயரில் முன்னெடுக்கப்பட்டுள்ள இந்த வேலைத்திட்டத்தில், ஒரு குடும்பத்துக்கு தலா 4 இலட்சம் ரூபா வட்டியில்லாக் கடனும், 20 பேச் காணியும் வழங்கப்படுகிறது. இதன் மூலம் காணி பெற்றவர்களின் பங்களிப்புடன் 10 இலட்சம் ரூபாபெறுமதியான வீட்டை அமைத்து 6 மாதங்களுக்குள் திறப்பு விழா செய்வதற்கு ஆயத்தமாக வேண்டுமென தேசிய வீடமைப்பு அதிகார சபையின் திருகோணமலை முகாமையாளர் தி.திருக்குமார் தெரிவித்தார் (ஐ-10)

S.T.JOHN'S COLLEGE, JAFFNA

சென்.ஜோண்ஸ் கல்லூரியில் தரம் 12 இற்கான (A/L 2020 Batch) ஆங்கிலம் (விஞ்ஞானம், கணிதம், வர்த்தகம்) மற்றும் தமிழ் மொழி மூலத்துக்குரிய (விஞ்ஞானம், கணிதம், வர்த்தகம், கலை, தொழிநுட்பவியல்) விண்ணப்பப் படிவங்களை அலுவலகத்தில் 04.04.2017 ஆம் திகதி வரை பெற்றுக்கொள்ளலாம்.

TVEC

REGISTERED UNDER THE TERTIARY AND VOCATIONAL EDUCATION COMMISSION MINISTRY OF YOUTH AFFAIRS & SKILLS DEVELOPMENT

G.C.E O/L = NVQ 3
G.C.E A/L = NVQ 4

Sat for the O/L Exam last year, unable to proceed to A/Level and your future appears to be bleak and dull?

St.John's college continuing Education and St.John's Academy & school of technology are now a registered institute of the Tertiary and Vocational Education Commission to offer NVQ courses. Now you can climb up the NVQ ladder step by step and earn a degree even before your fellow class-mates!

Register for the following courses before the 8th of April 2017. Classes will commence on 17th April 2017.

ST.JOHN'S ACADEMY & SCHOOL OF TECHNOLOGY

- Computer Hardware Technician
- Computer Network Technician
- Electrical Wiring
- Plumbing

ST.JOHN'S CONTINUING EDUCATION

- Diploma in pre and Primary School Teacher Training.
- Introduction to working in an Office
- Certificate in Building Career skills.
- Certificate in Advancing Career Skills.
- Certificate in Sinhala Language.

For more details, contact, the Principal of St.John's College, Jaffna on 021 222 2432.
Director St.John's Academy & School of Technology on 021 321 6006.

# கிண்ணியாவில் டெங்கு நோயாளர்களை பார்வையிட்டார் அரச தலைவர் மைத்திரி

கொழும்பு, ஏப். 3



கிண்ணியாப் பிரதேசத்தில் டெங்கு நோய்த் தொற்றால் பலர் சிகிச்சை பெற்று நிலையில், அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை கிண்ணியாவுக்குத் திடீர் பயணம் மேற்கொண்டார்.

இந்தப் பயணத்தில், கிண்ணியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ள நோயாளிகளை அவர் பார்வையிட்டார். அங்குள்ள நோயாளிகள் அனுபவித்து வருகின்ற குறைபாடுகள் மற்றும் அவர்களுக்கு வேண்டிய தேவைகள் தொடர்பாக அரச தலைவர் மக்களைக் கேட்டறிந்தார்.

கிண்ணியா மருத்துவமனையைத் தரமுயர்த்துமாறு பழைய மருத்துவமனையின் முன்னே கடந்த 5 தினங்களாக கவனவீர்ப்புப் போராட்டம் மேற்கொண்டுள்ளோரையும் அரச தலைவர் சந்தித்துப் பேசினார் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டில் இனிமேல்தானா நல்லாட்சி ஏற்படப்போகிறது?

## கருணா அம்மான் கேள்வி



நல்லாட்சி என்று கூறிக்கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை ஏமாற்றும் அரசு, நாட்டு மக்களை ஏமாற்றமுடியாது. நாட்டில் இனி மேல் தானா நல்லாட்சி ஏற்படப்போகின்றது.

இவ்வாறு மீள்குடியேற்றத்துக்கான முன்னாள் பிரதியமைச்சரும் தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவருமான விநாயகமூர்த்தி முரளீதரன் (கருணா அம்மான்) கேள்வி எழுப்பியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் தற்போது ஏற்பட்டிருக்கும் உறுதியற்ற நிலைமைக்கு இந்த அரசுதான் காரணம்.

நாட்டில் எவ்வளவோ திணைக்களங்கள் அரச கூட்டுத்தாபனங்கள் உள்ளன. பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனங்களை மட்டும் தான் வழங்க வேண்டும் என்றில்லை. நாட்டில் புதிய வேலைகளை உருவாக்க வேண்டிய கடப்பாடு அரசுக்கு உள்ளது. ஆனால் இப்பொழுது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசுக்கு ஆதரவாக கைதட்டிக்கொண்டு எதிர்க்கட்சியாகவும் இருந்து கொண்டு 40 நாள்களாக போராடிவரும் பட்டதாரிகளை கவனத்தில் எடுக்கவில்லை.

இதற்கு அரசு மிக விரைவாக ஒரு தீர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். இதை விடுத்து அரசு தனது கைக்கூலிகளுக்கு பியர் தொழிற்சாலை அமைப்பதற்கும், மதுசார தொழிற்சாலை அமைப்பதற்கும் ஊக்கப்படுத்திக் கொண்டிருக்கிறதே தவிர , வேறு எதையுமே செய்ததாக இல்லை.

வாழைச்சேனை காகித தொழிற்சாலை தூர்ந்து போய்கொண்டிருக்கின்றது. அதை மீளக் கட்டியெழுப்பினாலே பல நூற்றுக் கணக்கானோருக்கு வேலைவாய்ப்பை வழங்கலாம். இந்த அரசு ஆட்டம் காணும் நிலையில் உள்ளது. அவர்களால் ஒரு நிலையான தீர்மானத்தை எடுக்க முடியாமல் திணறுகின்றனர். அதேபோல், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நல்லாட்சி- என்று கூறுபவர்களால் வருடக்கணக்கில் ஏமாற்றப்பட்டு வருகின்றார்கள் -என்றார்.

(ஐ-ய-46)

# ஐ.நா.அமைதிப்படையில் இலங்கை ராணுவத்தினர் அடுத்த மாதம் இணைவர்



கொழும்பு, ஏப். 3

மேற்கு ஆபிரிக்க நாடான மாலியில் ஐ.நா. அமைதிப்படையில் இணைந்து கொள்வதற்காக 200 இலங்கை இராணுவத்தினர் அடுத்த மாதம், கொழும்பில் இருந்து புறப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதுதொடர்பாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ரொஷான் செனிவிரத்ன தெரிவித்ததாவது:

மாலியில் ஐ.நா. அமைதிப் படையில் இணைந்து கொள்ளவுள்ள இலங்கைப் படையினர், காங்கேசன்துறையில் இருந்து சூரியவெவ வரையில் களப்பயிற்சியில் ஈடுபட்டனர். ஐ.நாவின் நியமங்களுக்கேற்ற ஆய்வுமுறைகளின் பின்னரே, மாலி செல்லும் இலங்கைப் படையினர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். மாலியில் இலங்கை இராணுவ பற்றாலியன் ஒன்றை ஐ.நா. அமைதிப்படையில் ஈடுபடுத்துவதற்கு அழைப்புவிடுக்கப்பட்டிருந்தது-என்றார்.

மனித உரிமை மீறல்களுடன் தொடர்பற்றவர்கள் என்பதை உறுதிப்படுத்துவதற்கான ஆய்வுகளை மேற்கொள்வதற்காக, இலங்கைப் படையினரை மாலிக்கு அனுப்பும் நடவடிக்கைகளை ஐ.நா. அதிகாரிகள் தாமதித்திருந்தனர். ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் சையிட் அல் ஹூசைன் கடந்த மார்ச் 22ஆம் திகதி சமர்ப்பித்த அறிக்கையில் இதுபற்றிக்கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-10)

# தமிழ் மக்களின் போராட்டத்துக்கு உலகநாடுகளின் ஆதரவு அவசியம்

## பிரிட்டன் தமிழர் பேரவை வலியுறுத்து

கொழும்பு, ஏப். 3

புலம்பெயர் வாழ் மக்கள், அறவழியில் போராடும் தமிழ் மக்களுக்கு உலக நாடுகளின் பாதுகாப்பைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். அதன் மூலம் எமது மக்களின் நீதியான போராட்டம் மேலும் வளரும். ஒடுக்கப்பட்ட எமது மக்களின் போராட்டம் நிச்சயம் பன்னாட்டு அங்கீகாரத்தைப் பெறும்.

இவ்வாறு பிரிட்டன் தமிழர் பேரவையால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

சுதந்திரம் எமது பிறப்புரிமை. அதனை யார் தட்டிப் பறித்தாலும் அதனை மீட்டெடுக்கப் போராடத் தயங்கலாகாது. நாடுகளின் அங்கீகாரம் தான் எமது விடுதலையை உறுதி செய்யும். உலக ஒழுங்கில் நாடாக நாம் இணைய வேண்டின், ஒரு நாட்டுக்கான தகுதி உடையவர்களாக ஏனைய நாடுகள் எம்மை அங்கீகரிக்க வேண்டும். ஒடுக்கப்பட்ட எமது மக்களுக்கு விடுதலை வேண்டும் என்ற தாகம் முற்றிலும் நியாயமானதே. ஆனால் நாடுகளை எமது பக்கம் திரும்புவதற்கான வேலை பிரம்மாண்டமானது. எமக்குள் மட்டும் சர்ச்சை செய்து கொள்வதும், தமிழ் மக்களுக்குள்ளேயே தமது கருத்துடன் ஒத்து வராதவர்கள் அல்லது தமக்குக் கீழ் வராதவர்களை எதிரியாகவும், துரோகியாகவும் சித்திரிப்பவர்கள் நாடுகளின் ஆதரவைத் தமிழ் மக்கள்பால் திருப்புவது மிகக் குறைவு. நாடுகளின் ஆதரவை எமது மக்களின் கோரிக்கைகளிலுள்ள நியாயத்தை ஆதாரபூர்வமாக எடுத்துரைத்து அவர்களை எமது நட்பு நாடாக மாற்ற வேண்டும் என்பதே எமது கொள்கையாகும்.

அடுத்தவர்களைக் குறை குற்றம் கூற ஒரு நிமிடம் போதும். ஆனால் அது எமது போராட்டத்தைச் சின்னாபின்னமாக்கி தமிழ் மக்களின் சக்தியைச் சிதறடிக்கும். இது தமிழினத்தின் எதிரியின் கையை வலுப்படுத்தும். ஆனால் நாடுகளை எமது பக்கம் திருப்புவது மிகக் கடினமானது. அதில் தமது சக்தியை ஒருங்கு திரட்டுபவர்களே இன்று எமக்குத் தேவை. இதனை ஏற்றுக் கொள்பவர்கள் செயலில் அதனைக் காட்டுங்கள். நாடுகளை வென்றெடுக்க யார் புத்திபூர்வமாக அர்ப்பணிப்போடு செயற்படுகின்றார்களோ அவர்களுக்குத் தங்களால் முடிந்த ஆதரவை வழங்குங்கள்.

பன்னாட்டு நிலைமைகள், பூகோள அரசியல் என்பனவற்றை நுட்பமாக அறிந்து, எமது போராட்டத்துக்கான நாடுகளின் ஆதரவு திரட்டப்பட வேண்டும். நேரடியாகச் செயலில் ஈடுபட்டு அந்தப் பட்டறிவுடன் வேலை செய்ய அல்லது கருத்துக்களை எடுத்தியம்ப வேண்டும். நுனிப் புல் மேய்வது போல புத்தகங்களிலோ, இணையத் தளங்களை வாசித்தோ, ஊகித்தறிதல் மூலமோ பன்னாட்டு நகர்வுகளை முடிவு செய்தல் எம்மைச் சரியான திசையில் நகர விடாது. நாடுகளைச் சபிப்பதும், திட்டுவதும் தமிழர்களைத் துரோகிப் பட்டம் சுமத்துவதும் தான் தெரிவு என்றால், பெரும்பாலான எமது மக்கள் அதனைக் கணக்கிலெடுக்கப் போவதில்லை.

எமது விடுதலைப் போராட்டத்தில் நெருப்பாக எரிந்தவர்கள், கருகித் தீய்ந்து போனவர்கள், அங்கங்களை இழந்தவர்கள் எல்லோரையும் ஒரு கணம் எமது கண்களை மூடி தியானிப்போம். அவர்கள் கனவு மெய்ப்பட வைப்பதே எமக்காக தமது இன்னுயிரைத் தியாகம் செய்தவர்களுக்கு நாம் செய்யும் அதியுயர்ந்த மரியாதையாகும்-என்றுள்ளது. (ஐ-10)

# அரிசிக்கான இறக்குமதி வரிச்சலுகையை நீடிக்க முடிவு

அரிசி இறக்குமதிக்கான வரிச்சலுகையை எதிர்வரும் மே மாதம் 31ஆம் திகதி வரை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று நிதி அமைச்சு அறிவித்துள்ளது. இதற்கான வர்த்தமானி அறிவித்தலும் வெளியிடப்பட்டுள்ளது.

ஏற்கனவே வழங்கப்பட்டிருந்த இந்த வரிச்சலுகையானது, கடந்த மார்ச் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவுக்குக் கொண்டு வரப்படவிருந்தது. இதனூடாக இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ கிராம் அரிசிக்குச் சிறப்பு வர்த்தகப் பொருளுக்கான வரியாக 5 ரூபா மாத்திரமே அறவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ-10)

உ
சிவமயம்
"நாகதம்பிரான் நல்லருள் நாடெங்கும் பாலிக்குக"


வரலாற்றுச் சிறப்பு மிக்க
கிளி/கரைச்சி புளியம் பொக்கணை
நாகதம்பிரான் ஆலயம்
ஆண்டுற்சவ பங்குனி உத்தரப் பொங்கல் விழா
09.04.2017 ஞாயிற்றுக்கிழமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனைவரும் ஒன்றிணைந்தாலே எமக்கான தீர்வைப் பெற முடியும்

*வடமாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஏப்.3
ரோம் உடன்படிக்கையை அரசு ஏற்றுக் கொண்டிருந்தால் அனைவரும் ஒன்றிணைந்திருந்தால் 2009 ஆம் ஆண்டு நடந்த போர்க் குற்றங்கள் தொடர்பான விசாரணையை வலியுறுத்தி ஜெனிவாவில்போராடியிருக்கத் தேவையில்லை. நேரடியாக நெதர்லாந்தில் உள்ள பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றில் எமக்கான தீர்வுகளைப் பெற்றிருப்போம்.
இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.
யாழ்ப்பாணம் ரில்கோ விடுதியில் கடந்த வெள்ளிக்கிழமை நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
ஜெனிவாவில் நடைபெற்ற மனித உரிமைகள் சபையின் 34ஆவது அமர்வில் பங்கேற்றோம். அங்கு பாதுகாப்பற்ற நிலையே எமக்கு இருந்தது. பன்னாட்டு விசாரணையை வலியுறுத்திப் பேசினோம். ஆனால் அங்கிருந்தவர்கள் பன்னாட்டு விசாரணை தேவையில்லை என்றே பேசிக் கொண்டிருந்தனர். நாம் ஒன்றாகச் சேர்ந்து குரல் கொடுக்காமையே அதற்குக் காரணம். ரோம் உடன்படிக்கையில் கைச்சாத்திட வேண்டும்என்றுவடக்கு மாகாண சபை அப்போதிருந்த தலைமை அமைச்சரைக் கோரியது. ஏனைய நாடுகளும்உடன்படிக்கையில் கைச்சாத்திட வேண்டும் என்று வலியுறுத்தின. ஆனால் இன்னமும் அரசு கைச்சாத்திடவில்லை.
நாம் கூட்டாக இணைந்து குரல் கொடுக்க வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும்இணைந்து செயற்பட வேண்டும். என்றார்.
செய்தியாளர் சந்திப்பில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரனும் கலந்து கொண்டார்.
அவர் தெரிவித்ததாவது:
எமக்கான நீதியைத் தேடி நாம் போராடுகின்றோம். பன்னாட்டு விசாரணை தேவை என்று வலியுறுத்துகின்றோம். ஐ.நாவில் எமக்கு எதிராகப் பலர் செயற்பட்டனர். எமக்கான தீர்வை வழங்குவதில் அரசும், உலகமும் பின்வாங்குவதைத் தெளிவாக உணர்கின்றோம். ஆட்சி மாற்றத்துக்காக எம்மைப் பயன்படுத்தியவர்கள் இன்று பொருட்படுத்தாது பேசுகின்றனர். தமிழ் ஊடகவியலாளர்கள் சார்பாகக் கலந்து கொண்டவர்களும் அரசுக்குக் கால நீடிப்பு வழங்குவது தொடர்பாகவே பேசினர்- என்றார். (ற21)





# காணாமல் ஆக்கப்பட்டோரை வெளிப்படுத்த வலியுறுத்தி

*உறவுகளின் போராட்டம் தொடர்கின்றது*

கிளிநொச்சி, ஏப்.3
கையளிக்கப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டவர்களை வெளிப்படுத்தவும், விடுவிக்கவும் வலியுறுத்தி அவர்களின் உறவினர்கள் நடத்தும் தொடர்போராட்டம்ஒருமாதம்கழிந்தும் தொடர்கின்றது.
காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் 5 மாவட்டங்களில் தொடர்ச்சியாகப் போராட்டம் நடத்தப்பட்டு வருகின்றது. அவர்களுக்கு எந்தவிதமான தீர்வுகளும் வழங்கப்படாத நிலையில் உடல், உளநெருக்கடிகளுக்கு மத்தியில் அவர்கள் போராட்டத்தைக் கைவிடாது தொடர்கின்றனர்.
வடக்கு மாகாணத்தில் கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் தொடர் போராட்டங்கள் நடக்கின்றன. கிழக்கில் திருகோணமலை மாவட்டத்தில் போராட்டம்நடத்தப்படுகின்றது. கிளிநொச்சியில் நடத்தப்படும் போராட்டம் 42 நாள்களைக் கடந்துள்ளது. வவுனியாவில் 38 நாள்களாகப் போராட்டம்நடத்தப்படுகின்றது. முல்லைத்தீவு மாவட்டத்தில்26ஆவது நாளாகவும், யாழ்ப்பாணத்தில் 19ஆவது நாளாகவும், திருமலையில் 28 ஆவது நாளாகவும் போராட்டங்கள் நடத்தப்படுகின்றன.
வவுனியாவில் போராட்டம் நடத்துபவர்களுடன் கொழும்பு அமைச்சர் ராஜித சேனாரத்னவும் அவரது குழுவினரும் நேற்றுக் கலந்துரையாடினர். அந்தக் குழுவில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர், வடக்கு மாகாண ஆளுநர் ஆகியோரும் உள்ளடங்கியிருந்தனர்.
யாழ்ப்பாணம், மருதங்கேணியில் தொடர் போராட்டம் நடத்துபவர்களை வடக்குக் கல்வி அமைச்சரும், வடக்கு மாகாண சபை உறுப்பினரான பசுபதிப்பிள்ளையும் நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினர்.
தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரை போராட்டத்தைக் கைவிடப்போவதில்லை என்று தெரிவித்த காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், இந்த விவகாரத்துக்கு விரைந்து தீர்வு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்என்றும்கோரிக்கை விடுத்தனர். தமதுபோராட்டத்துக்கு அனைத்துத் தரப்பினரும் ஆதரவு வழங்க வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தனர். (ற-21,7,35,26)

## காணாமல் ஆக்கப்பட்டோர் விவரங்கள் இல்லையாம்!

*திரட்டிச் சமர்ப்பிக்குமாறு கேட்கிறார் அமைச்சர் ராஜித*

வவுனியா, ஏப்.3
காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விவரங்களை திரட்டிச் சமர்பியுங்கள். அவர்களில் உயிருடன் இருப்பவர்களை நிச்சயம் மீட்டுத் தருவேன் என்று கூறினார் கொழும்பு அமைச்சர் ராஜித சேனாரத்ன.
வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் கொழும்பு அரசுக்கு ஏற்கனவே விவரங்கள் கையளிக்கப்பட்டுள்ள நிலையில் அமைச்சர் ராஜித இவ்வாறு தெரிவித்தார்.
வவுனியாவில் தொடர் போராட்டம் நடத்திவரும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களை அமைச்சர் நேற்றுச் சந்தித்தார். அமைச்சருக்கு இதுவரை நடைபெற்ற விடயங்களை அவர்கள் தெளிவுபடுத்தினர். அதன்பின்னரே இவ்வாறு தெரிவித்தார்.
"காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விவரங்களைச் சேகரித்து வடக்கு மாகாண சுகாதார அமைச்சரிடம் கையளியுங்கள்.
இவ்வாறு காணாமல் ஆக்கப்பட்டார்கள் என்ற விவரங்களை உள்ளடக்கிய பூரணமான அறிக்கையைப் பெற்று வடக்கு சுகாதார அமைச்சர் என்னை வந்து சந்திப்பார். நான் அலுவலக ரீதியாகவும், அலுவலக ரீதியற்றும் அவர்களை தேட நடவடிக்கை எடுப்பேன். அவர்களில் உயிருடன் இருப்போரை நிச்சயமாக மீட்டுத் தருவேன்" என்று அமைச்சர் கூறினார்.
வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் இதற்கு முன்னரும் உணவு ஒறுப்புப் போராட்டம் நடத்தினர். அப்போது காணாமற் ஆக்கப்பட்டவர்களின் விவரங்களை கொழும்பு சென்று கையளித்தனர். (ற21)

## இயேசுவே இறையன்பின் பிரதிபலிப்பு.

ஆலயத்தில் ஒருவர் உச்சத்தொனியில் முழங்கிக் கொண்டிருந்தார் "கடவுள் பயங்கரமானவர், தண்டனைத் தீர்ப்பு வருகிறது நரகத்தில் தகிக்கும் 2000 டிகிரி செல்சியஸ் வெப்பத்தில் சிக்கிக் கொள்ளாதீர்கள்" மக்களை அச்சுறுத்தி கடவுளைக் கடின நீதிபதியாகவும், தண்டிக்கும் காவலராகவும் வர்ணிக்கும் போக்கு சரியானதா? பலர் கடவுளைத் தூரத்தில் வைத்து அந்நியப்படுத்தி இறை மனித உறவில் விரிசலை உருவாக்குகிறார்கள். கடவுள் தண்டிப்பவர். பாவிகளை அழித்தொழிப்பவர், கணக்குப்பார்த்துப் பழிதீர்ப்பவர் போன்ற உருவகங்களை பழைய ஏற்பாட்டு நூல்களில் பார்க்கிறோம். ஆனால் அவற்றில் இழையோடும் கடவுளின் அன்பு முகத்தை இருட்டடிப்புச் செய்து விடுகின்றோம்.
கடவுளை அந்நியப்படுத்திப் பழகிப்போன மக்களுக்கு என் வார்த்தையைக் கேட்டு என்னை அனுப்பிய தந்தையை நம்புவோர் நிலைவாழ்வைக் கொண்டுள்ளனர் என்று தந்தையை அறிமுகப்படுத்தி அவரைப்பறறிய புரிந்துணர்வின் தள நகர்வைக் கொண்டுவருகிறார் இயேசு. இயேசுவின் இந்தப்புதுமையான போக்கு அவருக்கு எதிர்ப்பைச் சம்பாதித்துக் கொடுத்தாலும் அன்பையும், மன்னிப்பையும் பரவலாக்கியது. இயேசுவின் தற்கையளிப்புநிறைந்த அன்பு



கடவுளின் அன்புமுகத்தை அவரில் வெளிப்படுத்துகின்றது. இயேசுவின் பரிவிரக்கமும் தந்தையின் பாசமும் இரண்டறக் கலந்து எங்கும் எதிலும் கலந்து நிற்பவர்தான் நம் கடவுள் என நம்பி அவரது அன்பை பிறருடன் பகிர்ந்து வாழ்வோம்.

எஸ். யேசுதாஸ்
கொழுமபுத்துறை

## நீங்காத நினைவுடன்
# 21 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் பஞ்சாட்சரம்
**தனபாலசிங்கம் (இதய கீதன்)**

மலர்வு
11.09.1973



உதிர்வு
03.04.1996

இதமான் இளமலர் ஒன்று சருகாகி
இன்றுடன் ஆண்டதுவோ இருபத்தி ஒன்று !
இதயத்தின் வலியதுவோ இன்றும்
இமைப்பொழுது மாறாது என் இதயம் துடிப்பதுவோ

நீங்காத நினைவுகளால் நீடிய காலங்களாய்
என்நெஞ்சைக் கீறி பச்சை குத்திய என் இதய கீதனே
என் இதயம் வெடிப்பதையும் வலிப்பதையும்
காணாயோ என் மகனே

பள்ளிக்கு நீ சென்ற காலம் மீண்டு நீ திரும்பும்வரை
பாதையினைப் பார்த்தவாறு பலவேளை மறந்தேனே
என் மார்போடு முட்டிமோதி மகிழ்ந்த அந்த நாள்
பூமியில் வைக்கச் சொல்லி போனதேன் என் மகனே

என் இதயத்தைப் பிளந்து வந்த என் இதய கீதா
என் முத்து மலரே நீ மறைந்து 21 ஆண்டுகள் ஆனாலும்
[illegible]
[illegible]

தந்தை நான் உன் நினைவால் வாடுகையில்
ஆறுதலாய் எனக்கிருந்த உன் அன்னையும்
என்னைத் தவிக்க விட்டு உன்னிடத்தில் வந்துவிட்டார்
என் நெஞ்சில் குருதி இல்லை தவிக்கிறேன்என் மகனே!

என் மீது துயில்வாயா கண்மலரே
என்னையும் உன்னோடு சேர்ப்பாயா?
காலமெல்லாம் காத்திருப்பேன்
நீ வருவாயா? இல்லை நான் வருவேனா?

மாசற்ற உன் நெஞ்சில்
மாற்றான் ஏன் ஆசைகொண்டான்?
எங்கள் உயிர் உள்ளவரை உன்
நினைவுகள் மாறாது மறையாது தொடரட்டும்

**தந்தை, சகோதரர், மருமக்கள்.மைத்துனர்.**
**ஞானி மடம், பூநகரி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோசூல் மக்களுக்கு உதவுங்கள்

## அழைக்கிறார் குத்தேரஸ்

பக்தாத், ஏப். 3
மோசூல் நகர மக்களுக்கு உதவ முன்வாருங்கள் என்று வல்லரசு நாடுகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் குத்தேரஸ்.
ஈராக், சிரிய நாடுகளின் சில பகுதிகளைக் கைப்பற்றி அவற்றை ஒரு தனிநாடு என்று அறிவித்துள்ளது ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு. அந்த அமைப்பின் பிடியில் ஈராக்கின் இரண்டாவது பெரிய நகரான மோசூல் இருந்தது. நகரை மீட்கும் போர் கடந்த பெப்ரவரி மாதம் ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது. இதுவரை கிட்டத்தட்ட 4 லட்சம் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். அகதிகள் முகாம்களை குத்தேரஸ் நேற்றுமுன்தினம் நேரில் சென்று பார்வையிட்டார். இதன்பின் கருத்துத் தெரிவிக்கையிலேயே உலக நாடுகளுக்கு குறிப்பாக வல்லரசு நாடுகளுக்கு குத்தேரஸ் அழைப்பு விடுத்தார்.
மோசூல் நகர் மக்களுக்கு உதவி செய்ய எங்களிடம் போதிய பொருள் வசதி இல்லை. மக்களின் தேவையுடன் ஒப்பிடுகையில் 8 சதவீதம்தான் எம்மிடம் பொருள்வசதி உள்ளது. எனவே மோசூல் நகர மக்களுக்கு உலக நாடுகள் குறிப்பாக வல்லரசு நாடுகள் உதவிட முன்வர வேண்டும் என்று குத்தேரஸ் மேலும் தெரிவித்தார். (ம)





# கொலம்பியாவில் பெரும் துயரம்

# மழையின் தாண்டவத்தால் 254 பேர் பரிதாபச் சாவு

## மீட்புப் பணி தீவிரம்

போகோட்டா, ஏப். 3
கொலம்பியாவில் தொடர்ச்சியாகப் பெய்த மழையின் காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்காலும், அதைத் தொடர்ந்து ஏற்பட்ட நிலச்சரிவாலும் நேற்று நண்பகல் வரையிலுமான நிலவ ரத்தின்படி 254 பேர் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.
தென்னமெரிக்க கண்டத்தில் உள்ள நாடுகளில் ஒன்றான கொலம்பியாவில் உள்ள புட்டுமயோ மாகாணத்தில் பெய்து வரும் கனமழை காரணமாக அப்பகுதியில் உள்ள ஆறுகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. இதனால், ஆற்றங்கரைகளின் ஓரமுள்ள கிராமப் புறங்களில் நேற்று முன்தினம் கடும் நிலச்சரிவு ஏற்பட்டது. 95 பேர் சாவடைந்தனர் என்று முதல்கட்டமாகத் தெரிவிக்கப்பட்டது. மீட்புப் பணிகள் தொடர்ந்து வந்த காரணத்தால் உயிரிழப்பு மேலும் அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டிருந்தது.
நேற்றுமதியம் வரையிலுமான நிலவரத்தின்படி சாவு எண்ணிக்கை 254 ஆக உயர்ந்தது.
இன்னும் பலர் புதையுண்டு போயுள்ளனர் என்றும் அவர்களை மீட்கும் பணியில் ராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர் என்றும் அந்த நாட்டு அரசு அறிவித்திருந்தது.
காயங்களுடன் மீட்கப்பட்ட கிட்டத்தட்ட 400 பேர் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டனர். அவர்களைத் தேடும்பணி நடந்துவருவதால் சாவு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டது. (ம)

# 333 திமிங்கில...

டோக்கியோ, ஏப். 3
அண்டார்டிக் கடலில் 333 மிங்கே வகை திமி...
ஜப்பான் கடற்படை ஆராய்ச்சி என்ற முறை...
யாடியுள்ளது. இதற்கு உலகளவில் கடும் க...
பியுள்ளது.
சீனா மற்றும் ஜப்பான் நாடுகள் ஆராய்ச...
அண்டார்டிக் கடலில் மிங்கே வகை திமிங்கில...
யாடி வருகின்றன. ஜப்பானின் 5 கப்பல்கள்...
டையில் 333 திமிங்கிலங்கள் வேட்டையா...
என்பது தெரியவந்துள்ளது.
அந்த நாட்டின் இந்த நடத்தைக்கு உலக ...
கண்டனங்கள் வந்து குவிகின்றன.
எனினும், மிங்கே வகை திமிங்கலத்தின் இ...

# தமிழக விவசாயிகளுக்... ஸ்டாலின் நேரில் ஆதர...



புதுடெல்லி, ஏப். 3
பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து ...
தியத் தலைநகர் புதுடில்லியில் கிட்டத்தட்ட மூன்...
வார காலமாக தமிழக விவசாயிகள் தொடர்...
போராட்டத்தில் ஈடுபட்டுவரும் நிலையில் அ...
களின் போராட்டத்துக்கு தி.மு. கழகத்தி...
செயல் தலைவரும் தமிழக சட்டசபையி...
எதிர்க்கட்சித் தலைவருமான ஸ்டாலின் நே...
சென்று தனது ஆதரவைத் தெரிவித்தார்.
தேசிய, தனியார் மற்றும் கூட்டுறவு வங்...
ளில் விவசாயிகள் பெற்றுள்ள பயிர்க்கடன்...
அனைத்தையும் தள்ளுபடி செய்வது, வற...
நிவாரணம் வழங்குவதில் சிறுகுறுபெரு வி...
சாயிகள் என வித்தியாசம் காட்டாமல் ஏக்...
ஒன்றுக்கு 25 ஆயிரம் ரூபாய் வீதம் அனை...
ருக்கும் வறட்சி நிவாரணம் வழங்குவது, வி...
சாயத் தொழிலாளர்களுக்கு நிவாரணம் வழ...
குவது, காவிரி மேலாண்மை வாரியம் அமை...
தல், அண்டை மாநிலங்களிடமிருந்து தமி...
கத்திற்கு கிடைக்க வேண்டிய நீர் உரிமை...
களை நிலைநாட்டுவது, நெடுவாசலி...
இயற்கை எரிவாயுத் திட்டத்துக்கு ஒப்பந்...
போட்ட மத்திய அரசுக்கு கண்டனம், மீன...
களின் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு எ...
பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைக...
முன்வைத்து தமிழக விவசாயிகள் டெல்லியி...
கடந்த 14 ஆம் திகதி முதல் போராட்டம் நட...
வருகின்றனர். இவர்களின் போராட்டத்த...
நாளுக்குநாள் ஆதரவு பெருகிவரும் நிலையி...
ஸ்டாலின் நேற்று நேரில்சென்று தனது ஆ...
வைத் தெரிவித்தார். (...

# பார்க்குக்கு விடுதலை கோரி: சியோலில் மக்கள் போராட்டம்

சியோல், ஏப். 3
தென்கொரியாவின் முன்னாள் அதிபர் பார்க் கியூன் ஹை கைது செய்யப்பட்டுள்ள நிலையில் அவரது விடுதலையை வலியுறுத்தி தலைநகர் சியோலில் பல்லாயிரக்கணக்கான மக்கள் இணைந்து நேற்று முன்தினம் போராட்டம் நடத்தினர்.
பார்க் கியூன் ஹை அதிபர் பொறுப்பில் இருந்த போது ஊழல் மோசடிகளில் ஈடுபட்டார். தனது தனிபட்ட இலாபத்துக்காக அரச விடயங்களை சில நிறுவனங்களுக்கு வழங்கினார் என்று எதிரிக்கட்சிகள் ஆதாரங்களுடன் நிரூபித்தன.



இதையடுத்து பார்க் பதவி விலகவேண்டும் என்ற கோரிக்கைகள் வலுப்பெற்றன. அவருக்கு எதிர்ப்புத் தெரிவித்து லட்சக்கணக்கான மக்கள் இணைந்து சியோலில் பேரணிகளை நடத்தினர். அவர்கள் பார்க்கை கைதுசெய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தினர். இதனால் தென்கொரிய நாடாளுமன்றம் பார்க் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டுவந்து பதவியில் இருந்து நீக்கியது.
பார்க்கின் ஊழல் மோசடிகள் தொடர்பில் தென்கொரிய ஊழல் தடுப்புக் கண்காணிப்பகம் விசாரணைகள் நடத்தியது. அவர் குற்றவாளி என்பது உறுதிப்படுத்தப்பட்டு அறிக்கை வழங்கப்பட்டதும் சியோல் மத்திய நீதிமன்றத்தின் கட்டளைக்கு அமைய பார்க் அண்மையில் கைதுசெய்யப்பட்டார். இந்த நிலையில் அவரது விடுதலையை வலியுறுத்தி நேற்றுமுன்தினம் பல்லாயிரக்கணக்கான மக்கள் இணைந்து பேரணியை நடத்தினர்.
பார்க் நிரபராதி விரைவில் [illegible] மீண்டும் அதிபர் பதவியில் இருத்தப்பட வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தினர். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழகம் இன்று முடங்கும்

சென்னை, ஏப். 3
பல்வேறுபட்ட கோரிக்கைகளைமுன்வைத்து இந்திய மத்திய அரசுக்கு எதிராக தமிழகத்தில் இன்று பரவலாகப் போராட்டங்கள் நடத்தப்படவுள்ளன என்று சில இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

பல்வேறுபட்ட கோரிக்கைகளைமுன்வைத்தும் இந்திய மத்திய அரசின் நகர்வுகளைக் கண்டித்தும் இந்தியத் தலைநகர் புதுடில்லியில் தமிழக விவசாயிகள் கடந்த 14 ஆம் திகதி முதல் போராட்டம் நடத்தி வருகின்றனர். அவர்களின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து, மத்திய அரசுக்கு அதிக அழுத்தத்தை வழங்கும் விதத்திலும் தமிழகத்தில் பரவலாக இன்று கடையடைப்புப் போராட்டம் நடத்தப்படவுள்ளதாகத் தெரிகிறது. இந்தக் கடை அடைப்புக்கு வணிகர் கழகங்கள் பலவும் தமது ஆதரவைத் தெரிவித்துள்ளன. போராட்டத்தில் இளைஞர்களும் மாணவர்களும் கைகோர்த்தால் ஜல்லிக்கட்டு ஆதரவு மெரீனாப் போராட்டம்போல் இந்தப்போராட்டமும் எழுச்சிகாண வாய்ப்புள்ளது என்றும் சொல்லப்படுகிறது. (ம)



நேபாளத்தின் ஜாத்ரா திருவிழா அண்மையில் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. நிகழ்வின் ஒரு பகுதியா... இராணுவச் சிப்பாய்களின் குதிரையோட்டப் பந்தயமும் இடம்பெற்றது. பல்லாயிரக்கணக்கான மக்கள் நேரடியா... சென்று விழாவை கண்டுகளித்தனர் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

# ...லங்களை ஜப்பான் வேட்டை; உலகளவில் கண்டனங்கள்

...கைதிமிங்கிலங்களை
... முறையில் வேட்டை
...டும் கண்டனம் எழும்

...ஆராய்ச்சி என்று கூறி
...மிங்கிலத்தை வேட்டை
...பல்கள் நடத்திய வேட்
...டையாடப்பட்டுள்ளன

... உலக அளவில் கடும்

...த்தின் இனப்பெருக்கம்



மற்றும் ஊட்டச்சத்து சுழற்சி போன்ற ஆராய்ச்சிக்காகத்தான் வேட்டையாடுகிறோம். வேட்டையாடப்பட்ட ஆண், பெண் திமிங்கிலங்கள் அனைத்தும் முதிர்ச்சியடைந்தவை. இதனால் அவற்றின் இனப்பெருக்கம் மற்றும் எண்ணிக்கையில் எந்த மாற்றமும் நிகழாது என்று ஜப்பான் தெரிவித்துள்ளது. கடந்த 2014 ஆம் ஆண்டு ஜப்பான் திமிங்கில வேட்டையில் ஈடுபடக்கூடாது என்று பன்னாட்டு நீதிமன்றம் தீர்ப்பு அளித்தது. அந்த ஒரு வருடம் மட்டும் வேட்டையை நிறுத்திய ஜப்பான், அடுத்தவருடமே வேட்டையை ஆரம்பித்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

# 150 ஆயுததாரிக... கொன்று குவிப்பு

ஈராக்கின் மோசூல் நகரில் அரச படைக... திய வான் தாக்குதலில் ஐ.எஸ்.ஐ.எஸ். ஆ... ரிகள் கொன்று குவிக்கப்பட்டனர். ஈராக... மோசூல் நகரில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு மு... மிட்டுள்ளது. அந்த அமைப்பின் பிடியில் இரு... கிழக்கு மோசூல் மீட்கப்பட்டுவிட்டது. மேற்கு மோசூலுக்கான போர் தற்போது நடைபெற்று வருகிறது. இந்த நிலையில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட வான் தாக்குதலில் 150 ஆயுததாரிகள் சாவடைந்தனர் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. கொல்லப்பட்ட ஆயுததாரிகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம)

...ளுக்கு
...தரவு



...வைத்து இந்
...ட்டமூன்று
... தொடர்ந்து
...யில் அவர்
...கழகத்தின்
...சபையின்
...மின் நேரில்
...த்தார்.
...வு வங்கிக
...க்கடன்கள்
...து. வறட்சி
...பெரு விவ
...மல் ஏக்கர்
... அனைவ
...தவது. விவ
...ணம் வழங்
...ம் அமைத்
...ந்து தமிழ
... உரிமை
...வாசலில்
... ஒப்பந்தம்
...ம். மீனவர்
... தீர்வு என்
...கைகளை
...டெல்லியில்
...டம் நடத்தி
...ாட்டத்தக்கு
... நிலையில்
...னது ஆதர
(ம)


## வடமராட்சி மக்களின் நலன் கருதி
## P.P.T Express இன் மகத்தான சேவை

கொழும்பு - யாழ்ப்பாணம் பேருந்து சேவையில் முன்னணி வகிக்கும் P.P.T எக்ஸ்பிரஸ் நிறுவனம் புத்தம் புதிய அதி சொகுசு பஸ்களை (விமானத்தில் இருப்பது போன்றது) சேவையில் ஈடுபடுத்தியுள்ளது.

யாழ்ப்பாணம் கொழும்பு மக்களுக்காக அதி உன்னத சேவை நடாத்தும் P.P.T நிறுவனம் பிரயாணிகளின்நலன் கருதி தனது சேவையை மேம்படுத்தியுள்ளது.

யாழ் - கொழும்பு
கொழும்பு - யாழ்
12 மணித்தியால
பொதிகள் சேவை

முதலாவது பேருந்து: யாழ்ப்பாணத்திலிருந்து இரவு 8.00 மணிக்கு கொழும்பு நோக்கி புறப்படும்.

இரண்டாவது பேருந்து: **பருத்தித்துறையிலிருந்து இரவு 8.00 மணிக்கு** புறப்பட்டு நெல்லியடி, அச்சுவேலி, கோப்பாய், இருபாலை, நல்லூர் ஊடாக யாழ்ப்பாணம் வந்து யாழ்ப்பாணத்திலிருந்து இரவு 9.00 மணிக்கு கொழும்பை நோக்கிப் புறப்படும்.

அதேபோல் - முதலாவத பேருந்து வெள்ளவத்தையில் இருந்து இரவு 8.00 மணிக்கு புறப்பட்டு யாழ்ப்பாணம் வந்து காங்கேசன்துறை வீதி வழியாக காங்கேசன்துறை சென்றடையும்.

இரண்டாவது பேருந்து - வெள்ளவத்தையில் இருந்து இரவு 9.00 மணிக்கு புறப்பட்டு யாழ்ப்பாணம் வந்து பருத்தித்துறை வீதி வழியாக பருத்தித்துறையை சென்றடையும்.



ஆசனப் பதிவுகளை இங்கே மேற்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம்: 0775731318
183,கே.கே.எஸ் வீதி, 021 492 3240

பருத்தித்துறை: 0775736003
அரசடி லேன் பருத்தித்துறை, 021 492 3724

கொழும்பு: 0775755175
182,சென்றல் றோட், கொழும்பு -12
0112 320336

வெள்ளவத்தை: 0766036204
296, A1, காலி வீதி, கொழும்பு -06
0112364999


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த துறைமுகங்களை இந்தியாவின் ஒத்துழைப்புடன் அபிவிருத்தி செய்ய நடவடிக்கை

## அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவிப்பு



“கொழும்புகிழக்கு கொள்கலன் முனையத்தில் இந்தியா முதலீடு செய்து கொண்டு இலங்கை துறைமுக அதிகார சபையுடன் இணைந்து அதனை இயங்குநிலைபெறச் செய்ய வேண்டும் என்பதான எதிர்பார்ப்பை இலங்கை அரசு கொண்டுள்ளது.”

இலங்கையில் உள்ளதான கேந்திர முக்கியத்துவம்வாய்ந்ததுறைமுகங்களை இந்தியாவின் ஒத்துழைப்புடன்அபிவிருத்திசெய்வதற்கானநடவடிக்கைகள்முன்னெடுக்கப்படவுள்ளதானகருத்துதுறைமுகங்கள் அமைச்சர் அர்ஜுன ரணதுங்கவால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

அம்பாந்தோட்டைதுறைமுகத்தை சீனாபெற்றுக்கொள்ளவுள்ளநிலையிலே இலங்கையின் மூன்று துறைமுகங்களின் அபிவிருத்தியில் இந்தியாவின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக கொழும்பு, திருகோணமலை மற்றும் காங்கேசன்துறை ஆகியதுறைமுகங்களேஇவ்வாறு இந்திய உதவியுடன் அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாக கூறப்படுகிறது.

இந்தியாவின் செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அண்மையில் அளித்துள்ளதான நேர்காணலிலேயே அவர்இதனைக்குறிப்பிட்டுள்ளார்.

மேலும், "கொழும்புத் துறைமுக கிழக்குமுனையம்தொடர்பில்இந்தியா அதீத ஆர்வத்தை வெளிப்படுத்தியுள்ளது. கொழும்புத் துறைமுகம் வழியாக 75 வீதமான கொள்கலன்கள் இந்தியாவுக்கே செல்கின்றன. கொழும்புத் துறைமுகத்தில் பங்காளராக இணைய இந்தியா எதிர்பார்க்கிறது.

உலகின் ஐந்தாவது மிகப்பெரிய இயற்கைத்துறைமுகமாகவிளங்கும் திருகோணமலை துறைமுகம்மீதும்இந்தியாமிகுந்தஆர்வத்தைக் கொண்டுள்ளது. பிரதானமாக இந்தியன் ஓயில் நிறு வனத்தால்பலஆண்டுகளாக இயக்கப்படுவதான பெற்றோலிய குதங்கள் இருப்பதால்திருகோணமலைமீது இந்தியா அதிக ஆர்வத்தைக் கொண்டுள்ளது. காங்கேசன் துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதிலும் இலங்கை அரசு ஆர்வம் கொண்டுள்ளது.

அதுஇந்தியாவுக்குமிகவும்நெருக்கமாகவும்அண்மிதமாகவும்உள்ளது. ஆனாலும் அது கொள்கலன் துறைமுகம் அல்ல. சிமெந்து மற்றும் பொதுமக்கள் போக்குவரத்துக்கு அதனைப் பயன்படுத்த முடியும்" என்றார்.

## நிலையான அபிவிருத்தி இலக்குக்கான ‘விசமற்ற நாடு’ செயற்றிட்டம் ஆரம்பம்



ஐக்கியநாடுகள் அமைப்பின்நிலையான அபிவிருத்தி இலக்கு மற்றும் ‘விஷமற்ற நாடு’என்பதானமூன்றாண்டுதிட்டத்தின் அடிப்படையிலானநிலையானஇலங்கையின் தேசிய நிகழ்வுகள் நேற்று முன்தினம்அரசதலைவர்மைத்திரிபாலசிறிசேனவின் தல்லமையில் ஆரம்பமாகியுள்ளது.

பண்டாரநாயக்கஞாபகர்த்தபன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமாகியுள்ள மேற்படிநிகழ்வானது இம்மாதம் 04ஆம்திகதி வரை இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வுகளில் ஒவ்வொரு நாளும் வெவ்வேறான 05 தலைப்புக்களில் வெவ்வேறு அமைச்சுக்கள்மற்றும்நிறுவனங்களின் நிலை யான அபிவிருத்தியை இலக்காக கொண்ட செயற்பாடுகளின் காட்சிக் கூடங்கள் அமையவுள்ளன.

குறிப்பாக நிரந்தர இலங்கைக் கண்காட்சிக் கூடம், விஷமற்ற உணவு, பசுமை எரிசக்தி, சுகாதார முகாம், போஷாக்கு - உடல்நல ஆலோசனை, சிறுவர் - பெண்களுக்கான ஆலோசனைகள், கலைக் கண்காட்சிக்கூடம் என்பனவற்றை இங்கு பார்வையிட முடியும்.


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம்
06 . 04 . 1946

மறைவு
05 . 03 . 2017

கடந்த 05.03.2017 சிவபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவர்

**அமரர் தியாகராசா செல்வச்சிவம்**

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (04.04.2017) செவ்வாய்க்கிழமை காலை 4.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும். வீட்டுக்கிருத்திய கிரியைகள் நண்பகல் 12.00 மணியளவில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்மா சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**ஆலடி ஒழுங்கை,**
**சத்திரங்கை, வல்வெட்டித்துறை.**

**குடும்பத்தினர்.**





## புதிய வர்ணங்களில் அதிதிறன்பேசிகள் அறிமுகம்

### ‘ஐபோன் 7 மற்றும் 7 பிளஸ்’ கண்கவர் சிவப்பு நிறத்தில் வெளிவந்துள்ளன

தொழில்நுட்பத்தின் வினைத்திறன் என்பது தொடர்பாடல் துறையை இலகுவாக்கியுள்ளதுடன் அதனை மனித நடத்தைகளோடு ஒன்றிணைத்து கைக்கு அடக்கமாக்கியுள்ளது. எங்கும் கைபேசிகளின் மொழியாடலாய் கதையாடல்களை உலவச்செய்திருக்கிறது.




அந்தவகையிலே அதிதிறன் பேசிகளின்தயாரிப்புத்துறையில் முன்னணியில் உள்ள அப்பிள் நிறுவனம் தனது ஐபோன் 7 மற்றும் 7 பிளஸ் கைப்பேசிகளை சிறந்த ஒப்பனை வெளிப்பாடுடையதானசிவப்பு நிறத்தில் அறிமுகம் செய்யவுள்ளதாக தகவல் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக தங்களது வாடிக்கையாளர்களை கவரும் விதமாகவே இந்த புதிய திட்டத்தை அப்பிள் நிறுவனம் மேற்கொண்டுள்ளதாக கருத்துக் கூறப்படுகிறது.

எதிர்வரும் 24ஆம்திகதி அறிமுகம்செய்யப்படவுள்ள இவ்வகைக் கைப்பேசிகள் 128 ஜி.பி சேமிப்பு நினைவகம், 256 ஜி.பிசேமிப்புநினைவகம் என்பவற்றினைக்கொண்டிருக்கும் என்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதுவரை காலமும் ஜெற் பிளைக் (Jet Black), பிளைக் (Black), சில்வர் (Silver), கோல்ட் (Gold), றோஸ் கோல்ட் (Rose Gold) ஆகிய வர்ணங்களிலேயே அதிதிறன்பேசிகள் அறிமுகமாகியிருந்தமை நோக்கத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள்பணி. செ.அன்புராசா

# அடக்க, அடிமைப்படுத்த பாவிக்கப்படும் நவீன ஆயுதங்கள்!

ஒருவன் தன் மனைவிக்கு தனது கைத் தொலைபேசியில் இருந்து குறுஞ் செய்தி ஒன்றை பின்வருமாறு அனுப்பி வைக்கிறான்: "என் வாழ்க்கை வசந்த மாக்கியவளே நீதான்! இன்றைக்கு நான் இருக்கும் இந்த நல்ல நிலைக்குக் காரணமே நீதான்! நீ என்வாழ்க்கையில் வந்தது என் அதிஸ்ரம் தான்! என் வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக்கியவன் நீதான்! என் தேவதையே, நீதான் என் உலகம்!" என்பதை வாசிக்கிறாள். அடுத்த நிமிடமே மனைவி: "குடிச்சிருக்கிறியா?...?...?... பயப்படாத! அமைதியா வீட்டுக்கு வந்திடு. நான் ஒன்றும் செய்யமாட்டேன்...!" எனப் பதில் எழுதி அனுப்பி வைத்தாள். உடனே அவன் அதற்கு: "என் நிலையை விளங்கிக்கொண்டாய்! ரொம்ப நன்றி டார்லிங்! உடனே வந்திர்றன்!" என பதில் அனுப்பிவைத்துவிட்டு சத்தம் சந்தடி இல்லாமல் வீடு வந்து சேர்ந்தான்.

'ஆண்கள் மது அருந்திவிட்டு தேவையில்லாததை எல்லாம் பேசிக்கொண்டே இருப்பார்கள். அதிகமாக உணர்ச்சிவசப்படுவார்கள். மிக மோசமாக வாகனத்தைச் செலுத்துவார்கள். சிந்திப்பதை நிறுத்திவிடுவார்கள். எக்காரணமும் இல்லாமல் சண்டைக்கு வருவார்கள்... ஆனால், பெண்களோ இவையனைத்தையும் மது அருந்தாமலே செய்து முடிக்கும் திறன் படைத்தவர்கள்!' என்ற துணுக்கை ஆங்கிலத்தில் யாரோ சொல்லிச் சென்றதுதான் தமிழில் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டுள்ளது. இதனை, உடனடியாகவே குறிப்பிடுவதற்கான காரணம், தலையில் கட்டுக்கள் போடாமல் எம்மைக் காப்பாற்றிக் கொள்ளலாம் என்ற காரணத்தினால்தான்!

**சும்மா இருக்கவும் விடாது, கிடக்கவும் விடாது!**

ஒரு தடவை, "நீரில் மிதக்கும் மிருகம் எது?" எனக் கேட்ட கேள்விக்கு ஒரு மாணவன், "எங்க அப்பா" என்று எழுதி வைத்திருந்தானாம். ஆசிரியர் அவனுடைய பதில் பிழை எனக் குறிப்பிட்டிருந்தாலும் அவன் நன்னீரிலோ, வெந்நீரிலோ அல்லது கடல் நீரிலோ அல்லாமல் நாளாந்தம் குடியில் மிதக்கும் அம்மனித மிருகத்தைவிட வேறு எம்மிருகத்தை அவன் முதலில் நினைத்துப் பார்க்க முடியும்!

கண்மண் தெரியாமல் மதுவைக் குடிப்பவர்கள் தாங்கள் சரியான விடயத்தை யோசித்து, தெளிவாகக் கதைப்பதாகவே நினைத்துக் கொள்கிறார்கள். ஆனால், சரியான விடயத்தை யோசித்து மிகக் குழப்பமான நிலையில் குதர்க்கமாகக் கதைப்பது அவர்களுக்குத் தெரிவதில்லை. குடிப்பவர்கள், தாங்கள் தெளிவாக இருப்பதாக நினைத்துக் கொள்கிறார்கள். ஆனால், மிகத் தெளிவாகக் குழம்பிப்போய் இருக்கிறார்கள் என்பதை அவர்கள் உணர்வதில்லை. அவர்களுக்கு அசையும் பொருள் அசையாப் பொருளாகவும், அசையாப் பொருள் அசையும் பொருளாகவும் காட்சியளிக்கும். தாங்கள் நிதானம் தவறாமல் நிற்பதாகவும் தம்மைச் சுற்றியுள்ளவர்கள்தான் சுற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்றும் கூறி தமது வாதத்தை சளைக்காது முன்னெடுப்பார்கள்.

குடித்துவிட்டு அடிதடியில் ஈடுபட்டுக் களைத்துப்போய்படுத்திருந்தகணவனைப்பார்த்து, "குடிச்சாலும் பரவாயில்ல, குடிச்சுப்போட்டு வந்து சும்மா கிடவனப்பா!" எனத் திட்டியதற்கு, அவன், "சும்மா கிடக்க அது விடுகுதில்லையே!" என்கிறார். அவள் மீண்டும், "அப்ப, குடிக்காம வந்து கிடவுமன்!" என்றதற்கு, "அப்பிடியும் கிடக்க அது விடுகுதில்லையே!" என்றானாம். மதுவின் வேலையே அதுதான்! அதற்கு அடிமையானவர்களை குடிக்காமல் சும்மா இருக்கவும் விடாது, குடித்துவிட்டுச் சும்மா கிடக்கவும் விடாது! இந்த இரகசியத்தைப் புரிந்து கொண்டால்குடியைவிட்டுவிடுவதற்கான ஏதுநிலைகள் அதிகமாகும்.



'குடிக்காமல் சும்மா இருக்கவும் விடாது' என்பதன் பொருள்: குடிப் பழக்கத்துக்கு உட்பட்டவர்களுக்கு குடிக்காமல் இருக்க முடியாது. மதுவைக் குடித்துப் பழகிய அந்தப் பழக்கம், குடிக்கும் உணர்வைத் தூண்டி, எப்படியாவது குடிக்க வைத்துவிடும். 'குடித்துவிட்டுச் சும்மா இருக்கவும் விடாது' என்பதன் பொருள்: மதுவைக் குடித்துவிட்டால் சும்மா குந்திக்கொண்டிருக்க விடாது, அது கூத்தாடத்தான் வைக்கும்! இக்கூத்துக்களில் பலவகையுண்டு. உதாரணமாக, அடிதடியில் ஈடுபடுதல், அடித்தல், உதைத்தல், பல மொழிகளில் பேசுதல் என இதன் கூத்தாட்டங்கள் பல வகைப்பட்டன. இவ்வாறான விளக்கங் களை எங்கேனும், எவ்வகராதியிலேனும் நீங்கள் படித்ததுண்டா அல்லது பார்த்ததுண்டா?

> "குடிச்சாலும் பரவாயில்ல, குடிச்சுப்போட்டு வந்து சும்மா கிடவனப்பா! எனத் திட்டியதற்கு, அவன், "சும்மா கிடக்க அது விடுகுதில்லையே! என்கிறார். அவள் மீண்டும், "அப்ப, குடிக்காம வந்து கிடவுமன்! என்றதற்கு, "அப்பிடியும் கிடக்க அது விடுகு தில்லையே! என்றானாம். மதுவின் வேலையே அதுதான்! அதற்கு அடிமையானவர்களை குடிக்காமல் சும்மா இருக்கவும் விடாது, குடித்துவிட்டுச் சும்மா கிடக்கவும் விடாது! இந்த இரகசியத்தைப் புரிந்து கொண்டால் குடியை விட்டுவிடுவதற்கான ஏதுநிலைகள் அதிகமாகும்.

**பெண்கள் அடித்து நொறுக்கிய கள்ளுத் தவறணை**

ஓமந்தைப் பகுதியில் நவ்வி என்ற கிராமத்தில் ஏறக்குறைய 10 ஆண்டுகளாக இயங்கிவந்த கள்ளுத் தவறணை பொதுமக்களால் குறிப்பாகக் குடும்பப்பெண்களால் 12.09.2016 அன்று அடித்து நொறுக்கப்பட்டது என்ற செய்தி நிழற்படத்துடன் நாளிதழ் ஒன்றில்பிரசுரிக்கப்பட்டு இருந்தது. இச்செயலைத் தொடர்ந்து பல பின் விளைவுகள் ஏற்பட்டிருக்கின்றன என்பதனையும் அறியக்கூடியதாக இருக்கிறது. இக்கள்ளுத் தவறணை முன்பள்ளி, ஆரம்பப் பாடசாலை, இந்து கிறிஸ்தவ கோயில்கள் போன்ற புனிதமான இடங்களுக்கு அருகில் இருப்பதால் அதனை அகற்றுமாறு பல முறை பலரிடம் மக்கள் எடுத்துக் கூறியிருக்கி றார்கள். இவ்வாறு அதனை அவ்விடத்தில் இருந்து அகற்றுமாறு பல தடவைகள் விநயமாக வேண்டியும் நிறைவேற்றப்படாத சூழலில்தான் பொதுமக்கள் பெண்கள் இவ்வாறு செயற்பட்டிருக்கிறார்கள் எனத் தெரியவருகிறது.

மக்களின் நியாயமான கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை என்றால் இவ்வாறானவிளைவுகளை எதிர்கொள்ளவேண்டிவரும் என்ற ஒரு செய்தி இச்சம்பவத்தின் ஊடாக வெளிப்பட்டு நிற்கிறது. பெண்கள் செயற்பட்ட விதம் மதுப்பாவனையினால் ஏற்படும் அல்லது ஏற்படுத்தப்படும் அதிகமான இன்னல்களை, இடையூறுகளை, தீமைகளை அனுபவிக்கிற இவர்கள் இனிமேலும் மௌனிகளாக கைகட்டி வாய்பொத்தி பேசாதிருப்பார்கள் என்று 'எதிர்பார்க்காதீர்கள்' என்ற செய்தியை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மிகத் தெளிவாக வெளிக்காட்டி நிற்கிறது. சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டியவர்கள் அதனைச் செய்யத்தவறிய காரணத்தினால்தான் பெண்கள் பொறுமை இழந்து தவறணையை உடைத்திருக்கிறார்கள் என ஓமந்தைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி இவ்விடயம் குறித்துத் தெரிவித்திருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. அதாவது இவ்வாறான முடிவை எடுப்பதற்கு குடும்பப் பெண்கள் தள்ளப்பட்டுள்ளார்கள் என்பதையும் இங்கு கருத்தில் கொள்ளவேண்டும்.



**புத்திசாதுரியத்துடன் செயற்படவேண்டும்**

பெண்களால் மேற்கொள்ளப்பட்ட இச்செயல் நியாயபூர்வமானதாகத் தென்பட்டாலும் தவறணையை அகற்றுவதைச் சரியான புத்தி சாதுரியத்துடன் செய்திருக்கவேண்டும். ஏனெனில், மக்கள் சட்டத்தை கையில் எடுத்துச் செயற்படக் கூடாது, செயற்படவும் முடியாது. எனவேதான், மேலே குறிப்பிட்ட இந்த 'சரியான புத்தி சாதுரியத்துடன்' என்ற சொற்றொடர்களுக்குள் நிறைய அர்த்தங்கள் இருப்பதைப் புரிந்துகொண்டால் சட்டத்தைப் பொதுமக்கள் கையில் எடுக்காமல் சட்டத்தையும் மீறாமல், சமுதாயத் தீமைகளை எதிர்க்கக்கூடிய-ஒழிக்கக்கூடியதிட்டங்களைத் தீட்டமுடியும். அதன் அர்த்தம் என்னவெனில், குடும்பப் பெண்கள் மேற்கொண்ட செயலையே வேறு வழிகளில் கையாண்டிருந்தால் ஓமந்தை, நவ்வி கிராமத்துப் பெண்கள்தாங்கள் செய்த அச்செயலின் சேதத்திற்காக நட்ட ஈடு கொடுக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்க மாட்டார்கள்.

**சுனாமியாய் எழுந்து நிற்கும் மதுப்பாவனை**

கணவன் நடு வீட்டுக்குள் நின்றுகொண்டு "வீட்டுக்குள்ள, கள்ளன்! கள்ளன்!..." என பெரிய சத்தமாகக் கத்திக்கொண்டிருந்தான். விறுவிறு என்று வீட்டுக்குள் சென்ற மனைவி, "கண்ணாடியப் பாத்துக் கத்தாமல், போய்ப்படும் காணும்!" என்றாளாம். அடுத்த பேச்சில்லாமல் அட்டை சுரு ண்டது போல பாயை விரித்து படுத்துறங்கினான் அம்மனிதன்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தீர்மான மை காயமுன்னரே அரசு அதை மீறிவிட்டது

“உலக நாடுகளுக்கு வழங்கப்படுகின்ற வாக்குறுதிகள் கௌரவிக்கப்பட வேண்டும். இல்லையெனில் பின்னொரு சமயம் நாடு அவர்கள் முன் மண்டியிட வேண்டிய நிலை ஏற்படலாம்” என்று எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தன் திருகோணமலையில் இடம்பெற்ற பொது நிகழ்வொன்றில் அரசை எச்சரித்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 30/1 தீர்மானத்தை முழுமையாக நிறைவேற்றுவதற்கென இலங்கை அரசுக்கு மேலும் இரண்டு ஆண்டுகள் அவகாசம் வழங்கப்பட்டிருப்பதையும் இந்த கால அவகாசத்தை இலங்கை அரசு இதய சுத்தியுடன் நிறைவேற்றாது என்ற குற்றச்சாட்டுக்களும் சந்தேகங்களும் தமிழர் மத்தியில் பரவலாக எழுந்திருப்பதையும் மனதில் வைத்தே எதிர்க்கட்சித் தலைவர் இந்த எச்சரிக்கையை விடுத்திருக்கிறார் என்று கருத இடமுண்டு. தீர்மானத்தில் காணப்படும் விடயங்களை அரசு நிறைவேற்றுகிறதோ இல்லையோ அவகாசம் அளிக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அதன் மை உலரு முன்னரே இலங்கை அரசு அளித்த வாக்குறுதியை மீறத் தொடங்கி விட்டதாக பன்னாட்டு மட்டத்தில் கடும் குற்றச்சாட்டுக்கள் கிளம்பியுள்ளன.

போர் நடைபெற்ற காலத்தில் கட்டளைத் தளபதிகளில் ஒருவராக இருந்தவரும் போர்க்குற்றம் புரிந்தார் என்று குற்றஞ்சாட்டப்படுபவருமான மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு இராணுவத் தலைமையகத்தில் பதவி உயர்வுடன் புதிய நியமனம் வழங்கப்பட்டிருப்பது தொடர்பானது இந்தக் குற்றச்சாட்டு.

இராணுவக் கட்டமைப்பை மறுசீரமைப்பதாகவும் இராணுவத்தின் உயர்பதவிகளுக்கு அதிகாரிகளை நியமிக்கும்போது இறுதிக் கட்டப் போரில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனிதாபிமானத்துக்கு எதிரான கொடூரங்களுடன் தொடர்புள்ளதாவென ஆராய்ந்து பார்ப்பதாகவும் மனித உரிமைகள் சபைக்கு உறுதியளித்த இலங்கை அரசு, தீர்மானம் நிறைவேற்றப்பட்ட சில தினங்களுக்குள்ளேயே வாக்குறுதியை மீறியுள்ளது என்று யஸ்மின் சூகா அம்மையாரைத் தலைவராகக் கொண்டு செயற்படும் பன்னாட்டு நீதிக்கும் நியாயத்துக்குமான செயற்றிட்ட அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

“போர்க்குற்றங்களுக்குப் பொறுப்புக் கூற வேண்டிய மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு இராணுவத்தை நிர்வகிக்கும் உயர் நிலைப் பதவியை வழங்கி அரசு அழகுபார்த்துள்ளது. இது போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மாத்திரமன்றி அரசின் வாக்குறுதியை நம்பிய பன்னாட்டுச் சமூகத்துக்கும் இழைக்கப்பட்ட மிக மோசமான அவமானமாகும்” என்று அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது. அது மட்டுமல்ல வெளிநாடுகளுக்குப் படையினரை அனுப்பும்போது அவர்கள் தொடர்பில் முழுமையான விசாரணை நடத்தப்படும் என்ற வாக்குறுதியையும் நம்ப முடியாது. அதனால் ஐ.நா. அமைதி காக்கும் படைகளில் இலங்கைப் படைகளை இணைத்துக் கொள்வதையும் நிறுத்த வேண்டும் என்று அது கோரிக்கை விடுத்துள்ளது.

நடந்து முடிந்த போரின் இறுதிக்கட்டத்தில் போர்க்குற்றங்களும் மனித உரிமை மற்றும் மனிதாபிமான உரிமை மீறல்களும் இடம்பெற்றிருப்பதாக பன்னாட்டு மட்டத்திலும் தமிழர் தரப்பிலும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அதன் காரணமாகவே ஐ.நா. மனித உரிமைகள் சபையில் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. இந்தத் தீர்மானங்களின் அடிப்படையில் பொறுப்புக் கூறும் கடப்பாடு இலங்கை அரசைச் சார்ந்தது. போர்க்குற்றங்களே இடம்பெறவில்லையென இராணுவத் தளபதிகளும் முன்னாள் ஆட்சியாளர்களும் இப்போதைய அரசின் சில முக்கிய தலைவர்களும் அடித்துக் கூறிவருகிறார்கள். ஆனால் பொறுப்புக் கூறும் கடமையை ஏற்றுக் கொண்டு ஜெனிவா தீர்மானத்தை இணைந்து நிறைவேற்றியுள்ளது அரசு. போர்க்குற்ற விசாரணையொன்று நடைபெறுவதாக இருந்தால் இறுதிக்காலத்தில் படைகளின் நகர்வுகளுக்குப் பொறுப்பாக இருந்தவர்களே அவைகளை எதிர்கொள்ள வேண்டிய நிலைமை காணப்படும். ஆனால், போர்க்குற்ற விசாரணையில் ஒரு படைவீரனைக்கூட நீதிமன்றில் நிறுத்தப் போவதில்லையென்று அரச தலைவர் ஆணித்தரமாகக் கூறிவரும் நிலையைப் பார்க்கிறோம். அந்த வகையிலேயே உயர்மட்ட அதிகார பதவிகளையும் நிரப்புவதில் அவர் ஆர்வம் காட்டியுள்ளார். ஜெனிவாத் தீர்மானம் இருந்தபடியே இருக்கட்டும், நாங்கள் எங்கள் எண்ணப்படி நடந்தபடியே நடப்போம் என்றவாறு இலங்கை அரசின் போக்கு காணப்படுகின்றது.

ஜெனிவாத் தீர்மானத்தின்படி மனிதஉரிமை ஆணையாளர் காரியாலயம் இன்னமும் செயற்படத் தொடங்கவில்லை. அது செயற்படத் தொடங்கும்போது நிலைமைகள் எவ்வாறு மாறும் என்பதை இனிமேல் தான் பார்க்க வேண்டும். ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகத்தின் நிபுணர்கள் இலங்கைக்கு வந்து தீர்மானம் எவ்வாறு நிறைவேற்றப்படுகின்றது என ஆராயும்போது இந்த நாட்டுத் தலைவர்களின் குட்டுகள் பல அம்பலமாகக் கூடும் என்று எதிர்பார்க்கலாம்.

# கொழும்பு மீது செல்வாக்கு செலுத்துவதில் மோதும் சீனாவும் இந்தியாவும்

ஆங்கில மூலம் - வேர்ல்ட் பொலிரிக்ஸ் றிவியூ
தமிழில் - நித்திய பாரதி

இலங்கை மீது செல்வாக்குச் செலுத்துவது தொடர்பில் சீனா - இந்தியா இடையே கடும் மோதல் ஏற்பட்டுள்ளது. கொழும்பு அரசின் கடன் சுமை அதிகரித்துள்ள நிலையில், இவ்விரு நாடுகளுக்கும் இடையேயான மோதலைச் சமன்செய்து அதன் மூலம் தனக்கு ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடியைக் குறைப்பதற்கு கொழும்பு முயற்சிக்கிறது.

இலங்கை மற்றும் இந்தியா ஆகிய இரு நாடுகளும் திருகோணமலைத் துறைமுகத்தை அபிவிருத்தி செய்வது தொடர்பான உடன்பாடு ஒன்றை எட்டியுள்ளதாக கடந்த ஜனவரியில், இலங்கை பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் சரத்பொன்சேகா தெரிவித்திருந்தார். இலங்கையின் பொருளாதாரத்தில் சீனாவின் தலையீடு அதிகரித்துவரும் நிலையில், இந்தியாவை அமைதிப்படுத்துவதற்காகவே திருகோணமலைத்துறைமுக உடன்பாடு எட்டப்பட்டதாக இலங்கை மக்கள் கருதுகின்றனர்.

**கடன் சுமையால் தலை நிமிர்க்க இயலாத நிலையில் இலங்கை**

இலங்கைத்தீவானது தற்போது 64 பில்லியன் டொலர் கடன்சுமையை எதிர் நோக்கியுள்ளது. அத்துடன் பெரியளவிலான அபிவிருத்தித் திட்டங்கள் சில மேற்கொள்வதற்காக சீனாவிடமிருந்து இலங்கையால் 8 பில்லியன் டொலர் பெறப்பட்டுள்ளது. இலங்கையின் தற்போதைய வருடாந்த வெளிநாட்டு ஏற்றுமதி வருமானத்தின் மூன்றில் ஒருபகுதிநிதி, தனது கடனை மீளச்செலுத்தும் விதத்தில் கொழும்பு அரசால் வழங்கப்படுகிறது.

கடந்த ஆண்டு பன்னாட்டு நாணய நிதியத்திடமிருந்து 1.5 பில்லியன் டொலர் நிதி கொழும்பு அரசால் கடனாகப் பெறப்பட்டுள்ளது. பொதுச்செலவை மீள்கட்டமைப்புச் செய்வதற்காக மட்டுமே இந்த நிதி பயன்படுத்தப்பட வேண்டும் என பன்னாட்டு நாணய நிதியத்தால் அறிவுறுத்தப்பட்டது. இவ்வாறான பல்வேறு கடன் சுமைகள் இருப்பினும், பரிந்துரைக்கப்பட்ட சீன முதலீடுகளுக்கு எதிராக இலங்கை மக்கள் எதிர்ப்புக்களைக் காண்பித்து வருகின்றனர். தமது நாட்டில் சீனக் காலனித்துவம் ஏற்பட்டு விடுமோ என இலங்கையர்கள் அஞ்சுகின்றனர்.

சீனா மீது கொழும்பு தங்கியிருக்கும் நிலையைச் சமன் செய்ய வேண்டும் என அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் அரசு எதிர்பார்க்கிறது. இலங்கை மீதான சீனாவின் பிரசன்னமானது, இந்தியாவின் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு அச்சுறுத்தலாக உள்ளது என்ற விடயத்தை இலங்கையின் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவை விட தற்போதைய அரச தலைவர் சிறிசேன அதிகம் கவனத்தில் கொண்டுள்ளார்.

இந்தியாவானது, தனது இராணுவ மற்றும் பொருளாதார ரீதியிலான உதவிகளை இலங்கைக்கு வழங்கியுள்ள போதிலும், இலங்கையில் முதலீடு செய்வது தொடர்பில் இந்தியா பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகிறது. இந்திய அரசு, திருகோணமலைத் துறைமுக அபிவிருத்தித் திட்டம் போன்ற நடுத்தரத் திட்டங்களை வேறு நாடுகளில் மேற்கொள்வதற்கான இயலுமையைக்கொண்டிருக்கவில்லை. ஆகவே, ஜப்பானிய முதலீட்டாளர்களுடன் இணைந்து தனியார் துறையினர் மூலம் கொழும்பு அரசின் கோரிக்கைகளுக்கு ஏற்ப இத்திட்டத்தை முன்னெடுக்க முடியுமா என்பதுகுறித்து இந்தியா ஆராய்ந்து வருகிறது.

> சீனா மீது கொழும்பு தங்கியிருக்கும் நிலையைச் சமன் செய்ய வேண்டும் என அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் அரசு எதிர்பார்க்கிறது. இலங்கை மீதான சீனாவின் பிரசன்னமானது, இந்தியாவின் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு அச்சுறுத்தலாக உள்ளது என்ற விடயத்தை முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவை விட தற்போதைய அரச தலைவர் சிறிசேன அதிகம் கவனத்தில் கொண்டுள்ளார்.

**சீனாவுடனான கொழும்பின் நெருக்கத்தால் அதிருப்தியில் புதுடில்லி**

சீன நிறுவனங்களால் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட கட்டுமானத் திட்டங்களின் ஊடாக, கொழும்பு மீதான கடன் சுமையைக் குறைப்பதற்கும் இதன் மூலம் இலங்கையுடனான பொருளாதார மற்றும் பாதுகாப்பு உறவுகளைப் பலப்படுத்துவதற்கும் சீனா முயற்சிக்கிறது. பாதுகாப்புத் துறை உட்பட அனைத்துத் துறைகளிலும் ஒத்துழைப்பு அதிகரிக்கப்படவுள்ளதாக கடந்த வாரம் இவ்விருநாடுகளும் அறிவித்தன. இது இந்தியாவுக்கு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

அம்பாந்தோட்டைத் துறைமுக உடன்படிக்கையை எதிர்த்து இலங்கையில் பல்வேறு ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றிருந்த நிலையில், சீனா மற்றும் இலங்கை ஆகிய இரு நாடுகளும், பாதுகாப்புத்துறை உட்பட அனைத்துத் துறைகளிலும் ஒத்துழைப்பை அதிகரிக்கவுள்ளதாக அறிவிப்பு மேற்கொண்டமையை சீனா தனது ‘ஒரு அணை ஒரு பாதை’ என்ற திட்டத்தை வெற்றிகரமாக மேற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்வதற்கான நல்லதொரு சமிக்ஞையாக நோக்குகிறது.

சீனாவால் கட்டப்பட்ட அம்பாந்தோட்டை துறைமுகத்தின் 80 சதவீதத்தை 99 ஆண்டுகள் கால குத்தகைக்கு 1.1 பில்லியன் டொலர் பெறுமதிக்கு சீன நிறுவனத்திடம் வழங்குவதற்கு கடந்த ஆண்டு கொழும்பு அரசு உடன்பட்டது. அத்துடன் அம்பாந்தோட்டைத் துறை முகத்துக்கு அருகிலுள்ள 15,000 ஏக்கர் நிலப்பரப்பை 5 பில்லியன் டொலர் பெறுமதியில் தொழிற்பேட்டை ஒன்றை அமைப்பதற்கு சீனாவுக்கு வழங்குவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.


ஆனால் இலங்கையர்கள் இந்தத் திட்டத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டமையால், கொழும்பு அரசால் இது தொடர்பான உடன்படிக்கையில் கைச்சாத்திட முடியவில்லை. சீனாவிடம் பெருந்தொகையான கடனை இலங்கை பெற்றிருந்தாலும் கூட, தனது நாட்டில் சீன இராணுவம் கால் பதிப்பதற்கு கொழும்பு அரசு இதுவரை அனுமதிக்கவில்லை.

ஆனால்சீனாவுடன்இலங்கையானது பாதுகாப்பு ஒத்துழைப்பை அதிகரிக்கவுள்ளதாக வெளிவரும் அண்மைக்காலச் செய்திகள் சீனக் கடற்படையினர் இலங்கையின் கடலில் செல்வாக்குச் செலுத்துவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும். ராஜபக்சவின் ஆட்சியின் போது 2014இல் கொழும்புத் துறைமுகத்தில் சீனாவின் இரண்டு நீர்மூழ்கிக் கப்பல்கள் தரித்து நிற்பதற்கான அனுமதி வழங்கப்பட்டது. இது இந்தியாவுக்கு எச்சரிக்கை மணியாகக் கருதப்பட்டது.

2015இல் இடம்பெற்ற தேர்தலில் ராஜபக்ச தோல்வியுற்ற பின்னர், இந்திய மாக்கடல் மீதான இந்தியாவின் பன்முக கடல்சார் பாதுகாப்பு முயற்சிகளில் இலங்கையும் பங்களித்தது. இதற்காக இந்தியாவிடமிருந்து இலங்கைக்கு மேலும் பல கடல் சார் உபகரணங்கள் வழங்கப்பட்டன. அத்துடன் கடற்கண்காணிப்பில் ஈடுபடுவதற்கான கலத்தைக் கொள்வனவு செய்வதற்கு இலங்கையின் தொழிற்துறைக்கு இந்தியா உதவியது.

இலங்கைக்கான இந்தியாவின் அபிவிருத்தி உதவியானது, 2.6பில்லியன்டொலராகும். 435 மில்லியன் டொலர் மானியமாகவும் வழங்கப்பட்டுள்ளது. சீனா

> சீனாவால் கட்டப்பட்ட அம்பாந்தோட்டை துறைமுகத்தின் 80 சதவீதத்தை 99 ஆண்டுகள் கால குத்தகைக்கு 1.1 பில்லியன் டொலர் பெறுமதிக்கு சீன நிறுவனத்திடம் வழங்குவதற்கு கடந்த ஆண்டு சிறிசேன அரசு உடன்பட்டது. அத்துடன் அம்பாந்தோட்டைத் துறைமுகத்துக்கு அருகிலுள்ள 15,000 ஏக்கர் நிலப்பரப்பை 5 பில்லியன் டொலர் பெறுமதியில் தொழிற்பேட்டை ஒன்றை அமைப்பதற்கு சீனாவுக்கு வழங்குவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.




இலங்கைக்கு தான் வழங்கிய 50சதவீதகடனுக்கு 2சதவீத வட்டியையும், மீதிக் கடனுக்கு 5 சதவீத வட்டியையும் அறவீடு செய்கிறது. ஆனால் இந்தியாவானது இலங்கைக்குத் தான் வழங்கிய அனைத்துக் கடனுக்கும் 1.75 சதவீத வட்டியையே அறவீடு செய்கிறது.

### இந்தியா மற்றும் சீனாவின் முதலீடுகளை விரும்பாத இலங்கை மக்கள்

அத்துடன் இலங்கையில் இந்திய முதலீடுகளும் பிரச்சினைகளைச் சந்தித்துள்ளன. திருகோணமலைத் துறைமுகத்துக்குஅருகிலுள்ளசம்பூரில்நிலக்கரி மின்னாலை ஒன்றை நிறுவுவதற்கான இந்தியாவின்திட்டமானதுசம்பூர் மக்களின் கடும் எதிர்ப்பின் காரணமாக கைவிடப்பட்டது. இலங்கைத் தீவின் மேற்குக் கரையிலுள்ள கெரவலப்பிட்டியவில் எரிவாயு மின்னாலை ஒன்றை அமைத்துத் தருமாறு தற்போது கொழும்பு அரசு இந்தியாவிடம் கோரிக்கை விடுத்து வருகிறது.

கொழும்புத் துறைமுக விரிவாக்கத்தின் ஒரு பகுதியாக அங்கே கொள்கலன் தாங்கி ஒன்றை அமைப்பதற்கு அனுமதியைப் பெறுவதற்கு இந்தியா முயற்சிக்கிறது. 2013இல் தனியொரு கொள்கலன் தாங்கி ஒன்றை அமைப்பதற்கான சீன நிறுவனம் ஒன்றுக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டது.

2003 இல் இருந்து இந்தியாவின் லங்கா இந்திய எண்ணெய் நிறுவனத்தால் செயற்படுத்தப்படும் திருகோணமலையிலுள்ள 99 எண்ணெய்க் குதங்களையும் கொழும்பு மீளவும் பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும், எந்தவொரு குத்தகை ஒப்பந்தங்களும் மேற்கொள்ளப்படாமையால் இவற்றை மீளப் பெறுமாறு பொது நிறுவனங்கள் மீதான இலங்கை நாடாளுமன்ற ஆணைக்குழு அண்மையில் கோரிக்கை விடுத்துள்ளது. இதற்கு இந்தியா எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

ஆகவே இவற்றைப் பயன்படுத்துவதற்கான கட்டணத்தை இந்தியாவிடமிருந்து பெற்றுக் கொள்ள கொழும்பு அரசு முயற்சிக்கும். சீனாவுடன் கொழும்பு அரசு பல்வேறு முதலீட்டுத் திட்டங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுவதன் மூலம், தனது கடன் சுமையைக் குறைப்பதற்கு இந்தியா மேலும் முதலீடுகளை மேற்கொள்ள வேண்டும் என்பதற்கான ஒரு சமிக்ஞையை இலங்கை அனுப்பியுள்ளது என்றே கொள்ளலாம்.


இந்திய அரசு தனது செலவீனங்களைக் குறைப்பதற்காக, தனது தனியார் துறையின் ஊடாக இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ள முயற்சிப்பதாகத் தென்படுகிறது. அத்துடன் இந்திய அரசின் திட்டங்கள் சில இலங்கையில் நெருக்கடியைச் சந்தித்த போதிலும், தனியார் துறையினர் வெற்றிகரமாகத் தமது திட்டங்களை இலங்கையில் மேற்கொண்டுள்ளனர்.

திருகோணமலைத் துறைமுகத்தைச் சூழவுள்ள பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதற்கான சாத்தியக்கூற்று ஆய்வை சிங்கப்பூரின் சேர்பனா யுரோங்க் நிறுவனம் மேற்கொண்டு வரும் நிலையில், இந்த நிறுவனத்துடன் இணைந்து இந்திய தனியார் நிறுவனங்கள் பணியாற்றுவதற்கு ஊக்குவிப்பு வழங்கப்படுகின்றது.

திருகோணமலையில் இந்தியா முதலீடு செய்வதன் மூலம் அங்கு தமிழ்மயமாக்கல் முற்றுமுழுதாக இடம் பெற்று விடும் என உள்ளூர் சிங்கள மக்கள் அச்சம் கொண்டுள்ள நிலையில், இலங்கையில் தமிழர் வாழும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைப் பிரிப்பதற்கு இந்தியா ஒருபோதும் அழுத்தம் மேற்கொள்ளாது என அண்மையில் இலங்கைக்குப் பயணம் செய்த இந்திய அயலுறவுத்துறைச் செயலர் தெரிவித்திருந்தார்.

இலங்கையின் உள்நாட்டுப்போரை முடிவுக்குக் கொண்டு வரும் நோக்குடன் வரையப்பட்ட 1987 இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் வடக்குகிழக்கில் சுயாட்சியை நிறுவுவது தொடர்பாகக் கோரிக்கை விடுக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளையில் இலங்கையின் எந்தவொரு துறைமுகத்தையும் வெளிநாடுகள் தமது இராணுவ நோக்கத்துக்காகப் பயன்படுத்துவதற்கு கொழும்பு அரசு ஒருபோதும் அனுமதிக்காது என சீனாவுக்கான இலங்கைத் தூதுவர் அண்மையில் தெரிவித்திருந்தார். கொழும்பு அரசின் இத்தகைய நிலைப்பாட்டைத் தொடர்ந்தும் தக்கவைத்துக் கொள்வதற்குதான் மேலும் தொடர்ந்து பணியாற்ற வேண்டும் என்பதை இந்தியா தற்போது உணர்ந்துள்ளது



## வாசகர் திருமுகம்

### மரண யோகம் வரும் நாளில், கும்பாபிஷேகம் மேற்கொள்ளலாமா?

எமது கிராமத்தில் அமைந்துள்ள விநாயகர் ஆலயம் புனரமைக்கப்பட்டு ஆலயத்துக்குப் புதிதாக இராஜகோபுரமும் அமைக்கப்பட்டு வருகிறது.

இந்த ஆலய புனரமைப்புப் பணிகளுக்கென ஓரிருவர் அல்லது ஊ மக்களின் பலரிடமிருந்தும் நன்கொடையாக நிதி உதவி பெறப்பட்டு இன்று புனரமைப்பு வேலைகள் முற்றுப்பெற்று திருக்கோயில் கம்பீரமாகக் காட்சியளிக்கிறது.

ஆலயத்தில் கும்பாபிஷேகம் எதிர்வரும் சித்திரை மாதம் 17 ஆம் நாள் 30.4.2017 நடத்தப்படவுள்ளதாகவும் பூர்வாங்கக்கிரியைகள் சித்திரை மாதம் 13 ஆம் நாள் 26.4.2017இல் ஆரம்பமாகும் எனவும் "பனர்" மூலம் ஊர்மக்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த இரு தினங்கள் குறித்து ஆராய்ந்து பார்த்ததில் கும்பாபிஷேக தினத்தன்று மரண யோகம் இருப்பதாகவும் பூர்வாங்க கிரியைகள் ஆரம்பமாகும் தினத்தன்று பூரண அமாவாசை தினம் எனவும் பஞ்சாங்கத்தில் குறிக்கப்பட்டுள்ளது.

பொதுவாக கரிநாள், மரணயோகம், அமாவாசை நாள்கள் சுபகாரியங்களுக்கு ஏற்றவையல்ல என்று பஞ்சாங்கங்களில் கூறப்பட்டுள்ளது.

இந்த நிலையில் குறித்த இந்தத் தினங்களில் கும்பாபிஷேகம் நடத்த இயலுமா என்பதை சைவசமய பெரியோர்கள் சாஸ்திர விற்பன்னர்கள் தெளிவுபடுத்த வேண்டும். ஏனெனில் துர்தேவதைகளை வழிபடுவோர், மந்திரவாதிகள் ஆகியோரே தமது பூசைகளை அமாவாசை தினத்தில் நடத்துவதாக கேள்விப்பட்டுள்ளோம்.

எனவே இது தொடர்பான முழுமையான விளக்கத்தை எவராவது வெளியிட்டு தெளிவுபடுத்த வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

*விநாயகர் பக்தன்*

### தமிழோடு இறைபாடு

தமிழோடு இசைபாடல் மறந்தறியாத இந்த மண்ணுக்கு "தமிழோடு இறைபாடு" என்ற ஓர் அருமையான நிகழ்ச்சி ஓம் தொலைக்காட்சியில் தற்பொழுது காலையிலும், இரவிலும் ஒளிபரப்பாகிய வண்ணம் உள்ளது. நல்லதோர் சிவத் தமிழையும், வல்ல தமிழ்ப் பண்களையும், கல்லையும் கனிய வைக்கும் இனிதான இசையையும் ஒருங்கு சேர வழங்குகின்றார் இசைத்தமிழ் வேந்தன் டாக்டர் நா.வி.மு. நவரத்தினம். திருமுறைகளை இவர் வாயிலாகக் கேட்பதற்கு இங்குள்ள ஆலய நிர்வாகத் தரப்பினரும் ஆவன செய்வார்களாயின், யாழ்ப்பாணம் மட்டுமல்ல இலங்கையே துன்பங்களிலிருந்து மீளும் என்பது முடிந்த முடிவாகும். கைகூடுமா இது!

*கே. எஸ். சிவஞானராஜா*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?





**மேடம்:** குடும்பவிடயத்தைமற்றவரிடம்பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் போட்டியாளர்களின் குறுக்கீடு அதிகரிக்கும். சுமாரானலாபம்கிடைக்கும்.ஆரோக்கியத்தில் அக்கறை தேவை.



**இடபம்:** முக்கியமானசெயல்எளிதாகநிறை வேறும். தொழில், வியாபாரம்செழிக்க புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள். லாபம் திருப்தி அளிக்கும். உறவினர் வருகையால், குடும்பத்தில் மகிழ்ச்சி நிலைக்கும்.



**மிதுனம்:** நல்லவர்களின் நட்பும், உதவியும் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் இருந்த சிரமம் விலகும். லாபம் அதிகரிக்கும். குடும்பத்தேவை தாராள பணச்செலவில் நிறைவேறும்.



**கடகம்:** நண்பர்களால் சிரமத்திற்கு ஆளாகலாம். தொழிலில் திட்டமிட்ட இலக்கு நிறைவேற கால அவகாசம் தேவைப்படும். லாபம் சுமாராக இருக்கும். உடல்நலம் பெற மருத்துவச்சிகிச்சை தேவைப்படும்.



**சிங்கம்:** உறவினரின் செயலை குறை சொல்லவேண்டாம். தொழில், வியாபாரத்தில் மந்தகதி நிலவும். அரசியல்வாதிகள் சமரசம் பேசுவதில் நிதானத்தைக் கடைபிடிப்பது நல்லது.



**கன்னி:** பொதுநலனில் அக்கறை காட்டுவீர்கள். தொழில், வியாபாரத்தில்எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். நிலுவைப் பணமும் வசூலாகும். பிள்ளைகளின் வழியில் சுபநிகழ்ச்சிநடத்த திட்டமிடுவீர்கள்.



**துலாம்:** செயலில் நிதானத்தைக் கடைபிடிப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் வருமானம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாகலாம். உறவினர் வகையில் செலவு உண்டு.



**விருச்சிகம்:** எளிய முயற்சிக்கும் நிறைவான பயன் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் தாராளமாக ஆதாயம் வரும். பெண்களுக்கு தாய் வீட்டு உதவி கிடைக்கும். மாணவர்கள் கண்ணும், கருத்துமாகப் படிப்பர்.



**தனுசு:** தொடர்பில்லாத பணியில் ஈடுபடும் நிர்ப்பந்தம்ஏற்படலாம். தொழிலில்குறுக்கிடும் தடைகளை சரி செய்வது நல்லது. அலைச்சலால் உடல் அசதிக்கு ஆளாவீர்கள். மனைவி வழி உறவினரால் உதவி கிடைக்கும்.



**மகரம்:** உற்சாகமனதுடன்செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வியத்தகு வளர்ச்சி உருவாகும். சேமிக்கும்விதத்தில்வருமானம் உயரும். பெண்கள்ஆடம்பரஎண்ணத்துடன் செயற்படுவர்.



**கும்பம்:** வாழ்வில்இனியஅனுபவம்உண்டாகும். தொழில், வியாபாரத்தில் திட்ட மிட்ட வளர்ச்சி இலக்கு எளிதில் பூர்த்தியாகும். வருமானம் உயரும். பணியாளர்களுக்கு பாராட்டு வெகுமதி கிடைக்கும்.



**மீனம்:** பேச்சில்கவனமாகஇருப்பதுநல்லது. தொழில், வியாபாரத்தில் தடங்கல் குறுக்கிடலாம். லாபம் சுமாராக இருக்கும். பெண்கள், குடும்ப நலனுக்காகப் பாடுபடுவர். தாயின் தேவையை நிறைவேற்றுவீர்கள்.

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | | 3 | | 8 | | | 4 | |
| | | | | | 9 | 3 | 5 | 8 |
| | | 4 | 3 | | | | 6 | |
| | | | | | 3 | 6 | | 1 |
| | 3 | | | | | | 8 | |
| 1 | | 6 | 5 | | | | | |
| | | | | | 2 | 7 | | |
| 5 | 4 | 9 | 6 | | | | | |
| | 7 | | | 9 | | | | 6 |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 7 | 4 | 1 | 3 | 9 | 8 | 5 | 2 |
| 5 | 9 | 8 | 7 | 6 | 2 | 3 | 1 | 4 |
| 1 | 3 | 2 | 8 | 5 | 4 | 9 | 6 | 7 |
| 3 | 2 | 5 | 6 | 4 | 8 | 1 | 7 | 9 |
| 8 | 6 | 1 | 2 | 9 | 7 | 5 | 4 | 3 |
| 7 | 4 | 9 | 5 | 1 | 3 | 6 | 2 | 8 |
| 9 | 5 | 3 | 4 | 7 | 6 | 2 | 8 | 1 |
| 4 | 8 | 6 | 3 | 2 | 1 | 7 | 9 | 5 |
| 2 | 1 | 7 | 9 | 8 | 5 | 4 | 3 | 6 |

சுடோக்கு
ஒரு எண் விளை யாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப் படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண் டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).
இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக் கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



# விக்ரம் பிரபுவுடன் இணைகிறார் பிந்து மாதவி

'அதிபர்'படத்தைதயாரித்தபென்கண்ஸ்டோரிடியம்படநிறுவனம்அடுத்துத்தயாரிக்கும்படம்'பக்கா'. இந்தப்படத்தில்விக்ரம்பிரபுகதாநாயகனாக நடிக்கிறார். கதாநாயகியாகநிக்கிகல்ராணிநடித்துவருகிறார். இப்போது பிந்து மாதவியும் மற்றொரு நாயகியாக அவர்களுடன் இணைந்துள்ளார். இவர்களுடன் சூரி, சதீஷ், ஆனந்த்ராஜ், சிங்கம் புலி, மனோபாலா, சிங்கமுத்து, மயில்சாமி, ராணி, சாய்தீனா ஆகியோர் நடிக்கிறார்கள்.
ஒளிப்பதிவு சரவணன், இசை சி.சத்யா, பாடல்கள் யுகபாரதி, கலைகதிர், நடனம்தினேஷ், ஸ்டண்ட்மிராக்கிள்மைக்கேல், எடிட்டிங்சசி, தயாரிப்புடி.சிவகுமார், கதை, திரைக்கதை, வசனம், இயக்கம்எஸ்.எஸ்.சூர்யா. இந்தப்படத்தின்முதல்கட்டபடப்பிடிப்புமுடிவடைந்துவிட்டது. நீண்ட இடைவெளிக்குப் பின்னர் பிந்து மாதவி இந்தப் படத்தில் இன்னொரு நாயகியாக நடிக்கிறார்.
"அனைவரும்விரும்பும்நகைச்சுவைகலந்தபடமாக'பக்கா'இருக்கும்" என்றுபடக்குழுவினர்தெரிவித்தனர். இரண்டாம்கட்டபடப்பிடிப்புபுதுச்சேரியில் நடைபெற்று வருகிறது.

ஜெய் @jeytwits

உடம்பில் ஏதேனும் பிரச்சினை என்றால் என்னவோ ஏதோவென நோயைப் பற்றி பயந்த காலம் போய்... எவ்வளவாகுமோ என்னவோவென செலவைப் பற்றி பயப்படும் காலமாகி விட்டது.




ஒரு தகப்பனார் பத்துக் குழந்தைகளைக் காப்பாற்றலாம். ஆனால் பத்துக் குழந்தைகள் ஒரு தகப்பனாரைக் காப்பாற்றும் என்று உறுதியாகச் சொல்ல முடியாது.



இப்போ காலையில எழுந்தவுடனே முகநூல் பயன்படுத்திற மாதிரி



சின்ன வயசில படிச்சு இருந்தா இன்னும் [illegible] இருக்கலாம்...


இப்ப எல்லாம் யாரும் நல்ல நேரம் பார்த்து வெளியே கிளம்புறதில்லை...



அலைபேசி முழுமையாக சார்ஜ் ஆன பிறகுதான் வெளியேறுறாங்க...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிர்ஷ்டக் கற்கள்



## பவளம்



**எவரெல்லாம் பவளம் அணியலாம்?**


பவளத்துக்கு 6 குற்றங்கள் உண்டு. அப்படிப்பட்ட பவளங்கள் அணிவதைத் தவிர்த்து விடுவது நல்லது. பவளங்கள் பிளவுபட்டோ, கரும் புள்ளிகளுடனோ, நிறம் வெளிறிப்போயோ, ஓரங்கள் ஒடிந்தோ, துளைகளுடனோ, இருந்தால் அவை குற்றமுடைய பவளங்களாகக்கருதப்படும். பவளத்தில் நாள்பட்ட, பூச்சி அரித்த பவளம் உபயோகத்துக்கு உகந்தது அல்ல. கார்னீலியன், சிவப்பு ஜாஸ்பர் கற்கள் பூமியில் விளைபவையாகும். அந்த கற்களும் பவளம் போன்ற அமைப்பைக் கொண்டவை என்பதால் அவற்றைப் பவளம் என்று எண்ணிவிடக்கூடாது.

செந்நிறகிரகமானசெவ்வாய் ஆதிக்கம்பெற்றவர்களானமேஷ, விருச்சிகராசிக்காரர்களும், எண் கணிதப்படி 9,18,27ஆம் தேதிகளில் பிறந்தவர்களும் பவளத்தை அணியலாம். இதைத் தவிர மருத்துவ ரீதியாகவும் பவளத்தை அணிந்தால் இந்த சிவப்பணுக்கள் கூடுகின்றது. உடலில் சுறுசுறுப்பும் உண்டாகிறது. செவ்வாய் தோஷமுடையவர்களும், மனத் தளர்ச்சியடைபவர்களும், எடுக்கும் முயற்சிகளில் வெற்றியைப் பெறவும், நிலையான ஐஸ்வர்யத்தை அடைய விரும்புபவர்களும் பவளக்கல்லை அணியலாம். பவளத்தை தங்கத்தில் பதித்து மோதிர விரலில் அணிந்து கொள்வது நல்லது.

**பவளத்தின் நன்மைகள்:**

கண்களில் பாதிப்புடையவர்களும், குடல் புண், இருதய பாதிப்பு, உஷ்ண சம்பந்தப்பட்ட நோய், தோல் நோய், பெண்களுக்கு உண்டாகக்கூடிய மாதவிடாய் கோளாறுகள் போன்றவற்றினால் பாதிக்கப்பட்டவர்களும் பவளக்கல்லை அணிவதால் எல்லாப் பிரச்சினைகளிலிருந்தும் விடுபடலாம். பவளம் தடைகளையும் விபத்தையும் தவிர்க்கும். சண்டையையும் வெறுப்பையும் குறைக்கும்.

குருதியைச் சுத்தப்படுத்தும்.



## நாளை

**பங்குனி-22**

செவ்வாய்க்கிழமை -04.04.2017


திதி:அட்டமி பி.ப.03.37

நட்சத்திரம்: புநர்பூசம் பி.இ.02.52

சுபநேரம்:10.40-12.10 வரை

ராகுகாலம்:03.10-04.40 வரை



லெதரினால் அமைந்த வகையில் தற்போது கைப்பைகள் சந்தைக்கு வந்துள்ளன. இவை நாளாந்தப் பாவனைக்கு இலகுவாகவும், எளிதில் பழுதடையாத தன்மையும் கொண்டுள்ளன. இவை 2ஆயிரத்து 200 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகின்றன.

# மருந்துகளை உபயோகிக்க சரியான வழி

எமது வீடுகளில் உள்ள குழந்தைகளுக்கு அடிக்கடி சளி, காய்ச்சல், இருமல், வயிற்றுப் போக்கு போன்றபிரச்சினைகள்ஏற்படுவதைத்தவிர்க்கவே முடியாது. அடிக்கடி கிளினிக்குகளிலும்மருத்துவமனைகளி லும் கொடுக்கப்படும் மருந்துகளை அடுத்த முறையும் பயன்படுத்தலாமே என மீதமுள்ள மருந்துகளை எமது தாய்மார்கள் பத்திரப்படுத்துவது வழக்கம். ஆனால், இப்படியே மருந்துப் பெட்டிக ளில் குவியும் மருந்துகளை என்றாவது ஒருநாள் அவசரத்துக்குத் தேடும் போது, எந்த மருந்து எப்போது வாங்கியது என்றே தெரியாமல்தலைசுற்றும். இத்தகைய பிரச்சினைகளைத் தீர்க்க கீழ்க்கண்ட வழிமுறைகளைப் பின்பற்றலாம்.

குழந்தைகளுக்குப் பயன்படுத்தும் மருந்துகளில் மேற்புறப் பெட்டியில் அதனை உபயோகிக்கத் தொடங்கியநாளைக்குறித்துவைத்துக்கொள்ளவும்.

மருந்து, மாத்திரைகள் குழந்தைகளின் கைகளில் படாமல் இருக்கும்படி வைக்கவும்.

கண்கள்படும்இடத்தில்தினமும்போடும்மருந்து, மாத்திரைகளை வையுங்கள். மறந்து விட்டாலும் பார்க்கும்போது ஞாபகத்திற்கு வரும்.

ஒவ்வொருவருக்குமான மருந்துகளைத் தனித்தனியாக பத்திரப்படுத்துங்கள். சூரிய அல்லது மின்விளக்கு வெளிச்சம், காற்று படாத இடத்தில் மருந்துகளை வைப்பது நல்லது.

தூக்கிப் போடும் மருந்துகளையும் பாதுகாப்பாக அப்புறப்படுத்துங்கள்.

## வரலாற்றில் இன்றைய தினம்

**03.04.2017**

801-பலமாதகால முற்றுகையின் பின்னர் மூர்களிடமிருந்து பார்சிலோனா லூயிஸ் அரசால் கைப்பற்றப்பட்டது.

1834-கிரேக்கசுதந்திரப்போராட்டத்தின்போது இராணுவ ஜெனரல்கள் தேசத் துரோக குற்றச்சாட்டில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

1885 -தனது இயந்திர வடிவமைப்புக்காக கொட்லியப் டைம்லருக்கு ஜேர்மனியில் காப்புரிமம் வழங்கப்பட்டது.

1895-நாடகஆசிரியர்ஒஸ்கார்வைல்ட்டுக்குஎதிராக அவமதிப்பு ஏற்படுத்திச் சோடிக்கப்பட்ட குற்றச்சாட்டில் விசாரணை தொடங்கியது. இதன்போது ஓரினச் சேர்க்கையில் ஈடுபட்டதாக சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது

1922-சோவியத் யூனியனின் கம்யூனிஸ்ட் கட்சி பொதுச் செயலாளராக முதன்முதலாக ஜோசப் ஸ்டாலின் ஆனார்.

1933-ஹஸ்ரன்லேடிலூஸியின்நிதிப்பங்களிப்பில், மார்கியூஸ் தலைமையிலான துணிச்சலான பிரித்தானியப் பயணிகளுடன் முதன் முத லாக எவரெஸ்ட் சிகரத்துக்கு மேலாக விமானப் பறப்பு மேற்கொள்ளப்பட்டது.

1936-விமானியான சாள்ஸ் லின்ட்பேர்வ் உடைய ஆண்குழந்தையைகடத்திக்கொலைசெய்த புரூனோ றிச்சாட் ஹப்ற் மன்னுக்கு சாவுத் தண்டனை நிறைவேற்றப்பட்டது.

1942-பட்டான்குடாநாட்டில்அமெரிக்கமற்றும்பிலிப்பைன்ஸ் துருப்புக்கள் மீது ஜப்பானிய படைகள் தாக்குதலைத் தொடங்கின.

1946-போர்ச் சிறைக் கைதிகளைப் பிடித்து அணிவகுப்பை நடத்திய ஜப்பானிய லெப்டினன்ட் ஜெனரல் மஸஹாரு ஹொம்மாவுக்கு பிலிப்பைன்சில் போர்க்குற்றத்துக்காக சாவுத் தண்டனை விதிக்கப்பட்டது.

1948-தென் கொரியாவில் ஜெயுமாகாணத்தில், ஜெயுஎழுச்சி என அழைக்கப்பட்ட சிவில் போரில் வன் செயல்களும் மனித உரிமை மீறல்களும் இடம்பெற்றன.

1973-மோடர்லாவின் மாட்டின் கூப்பரால் முதன் முதலாக அலைபேசி மூலம். பெல் ஆய்வுச் சாலைகளிலுள்ள ஜோல் எஸ் ஏன்ஜெலுக்கு அழைப்பு எடுக்கப்பட்டது.

1993-23ராணுவத்தினர் மீது 35பொதுமக்களைக் கொலை செய்ததான மயிலந்தனைப் படுகொலை வழக்கு விசாரணை மட்டக்களப்பு நீதிமன்றிலிருந்து பொலன்னறுவைக்கு மாற்றம்.

1995-பிரேமதாஸாகொலைதொடர்பாக2பேர்மீது வழக்கு; அடுத்தவாரம்தாக்கல்செய்யப்படும் என அறிவிப்பு.

1995 -அரசதலைவரின் பாதுகாவலர்களை ஏமாற்றிவிட்டு அலரி மாளிகையினுள் அத்து மீறி நுழைந்த இளைஞன் கைது.

1995 -வடக்குக் கிழக்கில் முஸ்லிம்களின் தாயகத்தை உள்ளடக்கித் தனிச்சபை முஸ்லிம் காங்கிரஸ் ஆண்டு விழாவில் தீர்மானம்.

1997-இனப்பிரச்சினைதீர்வுபிரிட்டனின்மத்தியஸ்தத்துக்கு இலங்கைஅரசு ஆதரவு அமைச்சர் லியம் பொக்ஸ் கொழும்பு வந்து முக்கிய பேச்சு நடத்தினார்.

1997-அல்ஜீரியாவில் தலித் கிராமத்தில் படுகொலைதொடங்கியது அங்குள்ள 53குடியிருப்பாளர்களும், கெரில்லாக்களால் கொல்லப்பட்டனர்.

2000 -போரின்போது பளைப்பகுதியில் சிக்கியோர்வெளியேறஅனுமதிக்கப்படவில்லை.

2000-பளை இத்தாவில் பகுதியில் கிபீர் தாக்குதல்.

2000 -மட்டக்களப்பு மூத்த பத்திரிகையாளர் ஐ.நடேசனின் வீட்டின் மீது நள்ளிரவு குண்டுத் தாக்குதல்

2004 -2004 மட்றிட்புகையிரத குண்டுத் தாக்குதலில் ஈடுபட்ட இஸ்லாமிய தீவிரவாதிகள் பொலிஸாரால் சுற்றி வளைக்கப்பட்ட நிலையில் தற்கொலை செய்து கொண்டனர்.

2010 -அப்பிள் நிறுவனத்தால் முதல் சந்ததிக்காக ஐபாட், டப்லட் கணினி வெளியிடப்பட்டது.

2016 -214488 வெளிநாட்டு கம்பனிகளின் சட்ட பூர்வ ஆவணம் பனாமா பேப்பர் எனும் பெயரில் கசியவிடப்பட்டது

2016-அதிஉச்சப்பாதுகாப்புடன்யாழ். வந்தார் அரச தலைவர் மைத்திரிபால; வவுனியாவுக்கான பயணம் இறுதி நேரத்தில் ரத்தானது.

2016-பிரபாகரனின்உடல்எரிக்கப்படவில்லைஎன சரத் பொன்சேகா தெரிவிப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோடிபதி ஷனிதா
சீட்டிழுப்பு வாரம்: 120
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 02.04.2017
அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 81,679,852/-
S 19 48 56 59
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

இம்முறை தனயோகம் உங்களுடையதா?
திகதி 02.04.2017 | வெற்றி வாரம் 2116 | வர்ணம் ஊதா
மகரம்
வெற்றி இலக்கங்கள்
07 10 28 51
செவ்வாய்க்கிழமை வெற்றிப்பொதி
ரூ 2. 000. 000/=
2017.04.04 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நீல நிற டிக்கட்டுக்களாகும்.
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து
1919 இற்கு அனுப்பவும்.

Galaxy Star
வெற்றி வாரம் 149
திகதி 02.04.2017
நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்
08 03 14 30 38
அடுத்த புதன்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 2,329,188/-
05.04.2017 ஆம் திகதி புதன்கிழமை நீல நிற டிக்கட்டுகளாகும்.
வெற்றி பெற்ற சீட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>GS என டைப் செய்து
1919 இற்கு அனுப்பவும் அல்லது துரித அழைப்பு 1919

උත්තියෝගපූර්வ முடிவுகள்
Development Fortune
சீட்டிழுப்பு வாரம் ▶ 30
சீட்டிழுப்பு திகதி ▶ 01.04.2017 சனிக்கிழமை
வெற்றி இலக்கங்கள்
21 47 51 65
சுப்பர் இலக்கம் 03
அதிர்ஷ்ட மாதம் மே
அடுத்த மிகப்பெரிய ஜக்பொட் 9. 682. 738/=
அடுத்த சுப்பர் ஜக்பொட் 2. 260. 382/=
அடுத்த ஜக்பொட் 2. 017. 878/=
06.04.2017 திகதி வியாழக்கிழமை நீல நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
www.dlb.lk

# பாகிஸ்தானில் பள்ளிவாசல் அருகே 20 பேர் படுகொலை

பாகிஸ்தான்பஞ்சாப்பிராந்தியத்திலுள்ளசூபிகளின்பள்ளிவாசல்ஒன்றுக்கு அருகே நேற்று 20 பேர் கொலை செய்யப்பட்டனர் என்று அந்த நாட்டுப் பொலிஸார் தெரிவித்தனர்.

பள்ளிவாசலுக்குப் பொறுப்பானவர்களால் இந்தக் கொலைகள் மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸார் சந்தேகிக்கின்றனர். சந்தேகநபர் ஒவ்வொருவராக தனது அறைக்கு அழைத்து கூர்மையான ஆயுதத்தால் தாக்கி கொலை செய்துள்ளார் என்று கூறப்படுகின்றது.

குறித்த சந்தேகநபர் ஒருமனநோயாளியாக இருக்கலாம் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர். (வ)

## வீடு வாடகைக்கு
புத்தூர் - மீசாலை (AB 32) வீதியில் A9 பாதையில் இருந்து 1/2 KM (Annexe) சாவகச்சேரியில் இருந்து 5 KM, கொடிகாமத்திலிருந்து 4KM, யாழ்ப்பாணம் 20KM. அரச, தனியார் நிறுவனங்களில் வேலை செய்பவர்களுக்கு முன்னுரிமை.
தொடர்பு - 077 078 0240, 071 904 1277

## சாரதிகள் தேவை
நடமாடும் பேக்கரி வான் ஓடுவதற்கு நன்கு அனுபவமுள்ள சாரதிகள் தேவை.
புதிய துர்க்கா வெதுப்பகம்
கலைவாணி வீதி, பொற்பதி றோட்,
கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம்.

## அறை வாடகைக்குண்டு
ஆஸ்திரேலியா, லண்டன் விசா (visa) அலுவலகத்திற்கும், கண் ஆஸ்பத்திரிக்கும், ASIRI வைத்தியசாலைக்கும் அருகில் அறை நாள், வார வாடகைக்கு வழங்கப்படும்.
தொடர்பு - 077 3787 373

## வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்குண்டு
கரந்தன் சந்தி நீர்வேலியில் மிகவும் அமைதியான இடத்தில் 05 அறைகள், 02 விறாந்தை, சமையலறை, குளியலறை மற்றும் நீர்த்தாங்கி என்பவற்றுடன் அமைந்த பெரிய வீட்டுடன் கிணறு, மலசலகூடம் மற்றும் மரங்கள் நிறைந்த சோலையான 06 பரப்பு. 04 குழி விஸ்தீரணமான காணி ஒன்று ரூபா 48 இலட்சத்திற்கு விற்பனைக்கு உண்டு. விலை பேசித்தீர்மானிக்கலாம்.
தொடர்பு - 077 036 5676

## பொது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படும், நிறைவேற்று அதிகார அரச தலைவர் முறைமை ஒழிக்கப்படும் என்று மக்களுக்கு தேர்தல் வாக்குறுதி வழங்கியுள்ளோம். அது நிறைவேற்றப்படும். புதிய அரசமைப்புக்கான பொது வாக்கெடுப்புத் தொடர்பில் பலர் அச்சம் கொள்கின்றனர். அதனை வெற்றியாக்கலாம். அது ஆபத்தானது என்றாலும் அரசுக்கு வெற்றியாக அமையும். புதிய அரசமைப்பின் ஊடாக என்ன நன்மைகள் கிடைக்கப்பெறும் என்பதை மக்களுக்குத் தெளிவுபடுத்தினால் அவர்கள் ஆதரவு வழங்குவார்கள். புதிய அரசமைப்புக்கான பொதுவாக்கெடுப்பு கூட்டு அரசின் வீழ்ச்சியாக இருக்காது. கூட்டு அரசைப் பலப்படுத்தும் வகையிலேயே அமையும்" என்று அமைச்சர் மங்கள சமரவீர மேலும் தெரிவித்தார். (வ-5)

## இரு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர் மட்டுவில் முத்துமாரியம்மன் கோவிலடியைச் சேர்ந்த பெரியநாயகம் பாலகுமார் (வயது - 22) சுன்னாகம் உடுவிலைச் சேர்ந்த மகேஸ்வரன் ஜனார்த்தனன் (வயது - 24) ஆகியோரே கழுத்து மற்றும் கைப் பகுதிகளில் வெட்டுக் காயங்களுக்கு இலக்காகினர் என்று தெரிவிக்கப்பட்டது. சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (வ-9)

# ஓராண்டு நினைவஞ்சலி

அம்மா! உமையிழந்து ஆண்டொன்று ஆனதுவோ?



தோற்றம்
24 . 03 . 1959

மறைவு
14 . 03 . 2016

## அமரர் பார்வதி வைரவநாதன்

திதி :- பூர்வபக்க சப்தமி 03.04.2017


அம்மா! உமையிழந்து ஆண்டொன்று ஆனதுவோ?
ஆசைமுகம் மறைந்து அவலம்தான் சூழ்ந்ததுவோ?
செம்மையாம் சிரிப்பு செந்தளிப்பாம் பூவதனம்
சேர்ந்து மகிழ்ந்திருந்த செய்தியெல்லாம் மறைந்திடுமோ?
உம்மை காக்க உழைத்தோம் முடியவில்லை!
ஒவ்வோர் பொழுதுமிங்கு உம் நினைவில் வாடுகின்றோம்!
எம்வீட்டு நாயகியே! என்றென்றும் நாம் மறவோம்!
இறைவன் தாள் மலரில் நீரமரப் பிரார்த்திப்போம்.

ஓம் சாந்தி!

கணவர் - வைரவநாதன்
மகன் - பிரகலாதன்
- அருண்
077 395 7583

நகுலேஸ்வரா வீதி,
கீரிமலை.

# மரண அறிவித்தல்



தோற்றம்
30 . 09 . 1971

மறைவு
02 . 04 . 2017

## சிவபுண்ணியம் செல்வநாதன்

வடமராட்சி, நவிண்டிலைப் பிறப்பிடமாகவும், அச்சுவேலி தெற்கு, நெல்லியோடையை வசிப்பிடமாகவும் கொண்ட சிவபுண்ணியம் செல்வநாதன் நேற்று (02.04.2017) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் சிவபுண்ணியம் - பவளம் தம்பதியரின் அன்பு மகனும் சின்னையா - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் தயாளினியின் அன்புக்கணவரும் சிவராசா, லீலா, ரஞ்சினி, கண்ணன், சிவநாதன், மங்களம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜெகதீஸ்வரி, ஜெயராசா, உதயராணி, அனுசியா, மகேந்திரராசா, சிவகுமார், கயல்விழி, இமையாளன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் அன்புசிறீதரனின் சகலனும் ஆவார்


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.04.2017) திங்கட்கிழமை அச்சுவேலி நெல்லியோடையில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பி.ப. 2 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆவரங்கால் கரதடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நெல்லியோடை,
அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கொழுப்புத்திசுக் கட்டி!

## மருத்துவ உலகில் புரிந்து கொள்ளப்பட வேண்டிய குறிகாட்டி

ஆனந்த வாணி

மருத்துவ உலகில் புரிந்து கொள்ளப்படாத விடயங்களும் அவற்றுக்கான தடயங்களும் எத்தனையோ உள்ளன. அவற்றுள் ஒன்றுதான் கொழுப்புக்கட்டி (LIPOMA). இவை திடீரெனத் தோன்றுவதான நோயல்ல. படிப்படியாக நீண்ட காலத்தை தன்னுள் சுவீகரித்துக் கொண்டு மெதுவாக உருவாகக்கூடியது. ஒரு கட்டத்திலே தொட்டால் தெரியுமளவுக்கு வளர்ந்த பின்னரே எமது கவனத்துக்குத் தெரிய வருகிறது. வெளிப்படையாகப் பார்த்தவுடன் கட்டியானது தெரிவதற்கு மேலும் பல காலங்கள் ஆகும். 30 வயதுக்கு மேற்பட்டதான வயதினரிடையே அதிகமாக இக்கட்டி காணப்படுகிறது. பெண்களிடம் அதிகமாக சிங்கிள் லிபோமாவும் (SINGLE LIPOMA) ஆண்களிடம் அதிகமாக மல்ரிபிள் லிபோமாவும் (MULTIPLE LIPOMA) காணப்படுகிறது. குழந்தைகளிடம் இவை அரிதாகவே காணப்படுகிறது.

**அமைப்பும், அறிகுறிகளும்**


தோலுக்கும் அதன் அடியிலுள்ள தசை அடுக்குக்கும் இடையில் உள்ளதான அடிபோஸ்ரிசு (Adipose Tissue) எனப்படும் கொழுப்பு திசுக்களின் வளர்ச்சியே லிபோமா கட்டியாக உருவம் பெறுகிறது. மனித உடல் போர்வை போலவே அடிபோஸ் திசுக்களால் மூடப்பட்டுள் ளது. இவை உடலுக்கு எப்போதும் வெப்பத்தையும் மென்மையான அழகையும் தருகிறது. தோலின்கீழாக நளுக் நளுக்கென்று தோலில் ஒட்டாமல் நழுவிச் செல்வதுபோல் இருப்பது கொழுப்புக் கட்டியின் முக்கிய அடையாளமாக சொல்லப்படுகிறது. இதை தவிர வேறெந்த அறிகுறிகளும் (Asymptomatic) தென்படுவதில்லை. கொழுப்புக் கட்டி மென்மையானது. தீங்கற்ற தட்டிக் குழைத்த மாப்போலவே (றப்பர்) காணப்படுவது.

இக்கட்டிகள் உருண்டை வடிவில் அல்லது முட்டை போன்ற நீள்வட்ட வடிவில் அமைந்திருக்கும். சிறிய கட்டிகள் ஒரு சென்ரி மீற்றர்கள் வரையான விட்ட அளவுடையதாக இருக்கும். பெரியகட்டிகள் சிலரது உடலில் வளரலாம். பொதுவாக தொட்டாலோ, அழுத்திப் பார்த்தாலோ வலி இருக்காது. விதி விலக்காக சில கட்டிகளில் வலி இருக்கலாம். அவை குருதி ஓட்டம் அதிகமுள்ள அன்ஜியோ லிபோமா (Angio Lipoma) எனப்படுவதான கொழுப்புக் கட்டிகளாகும். எனினும் அவை ஆபத்தானவை அல்ல. லிபோமா எப்போதுமே பிற கட்டிகள்போல புற்றாக மாற்றமுறுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**தோற்றத்துக்கான காரணங்கள்**

கொழுப்புக் கட்டிகள் தோன்றுவதற்கான பிரதான காரணிகள் இன்னும் முழுமையாகக் கண்டறியப்படவில்லை. சிறு காயங்கள் கூட இக்கட்டியின் வளர்ச்சியினைத் தூண்டலாம். அதிக நிறை, உடற் பருமன், கொலஸ்ரோல் போன்றவை காரணமாகவே கொழுப்புக்கட்டிகள் ஏற்படுகிறது என்பதனை மருத்துவ உலகத்தால் உறுதிபடக் கூறமுடியவில்லை. பாரம்பரியம் என்பதான காரணங்கள் இவை வளர்வதனை உறுதி செய்கிறது. அத்தகைய நிலையில் (Familial Multiple Lipomatosis) குடும்ப வழி பன்மடங்கு கொழுப்புக்கட்டிகளாக அவை வளர்கிறது. செயல்திறன் குன்றிய மந்தமான கல்லீரல் இயக் கத்துடன் இக்கட்டிகளுக்கு தொடர்பு உள்ளதாக சில ஆராய்ச்சிக் குறிப்புகள் சுட்டிக்காட்டுகின்றன.

LIPOMA




**ஆபத்தானதா...?**

உடலின் எந்தப்பாகத்தில் வேண்டுமானாலும் தோன்றக் கூடியவையே இந்த கொழுப்புக்கட்டிகள். பொதுவாக கொழுப்பு சேகரிக்கப்பட்டுள்ள பகுதிகளில் (Fat depositing Areas) குறிப்பாக கழுத்துப்பிடரி, தோள், முதுகு, முன் உடல் (Trunk), கைகள், இடுப்பு, தொடை, வயிறு போன்ற இடங்களில் தோன்றுகிறது.

கொழுப்புக் கட்டிகளால் உடனடித்தன்மையோடான எந்த வித ஆபத்துகளும் இல்லை. எனினும் எதிர்காலத்தில் இவை புற்றுநோயாக மாறும் என்பது தவிர்க்கப்படவேண்டிய விடயம். ஆனாலும் லிப்போ சர்கோமா (LIPOSARCOMA) எனப்படும் ஒருவகைக் கொழுப்புப் புற்றுநோய் உள்ளது. இது தோலில் அல்லாமல் சற்று ஆழத்தில் கண்களுக்கு தெரியாமல் மறைந்திருக்கும் எனச் சொல்லப்படுகிறது.

உள்ளுறுப்புகளின் மீது வளரும் கொழுப்புத் திசுக்கட்டிகள் மிக அபாயகரமானவையாக அமையக்கூடும். சில கட்டிகள் பெரிதாகி பருமனடைந்து நரம்புகளை அழுத்தும் போது வலி ஏற்படும். இந்த நிலையில் திசுப்பரிசோதனை (BIOPSY) செய்து பார்ப்பது நல்லது. இரைப்பை மற்றும் குடல்பாதை மீது கொழுப்புத்திசுக் கட்டி அமையுமானால் வலிமிக்க அடைப்பு, புண், குருதிப்போக்கு, உணவினை விழுங்க முடியாத நிலை (dysphagia), உணவு எதிர்க்களிப்பு, வாந்தி போன்ற பிரச்சினைகள் உருவாக்கலாம். நுரையீரல் காற்றுப் பாதைகளில் கொழுப்புத் திசுக் கட்டிகள் அமையுமானால் சுவாசம் தடைப்படக்கூடும். முதுகெலும்பின் மீது இவை ஏற்பட்டால் நிரந்தர அழுத்தம் காரணமாக பல வித சிக்கல்கள் தோன்றும். இதே போலவே பெண்களின் மார்பகங்களிலும், பிறப்புறுப்புகளிலும் உண்டாகும் கொழுப்புத்திசுக் கட்டிகளால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

தவிர, கொழுப்புத்திசுக் கட்டிகளால் நரம்பியல் பாதிப்புகள் (Neurological Discomforts) மற்றும் அதீத வலிகள் ஏற்படுதல். அதேபோன்று அருகிலுள்ளதான தசைகள், உறுப்புகளின் இயங்குநிலைக்கும் பிரச்சினைகள் ஏற்படுமாயின் ஆங்கில மருத்துவமுறைச் சிகிச்சையின் படி லிபோசுகேசன் (LIPOSUCTION) மூலம் உறிஞ்சப்பட்டு அல்லது அறுவைச் சிகிச்சை மூலம் அகற்றப்பட்டு நோயில் இருந்து விடுபட வேண்டிய நிலமைகள் ஏற்படும்.

**கொழுப்புத் திசுக்கட்டிகளின் வகைப்பாடு**

பலவகை கொழுப்புத் திசுக் கட்டிகள் உள்ளன. அவற்றில் பரவலாகவும் அதிகமானவர்களிடத்திலேயும் காணப்படுவது மேலோட்டமான தோலடி கொழுப்புத்திசுக்கட்டி (Superficial Subcutaneous Lipoma), தோல் புறப்பரப்பின் அடியில் (Just below the surface of the skin) கொழுப்புத் திசுக்களால் ஏற்படும் கட்டி என அனைத்துமே கொழுப்புத் தேக்கமுள்ள இடங்களில் எல்லாம் தோன்ற வாய்ப்புள்ளது. பெரும்பாலும் முன்கையில், தொடையில், முன் உடலில் (Trunk) இவை ஏற்படும்.


அடிபோசா டொலொறோசா (Adiposa dolorosa) என்பது ஒன்றன் மேல் ஒன்றாகத் தோன்றும் கட்டிகள். இன்றா மஸ்கியூலர் லிபோமா (Intra Muscular Lipoma) என்பது கைகால் பெருந்தசைகளின் ஆழத்தில் காணப்படுவது. கொண்டிறோயிட் லிபோமாஸ் (Chondroid Lipomas) என்பது பெண்களின் கால்களில் ஆழமாக ஏற்படும் உறுதியான மஞ்சள் கட்டிகள். ஸ்பின்டில்லி (Spindle Lipomas) எனப்படும் கதிர்செல் கொழுப்புத்திசுக் கட்டி மெதுவாக வளரும் தோலடிக் கட்டி வகையாகும். சப் கற்றேனியஸ் லிபோமா (Subcutaneous Lipoma) பெரும்பாலும் முதிய ஆண்களிடம் ஏற்படுவதுடன் இவை கழுத்து, மூக்கு, தோற்பட்டையில் உருவாகிறது. நியூறல் பைபிறோ லிபோமா (Neural Fibrolipoma) என்பது நரம்புச் சார்ந்த மிகை கொழுப்புத்திசுக் கட்டி ஆகும். இதனால் நரம்பு அழுத்தம் ஏற்படும். இவை வலிமிக்கதான தோலடி முடிச்சுகளாக விளங்குகின்றன. அத்துடன் கொழுப்புத்திசுக் கட்டியின் அனைத்துக் கூறுகளையும் கொண்டது. இவை குருதி நாளப் பாதைகளில் காணப்படுகிறது. வலிமிக்கது. போஸ்ற்றையூமற்றிக் லிபோமா (Post traumatic Lipoma) என்பது காயங்களின் பின்பாக ஏற்படும் கொழுப்புத்திசுக்கட்டியாகும்.


**மருத்துவ சிகிச்சை**


கொழுப்புத் திசுக்கட்டியைப் பொறுத்தவரையிலே எந்தவிதச் சிகிச்சையும் தேவைப்படாது. ஒரு குறிப்பிட்ட காலத்தின் பின்பாக அவற்றின் வளர்ச்சி என்பது தானாகவே தடைப்பட்டு அற்றுப்போகிறது. இருப்பினும் அவை மறையாது. இக்கட்டிகள் மூலம் உள்ளார்ந்த பிரச்சினைகள் ஏற்படும்போது மட்டுமே அறுவைச் சிகிச்சை முறைமை அவசியப்படுகிறது.

மாறாக தோற்ற அழகை இல்லாது செய்கிறது என்பதனை கருத்தில்கொண்டு (Cosmetic reasons) அறுவைச்சிகிச்சை மேற்கொள்வோருக்கு மீண்டும் அதே இடத்தில் அல்லது அருகில் புதியதான கொழுப்புத்திசுக்கட்டிகள் மீண்டும் தோன்றி வளருகின்றன. கொழுப்புத்திசுக்கட்டி அனைத்துமே அறுவைச்சிகிச்சைக்குட்படுத்தப்பட வேண்டியதான நோய் வகைப்பாடுகள் (Surgical Disorder) அல்ல.

ஆக, மனிதனிடம் காணப்படும் நோயை மட்டும் தனியே பிரித்துப் பார்த்தல் என்பது பொருத்தப்பாடுடைய விடயமல்ல. நோயுற்ற மனிதனை முழுமையாக ஆய்வு செய்து நோயின் அடிப்படைக் காரணங்களை கண்டுகொள்ள வேண்டும். நோய் தோன்றும் காரண காரியங்கள், மீண்டும் மீண்டும் அவை தோன்றுவதற்கான உள் இயல்புகளை ஆழமாக பரிசோதனை ரீதியிலே தெரிந்துகொள்ள வேண்டும். உண்மையிலே மேற்போந்த செயற்பாடுகளின் பிற்பாடான சிகிச்சை முறைகளே நோய்க்கான சிறந்த தீர்வினைத் தரவல்லது. உடல் ஆரோக்கியம் பெற்று வாழ்ந்திட உடனடித் தன்மைகளை நாடாது சிந்தித்து செயலாற்ற வேண்டும். நற் பலாபலனைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.







Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வெளிநாட்டு...

தார் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க.

இந்திய ஊடகத்துக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐ.நா. தீர்மானத்துக்கு நாங்கள் இணை அனுசரணை வழங்கினோம். அந்த விவகா ரங்களுக்குத் தீர்வைக் காண்பதற்கான இரண்டு வருட கால அவகாசத்தையும் பெற்றோம். இந்தத் தீர்மானத்தில் நாங்கள் வெளிநாடுகளிலிருந்து நிபுணத்துவத்தைப் பயன்படுத்திக் கொள்வதற்கான ஏற்பாடுகள் காணப்பட்டன. இலங்கை தேவைப்பட்டால் மாத்திரம் அதனைப் பயன்படுத்தலாம். இந்தியா போன்று இலங்கையிலும் வெளிநாட்டு நீதிபதிகள் நீதிச் செயற்பாட்டை மேற்கொள்ள முடியாது.

இந்தியா மற்றும் ஏனைய தென்னாசிய நாடுகளைப் போன்று இலங்கை ரோமிலுள்ள பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்தை அங்கீகரிக்காது. அதில் இணையாது.

**புதிய அரசமைப்பு**

நாங்கள் புதிய அரசமைப்பை உருவாக்குவதற்காக அரசமைப்பு நிர்ணய சபையை ஏற்படுத்தியுள்ளோம். அதிகாரப் பகிர்வு குறித்துச் சிந்தித்து ஆராய்ந்து வருகின்றோம். இலங்கையின் ஒவ்வொரு மாகாணசபையும் அதிகளவு அதிகாரங்களைக் கோருகின்றன. தற்போது கொழும்பு நாடாளுமன்றத்துக்கும் ஏனைய மாகாண சபைகளுக்கும் இடையே முரண்பாடு காணப்படுகின்றது. இது வெறுமனே சிங்களவர்கள், தமிழர்கள் விவகாரமல்ல. இது கொழும்பு அரசு மாகாண சபைகளுக்கிடையேயான விவகாரம். எங்களால் என்ன வழங்கமுடியும் என்பது குறித்து நாங்கள் யதார்த்தபூர்வமாகச் சிந்திக்கவேண்டும்.

**ஐ.எஸ். அமைப்பில் இணைந்தவர்கள் யார்?**

இலங்கையிலிருந்து சிரியாவுக்குச் சென்று ஐ.எஸ். அமைப்புடன் இணைந்து கொண்டவர்கள் உள்ளனர். அவர்களில் சிலர் கொல்லப்பட்டுள்ளனர். ஏனையவர்கள் யார் என்பதைக் கண்டுபிடித்து அவர்களின் குடும்பத்தவர்களுடன் பேச்சுகளை மேற்கொண்டுள்ளோம்.

இலங்கையிலிருந்து சென்றவர்கள் அமெரிக்கா, ஈராக் மற்றும் சிரிய படையினர் முன்னேறிவருவதன் காரணமாக கடும் அழுத்தங்களுக்கு உள்ளாகியுள்ளனர் என்பதே இறுதியாக எமக்குக் கிடைத்த செய்தி.

**இந்திய - சீன உறவு**

நாங்கள் எப்போதும் சீனாவுடன் நட்புறவைப் பேணி வருகின்றோம். அதற்காக இந்தியாவை விட்டுக்கொடுக்கவில்லை. நாங்கள் பல நாடுகளுடன் சிறந்த நட்பைப் பேணி வருகின்றோம். அதற்காக எந்த நாட்டையும் விட்டுக்கொடுக்கவில்லை. இந்தியாவுடனான எங்கள் உறவு சீனாவுடனான உறவை விட முற்றிலும் வித்தியாசமானது. இந்தியாவுடனான எங்கள் உறவை அடிப்படையாக வைத்து நீங்கள் சீனா அல்லது வேறு நாட்டுடனான எங்கள் நட்பு குறித்து கவலையடையத் தேவையில்லை.

எங்களைப் பொறுத்தவரை இந்திய, இலங்கை அரசுகள் என்ன நடக்கின்றது என்பதை நன்கு புரிந்துவைத்துள்ளன. நாங்கள் மிக நெருக்கமாகச் செயற்படுகின்றோம். எங்கள் உறவுகளில் ஏதாவது அதிருப்தி நிலவுகின்றதென்றால் இந்திய ஊடகங்களே அவ்வாறு தெரிவிக்கின்றன. இது குறித்து நான் எதனையும் செய்ய முடியாது.

இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையே சிறந்த பாதுகாப்பு உறவு காணப்படுகின்றது. எங்கள் மத்தியில் பொருளாதார உறவும் காணப்படுகின்றது. நாங்கள் பல திட்டங்களை முன்னெடுப்பது குறித்து சிந்தித்து வருகின்றோம். இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே சிறந்த உறவு நிலவிய காலம் இதுவே என நான் கருதுகின்றேன்.

நீங்கள் ஏன் சீனாவுடனான எங்கள் உறவு குறித்து அதிகம் கவலையடைகிறீர்கள் என்பது புரியவில்லை. சீனாவிடமிருந்தும் ஏனைய நாடுகளிடமிருந்தும் நாங்கள் அதிகளவு கடன்களைப் பெற்றுள்ளோம். இந்த வர்த்தகக் கடன்களைத் திருப்பிவழங்குவது எங்களுக்கு கவலைக்குரிய விடயமாகவுள்ளது. இதன் காரணமாக நாங்கள் வெளிநாட்டு முதலீடுகளை அழைக்கின்றோம். சீனாவுடன் எந்தப் பாதுகாப்பு உறவும் இல்லை என்றார். (வ-5)

## தெற்காசியாவில்...

தாங்கவுள்ளார். இன்று ஆரம்பமாகும் இந்த மாநாடு நாளைய தினமும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

இலங்கை தேசிய பாதுகாப்புச் சிந்தனையாளர்கள். இலங்கை தேசிய பாதுகாப்புக் கற்கை நிலையம் மற்றும் தெற்காசிய ஆய்வுகள் மையம் என்பன ஒன்றிணைந்து இந்த மாநாட்டை ஏற்பாடு செய்துள்ளன.

பாதுகாப்புத்துறை ஆய்வாளர்கள் மற்றும் நிபுணர்கள் உட்பட மேலும் பலர் மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளதாகக் குறிப்பி டப்பட்டுள்ளது. தெற்காசியாவில் பயங்கரவாதம் மற்றும் கடும்போக்கு வாதத்தை ஒழித்தல் தொடர்பாக இந்த மாநாட்டில் விரிவாக ஆராயப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-5)

## ரூ.16 கோடி...

பொதிகளில் 13.5 கிலோ கிராம் நிறையுடைய ஹெரோயின் கைப்பற்றப்பட்டது. அதன் பெறுமதி 16.2 மில்லியன் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது. வடக்கில் கைப்பற்றப்பட்ட பெரும் தொகையான ஹெரோயின் போதைப் பொருள் இது எனவும் பொலிஸார் கூறினர்.

"பருத்தித்துறை முனைப் பகுதியிலிருந்து 17 கடல் மைல் தொலைவில் 22 அடி நீளமான நாட்டுப் படகை கடற்படையினர் அவதானித்தனர். இரண்டு வெளியிணைப்பு இயந்திரங்கள் அதில் பொருத்தப்பட்டிருந்தன. அந்தப் படகை கடற்படையினர் மறித்துச் சோதனையிட்டனர். படகில் மீன்பிடி உபகரணங்கள் எவையும் காணப்படவில்லை. மிகவும் சூட்சுமமான முறையில், படகில் வெற்று எரிபொருள் கலனின் அடியில் இருந்த மூன்று பொதிகள் மீட்கப்பட்டன.

அவற்றைச் சோதனை செய்தபோது, ஹெரோயின் போதைப்பொருள் இருப்பது கண்டறியப்பட்டது. படகில் பயணித்த 6 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டனர்" என்று வடக்கு கடற்படைத் தளபதி தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் நேற்றுக் காலை காங்கேசன்துறைக்கு அழைத்துவரப்பட்டனர். அவர்கள் காங்கேசன்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். அவர்களிடம் கைப்பற்றப்பட்ட படகு கடற்படையினரால் தடுத்துவைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வடக்குக் கடலில் அதிக பெறுமதியான ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளது. இதுவே முதல்சந்தர்ப்பம் எனத் தெரிவித்த கடற்படை ஊடகப் பேச்சாளர், இலங்கைக் கடற்பரப்பில் மீட்கப்பட்ட அதிகபெறுமதியான ஹெரோயின் 2016 ஏப்ரல் 3ஆம் திகதி காலி கடற்பரப்பில ஈரானிய படகொன்றிலிருந்துமீட்கப்பட்டதாகவும் சுட்டிக்காட்டினார். அந்தப் படகிலிருந்து 110 கோடி பெறுமதியான 110 கிலோ கிராம்ஹெரோயின் மீட்கப்பட்டதாகக் கடற்படை ஊடகப் பேச்சாளர் லெப்டினன்ட் கொமாண்டர் சமிந்தவலாகுளுகே தெரிவித்தார். (வ-5-26-101-106)

## அரசமைப்பு...

டத்தை மூன்று தினங்களாக நீடிப்பதற்கும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

முன்னதாக இரு தினங்களுக்கு மட்டுமே கூட்டத்தை நடத்தத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. தற்போது இடைக்கால அறிக்கையை இறுதி செய்யும் பணியை விரைவுபடுத்துவதற்காக மேலும் ஒரு நாள் கூடிப்பேசுவதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

நாளை, நாளை மறுதினம் மற்றும் வியாழக்கிழமை ஆகிய மூன்று தினங்களும் கூட்டம் நடைபெறவுள்ளது.

அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களுக்கும், அரச தலைவர் மைத்திரிபால சிறி சேனவுக்கும் இடையில் கடந்த திங்கட்கிழமை இரவு நடந்த சந்திப்பில் வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கையை இந்த மாதம் நாடாளுமன்றத்தில் முன்வைப்பதற்கு இணக்கம் காணப்பட்டிருந்தது. இதற்காக வழிநடத்தல் குழுவின் கூட்டத்தை ஏப்ரல் மாதம் 4 ஆம் மற்றும் 5 ஆம் திகதிகளில் நடத்துவதற்கும் அப்போது ஒருமித்து முடிவு எடுக்கப்பட்டிருந்தது. வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கையை முழுமைப்படுத்துவதற்கு இரண்டு நாள்கள் போதாது என்பதால் அதனை மூன்று நாள்களாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. (உ-5)

## சிறப்புத்...

தொடர்ந்து நடைபெற்ற கூட்டத்தில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் உரையாற்றுகையில், "கொழும்பு சுகாதார அமைச்சரின் உதவியால் வடக்கின் 5 மாவட்டங்களிலும் பெரும் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதற்கு முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக நெதர்லாந்து அரசின் நிதிப்பங்களிப்புடன் வடக்கின் 5 மாவட்டங்களிலும் சிறப்புச் சிகிச்சைப் பிரிவுகள் உருவாக்கப்படவுள்ளன. போர் காரணமாக வடக்கில் சிறப்புத் தேவையுடைவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. சுமார் 45 ஆயிரம் பேர் வரை உள்ளனர். வடக்கு மாகாண சுகாதார அமைச்சால் இதுதொடர்பான விவரங்கள் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சேகரிக்கப்பட்டு கணினி மயப்படுத்தப்படவுள்ளன" என்று தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்து உரையாற்றிய கொழும்பு அரசின் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன," சிறப்புத் தேவைக்குட்பட்டவர்களின் புள்ளிவிவரங்களுடன் திட்ட முன்மொழிவை முன்வைக்குமிடத்து கொழும்பு சுகாதார அமைச்சு மாகாண சுகாதார அமைச்சுக்கு நிதியுதவி வழங்கத் தயாராகவுள்ளது" என்று தெரிவித்தார்.

நெதர்லாந்து அரசின் நிதி உதவியுடன் வடக்கில் செயற்படுத்தப்படவுள்ள அபிவிருத்தித் திட்டத்தில் முல்லைத்தீவு மாங்குளம் பிரதேசத்தில் நவீன வசதிகளுடன்கூடிய சிறப்புத் தேவையுடையவர்களுக்கான மறுவாழ்வு வைத்திய சாலை அமையவுள்ளது. (வ-4-101)

## வாக்குறுதிகளை...

இராணுத்தினருக்கும் இடையேயான மேலதிக ஒத்துழைப்புக்கு அடிப்படையாக இருக்கும்"

இவ்வாறு இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப் தெரிவித்தார்.

இலங்கைக்கு ஒரு வாரகாலப் பயணத்தை மேற்கொண்டிருந்த யுஎஸ்எஸ் கொம்ஸ்ரொக் என்ற அமெரிக்க கடற்படைக் கப்பல் நேற்று முன்தினம் புறப்பட்டுச் சென்றதை அடுத்து அமெரிக்கத் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

யுஎஸ்எஸ் கொம்ஸ்ரொக் கொழும்பில் தரித்திருந்த போது, மனிதாபிமான உதவி மற்றும் இடர் மீட்பு ஒத்துழைப்பு ஆகியவற்றை மையப்படுத்தி, அமெரிக்க- இலங்கை கடற்படை மரைன் படையினர் கூட்டுப் பயிற்சிகளை மேற்கொண்டிருந்தனர்.

கடந்த 12 மாத காலத்துக்குள் அமெரிக்க, இலங்கை மரைன் படையினருக்கு இடையே மேற்கொள்ளப்பட்ட மூன்றாவது பயிற்சி ஒத்திகை இதுவாகும்.

இந்தப் பயிற்சியில் 325 அமெரிக்க கடற்படையினர் மற்றும் மரைன் படையினரும், இலங்கையின் 175 கடற்படையினர் மற்றும் மரைன் படையினரும் ஈடுபட்டனர். (வ-5)

## பன்றிக்...

ளில். இந்த வகையான வைரஸ் மிகத் தீவிரமாகப் பரவிக்கொண்டிருக்கின்றது. பன்றிக் காய்ச்சல் வடக்கு மாகாணம் உட்பட நாட்டின் பல மாகாணங்களிலும் பொதுமக்களைப் பீடித்துள்ளது" என்று பணிப்பாளர் மருத்துவர் சாந்தி சமரசிங்க மேலும் தெரிவித்தார். (வ-4)

## முல்லையில்...

லிணக்க செயலணியால் வெளியிடப்பட்ட தகவலானது ஓர் அப்பட்டமான பொய்"

இவ்வாறு குற்றஞ்சாட்டினார் முல்லைத்தீவு மாவட்ட மாகாண சபை உறுப்பினர். து.ரவிகரன்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அந்தத் தகவலில் இராணுவத்தினர் வசம் 540.29 ஏக்கர் தனியார் காணிகளும் 6 ஆயிரத்து 934.38 ஏக்கர் அரச காணிகளும் கடற்படையினர் வசம் 671 ஏக்கர் தனியார் காணிகளும் 44.80 ஏக்கர் அரச காணிகளும் வான் படையினர் வசம் 958 ஏக்கர் அரச காணிகளுமாக மொத்தம் ஆயிரத்து 211.29 ஏக்கர் தனியார் காணிகளும் 7 ஆயிரத்து 937.18 ஏக்கர் அரச காணிகளும் உள்ளன என்று நல்லிணக்கசெயலணியால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில்தான் வடக்கு மாகாணத்திலேயே அதிகளவான நிலங்களை பாதுகாப்பு படையினர் அபகரித்து வைத்திருக்கின்றனர். குடியேற்றம் என்ற பெயரிலும் மாவட்டம் பறிபோகின்றது. முல்லைத்தீவு மாவட்டத்தில் 60 ஆயிரம் ஏக்கர் நிலம் விழுங்கப்பட்டு விட்டது. இந்த நிலையில் 60 ஆயிரம் ஏக்கரில் படையினர் வசம் மட்டும் 40 ஆயிரம் ஏக்கர் காணிகள் உள்ளன.

படை வசமுள்ளதாக நல்லிணக்கச் செயலணி கூறிய 9 ஆயிரத்து 148 ஏக்கர் நிலங்களும் தனியாருக்கும் அரசுக்கும் சொந்தமான நிலங்களாகும் முல்லைத்தீவு மாவட்டத்தின் 60 வீதமான பகுதி வனவளத் திணைக்களத்தின் ஆளுகையில் உள்ளது. வனப் பகுதியில் நிலைகொண்டுள்ள படையினரின் நிலப்பகுதிகள் தொடர்பில் நல்லிணக்கச் செயலணியின் அறிவித்தலில் காட்டப்படவேயில்லை.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மட்டும் வனவளத் திணைக்களத்துக்குச் சொந்தமான இடங்களில் பெரியளவிலான 5 படை முகாம்கள் உள்ளன. ஒட்டுசுட்டான் பகுதியில் உள்ள அம்பகாமம் பகுதியில் 8 ஆயிரத்து 500 ஏக்கர் நிலத்தில் வான் படையினரின் மிகப் பெரிய முகாமும் கரிப்பட்டமுறிப்பு காட்டுப் பகுதியில் 2 ஆயிரத்து 500 ஏக்கரில் வானூர்தித் தளத்துடன் கூடிய முகாமும் உள்ளன. ஏ-9 சாலையில் முறிகண்டிப் பகுதியில் 2 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் மிகப் பெரிய இராணுவ முகாம் உண்டு . அதேபோன்று கேப்பாபிலவு பகுதியில் மக்களின் நிலத்துக்கும் அப்பால் 2 ஆயிரத்து 200 ஏக்கர் வனப்பகுதியில் பெரியளவிலான வான் படை முகாம் உள்ளது. இவைகளின் அளவுகள் அனைத்தும் திட்டமிட்ட வகையில் வேண்டுமென்றே மறைக்கப்பட்டு ஒரு மாவட்டத்தின் உண்மை நிலையே மூடி மறைக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெறும் நில ஆக்கிரமிப்புத் தொடர்பில் கூட்டமைப்பால் வெளிநாடுகளுகுத் தெரியப்படுத்தப்பட்ட ஆவணங்களில் இவை தொடர்பில் தெளிவாகச் சுட்டிக்காட்டப்பட்டன. அதனை மூடி மறைக்கும் நோக்கில் வேண்டுமென்றே வெளியிடப்பட்ட அரசியல் கலப்புள்ள ஒரு புள்ளிவிவரமாகவே நல்லிணக்கச் செயலணியின் அறிவிப்பைப் பார்க்கின்றோம் என்றார். (வ-101)

## நீதி...

யவை குறித்து மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுமானால் போர்க்குற்றங்கள் குறித்த நீதி விசாரணைப் பொறிமுறைக்கான அவசியம் இல்லாமல் போகலாம்"

இவ்வாறு அயலுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படும் போர்க்குற்றங்கள் குறித்த விசாரணைகளுக்காக அரசு உள்நாட்டுப் பொறிமுறையை உருவாக்கும். காணாமற்போனவர்கள் விவகாரங்களைக் கையாள்வதற்காக காணாமற்போனோர் அலுவலகத்தை ஏற்படுத்துவது அவசியம்.

இந்த அலுவலகம் மக்கள் விடுதலை முன்னணியின் கிளர்ச்சிக் காலத்தில் காணாமற்போகச் செய்யப்பட்டவர்கள் உட்பட காணாமற்போனவர்கள் குறித்து விசாரணைகளை மேற்கொள்ளும். காணாமற்போனோர் அலுவலகத்துக்கு வழக்குத் தொடர்வதற்கான அதிகாரம் வழங்கப்படாது.

இதன் பின்னர் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவை ஏற்படுத்தவுள்ளோம். அந்த ஆணைக்குழுவின் இறுதி வடிவம் குறித்து நாங்கள் இன்னமும் தீர்மானிக்கவில்லை. தென்னாபிரிக்கா போன்ற நாடுகளின் அனுபவங்களை நாங்கள் உள்வாங்குகின்றோம். எங்கள் பொறிமுறை தென்னாபிரிக்க பாணியிலானதாகக் காணப்படாது. அடுத்த சில மாதங்களுக்குள் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் இறுதி வடிவம் குறித்த முடிவுக்கு நாங்கள் வர முடியும். எங்கள் அரசு இலங்கையைப் பேரழிவிலிருந்து காப்பாற்றியுள்ளது. இந்தத் தீர்மா னங்கள் முன்னைய அரசின் காலத்தில் நிறைவேற்றப்பட்டிருந்தால், இதன் பின்னர் இலங்கைக்கு எதிராக பொருளாதாரத் தடைகள் நிறைவேற்றப்பட்டிருக்கும். முன்னைய அரசின் சில தலைவர்கள் மீது பயணத் தடை விதிக்கப்பட்டிருக்கலாம் என்றார். (வ-5)

## 12,000...

இவ்வாறு மீளவும் தெரிவித்தார் அமைச்சர் சம்பிக்க ரணவக்க.

போர்க்குற்றங்கள் தொடர்பில் பன்னாட்டு விசாரணையே நடத்தப்பட வேண்டும் என்று தமிழர் தரப்புக்களால் தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டு வருகின்றது. இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

"போரின் இறுதியில் சரணடைந்த தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் போராளிகள் 12 ஆயிரம் பேர் மறுவாழ்வு வழங்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர். போர்க்குற்றச்சாட்டுக்கு பன்னாட்டு விசாரணை கோரினால் இவர்களையும் கைது செய்ய வேண்டும். இதற்குத் தமிழர்கள் தயாரா ? அவர்கள் தயார் என்றால், நாமும் பன்னாட்டு விசாரணைக்கு இணங்குவோம்" என்று அமைச்சர் சம்பிக்க மேலும் தெரிவித்தார். (வ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிந்து கொள்வோம்

**★ விளக்கை அணைப்பதற்கும் ஊதுகின்றோம். அடுப்பை எரிப்பதற்கும் ஊதுகின்றோம் ஏன் என்று தெரியுமா?**

- விளக்கு, அடுப்பு இரண்டும் எரிவதற்கு ஒட்சிசன் தேவை.
- எரியும் விளக்கை ஊதும் பொழுது வாயினுள் இருந்து வரும் விசையான காற்று எண்ணெய் ஆவியையும் சுவாலையின் வெப்பத்தையும் ஒட்சிசனையும் அகற்றுகின்றது. இதனால் சுவாலை அணைகின்றது.
- அடுப்பை ஊதும் பொழுது அடுப்பின் மேலுள்ள காபனீரொட்சைட்டும் சாம்பரும் அகற்றப்பட்டு புதிய வளி கிடைக்கின்றது.
- புதிய வளியிலுள்ள ஒட்சிசன் விறகு எரிவதற்கு உதவுகின்றது.

**★ சூடான நாள்களில் செயற்கைத் துணிகளால் ஆன ஆடைகளிலும் பார்க்க பருத்தி ஆடையை அணிதல் மேலும் சௌகரியமானது ஏன்?**

- பருத்தித்துணியின்நுண்துளைகளினூடாகவளிஉட்செல்லவோவெளியேறவோ முடியும்.
- பருத்தி விரைவில் வியர்வையை உறிஞ்சி ஆவியாக இடமளிப்பதால் குளிர்ச்சி ஏற்படும்.
- ஆனால் செயற்கைத் துணியில் நுண்துளைகள் இன்மையால் வியர்வை ஆடையினூடாக வெளியேறி ஆவியாதல் நிகழாது. இதனால் குளிர்ச்சி ஏற்படாது.

**★ மூன்றுகல் அடுப்புகளை விட சூட்டடுப்பு ஏன் சிறந்தது?**

- மூன்று கல் அடுப்பைப் பயன்படுத்தும் பொழுது எரிதலால் பெறப்படும் வெப்பம் பெருமளவு சூழலில் இழக்கப்படும்.
- சூட்டடுப்பில் வெப்பம் வெளியேற அதிக இடைவெளி இராது.
- மூடப்பட்ட நிலையில் வளி ஓட்டம் ஒரே திசையில் நிகழ்வதால் புதிய வளி கிடைக்கும். இதனால் சூட்டடுப்பு அதிக வெப்பத்தை வழங்கும்.



# காகமும் தண்ணீர் குடமும்

காகம் ஒன்று தண்ணீர் தேடி
எங்கும் பறந்து திரிந்தது
தாகத்தாலே களைத்த காகம்
கூரை மேலே இருந்தது

முற்றம் தனில் குடத்தைக் கண்டு
காகம் அதன் மேல் அமர்ந்தது
முற்றாய்க் குனிந்தும் நீரைப் பருக
முயன்றும் எட்டவில்லையே


என்ன செய்வதென்று காகம்
எண்ணிக் கற்கள் பொறுக்கியே
சின்னக் குடத்துள் போடப்போட
நீரும் உயர்ந்து வந்ததே

மேலே நீரைக் கண்ட காகம்
மிகவும் மகிழ்ச்சி கொண்டது
பாலைப் போல கொஞ்சமான
நீரைப் பருகிப் பறந்ததே

# எதிர்க் கருத்து சொற்களை அறிவோம்

1. அவசரம் – நிதானம்
2. நோயாளி – சுகதேகி
3. புராதனம் – நவீனம்
4. மலர்ச்சி – வாட்டம்
5. இழிவான – உயர்வான
6. துரிதம் – தாமதம்
7. கண்டனம் – பாராட்டு
8. சாதகம் – பாதகம்
9. ஐயம் – தெளிவு
10. ஆரோகணம் – அவரோகணம்
11. சுருக்கம் – விரிவு
12. வீரன் – கோழை
13. துணிவு – தயக்கம்
14. அண்மை – சேய்மை
15. காலம் – அகாலம்






# புள்ளிகளை இணைத்து படம் வரைவோம்

# நிதானத்தோடு செயற்படுவோம்

எமது வீட்டிலிருந்து அரை கிலோமீற்றர் தொலைவில் சந்தை அமைந்துள்ளது. நானும் அம்மாவும் சந்தைக்கு பேருந்தில் போகலாமென நினைத்தும் அது வரத் தாமதமானதால் வீதி ஓரமாக நடக்க ஆரம்பித்தோம். எமது வீட்டுச் செல்லப்பிராணி லக்கியும் எம் பின்னால் புறப்பட்டது. அம்மா லக்கியைப் பிடித்து வீட்டு எல்லைக்குள் விட்டு வெளிக்கேற்றைப் பூட்டினாள். அது எம்முடன் வரட்டும்" என்றேன். "நாய்களால் எவ்வளவு தொல்லைகள் வீதியில் ஏற்படுகின்றன என்று நீ பத்திரிகைகளில் படிக்கவில்லையா?" அம்மா பதில் கூறிக் கொண்டு நடந்தாள். வீதி ஓரமாக ஒரு வெற்று பால் பேணி. அதனைக் காலால் தட்டியபடி நடந்தேன். அம்மா என்னையும் பால் பேணியையும் மாறிமாறிப் பார்த்த பார்வை அச்செயல் அம்மாவுக்குப் பிடிக்க வில்லை என்பதை எனக்கு உணர்த்திற்று. பேணியை எடுத்து வீதியின் ஓரத்தில் போட்டு விட்டு நடந்தேன்.




அந்த வேளை வீதியில் ஒரு இளைஞன் வேகமாக மோட்டார் சைக்கிளை ஓட்டிக்கொண்டு போனார். அவர் எம்மைக் கடந்து சென்ற பின்பும் மோட்டார் சைக்கிளின் சத்தம் காதைத் துளைத்தெடுத்தது "பார் இந்தப் பையன் ஓடுற வேகத்தை அப்பப்பா..." என்று அம்மா சொல்லி முடிக்கவில்லை. எதிரே தெரிந்த வீதி வளைவில் அந்த இளைஞன் மோட்டார் சைக்கிளின் வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் தடுமாறி விழுந்தான். அப்போது கார் ஒன்று எதிரே வந்தது. கண்ணிமைக்கும் நேரம்... காரோட்டி நிதானமாக காரைச் செலுத்தி வந்ததால் திடீர் "பிரேக்" போட்டு காரை நிறுத்தி இளைஞனை மயிரிழையில் காப்பாற்றி விட்டார். இளைஞனின் முகம் பயத்தால் வெளிறிப் போனது. காரோட்டி பரபரப்போடு காரிலிருந்து இறங்கி கீழே விழுந்து கிடந்தவனைத் தூக்கி விட்டார். இளைஞனின் கைகால்களில் உரோஞ்சற் காயங்கள், மோட்டார் சைக்கிளின் இலக்கத் தகடு, கண்ணாடி எல்லாம் நொறுங்கி விட்டன. காரோட்டி எதுவும் கேட்க முன்பே "மிகவும் அவசரம் அதுதான்.... " என்று இழுத்தான் இளைஞன்.

"அவசரத்துக்கு இப்படி வேகமாகப் போனால் எங்கே போய்ச் சேரு வீர்கள் தெரியுமா? இப்போது அந்த வேகம் என்னாச்சு? உனக்கு காயம். உன் சைக்கிளுக்கு சேதம் . வேகமாகஓட வேண்டியது விளையாட்டுப் போட்டிகளில் அல்லது ஓட்டப் பந்தயங்களில் தான். அங்கேயும் கூட எவ்வளவு தூரம் என்று கணக்கிட்டிருக்கும், மேலும் ஓடுபவருக்கு இடமும் ஒதுக்கப்பட்டிருக்கும். அவர் ஓட வேண்டிய பாதையில் கோடுகள் போடப்பட்டிருக்கும். அவற்றை மீறிப் போகாமல் வேகமாய் ஓடி வெற்றி பெற வேண்டும். ஆனால் இந்த மாதிரி போக்குவரத்து அதிகமுள்ள வீதிகளில் பந்தய ஓட்டம் ஓடக் கூடாது. மீறினால் சொர்க்கம்தான். எவ்வளவு வாகனங்கள், பாதசாரிகள் பயணம் செய்யும் இடம். போக்குவரத்து வீதி ஒழுங்கு விதிகள் உள்ளனவே. அவற்றை ஒழுங்காகக் கடைப்பிடித்தால் இந்த விபத்துக்கள், விபரீதங்கள் ஏற்படாது என்று அறிவுரை கூறிச் சென்றார் காரோட்டி.

இளைஞன் மோட்டார் சைக்கிளைத் தள்ளிக் கொண்டு வாகனங்கள் பழுதுபார்க்கும் கடைக்குச் சென்றான். அம்மாவும் நானும் எதிர்பாராத இந்த விபத்தைப் பார்த்தபடி அப்பால்நடந்தோம். அம்மா "மகனே உனக்கு ஆமையும் முயலும் கதை தெரியும் தானே" என்றாள். "ஓம் நன்றாகவே தெரியும். அதையேன் இப்போது கேட்கிறீர்கள்" என்றேன். "அதில் வேகமாக ஓடக் கூடிய முயல் ஏன் தோற்றுப் போனது என்று உனக்குத் தெரியுமா?" அம்மா கேட்டாள் "பாதி தூரத்தில் முயல் தூங்கி விட்டது. அதனால் தானே" என்றேன். இல்லை தன்னால் வேகமாக ஓட முடியுமென்ற கர்வம் முயலுக்கு. அதனால் அவசரமாக ஓடியது; ஆனால் நிதானமாக ஓட முடியவில்லை. அதனால் பாதி தூரம் ஓடிய உடனே அது களைத்து விழுந்து விட்டது. அதுதான் உண்மை. அவசரத்தில் எதையும் செய்யும் போது சரிவரச் செய்ய முடியாது விரைவில் களைப்படைந்தும் விடுவோம்" என்றாள் அம்மா.

**வீதி ஒழுங்குகளைக் கடைப்பிடிப்போம்**
**விபத்துக்களைத் தவிர்ப்போம்.**

# வீதி ஒழுங்கு குறியீடுகள் (சமிக்ஞைகள்)



முன்னால் சிறுவர் கடவை



முன்னால் பாதசாரிகள் கடவை



பாதசாரிகள் வீதிக்கடவை




பேருந்து தரிப்பிடம்




வைத்தியசாலை



ஒலி எழுப்பத் தடை



நேரே செல்லவும்



ஒளிச்சமிக்ஞை





நிறுத்துக




வாகனம் நிறுத்தக் கூடாது





வாகனம் நிறுத்துமிடம்



முன்னால் இடப்பக்க வளைவு



முன்னால் வலப்பக்க வளைவு



முன்னால் ஒடுக்கமான பாலம்



பாதுகாப்பான புகையிரதக் கடவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பற்றிக்ஸ் சம்பியன்

யாழ்ப்பாணம், ஏப். 3
யாழ்ப்பாணம் கல்வி வலய எல்லேயில் 20 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி சம்பியனானது.
சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி அணி மோதியது.
முதலில் துடுப்பெடுத்தாடிய சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி நிர்ணயிக்கப்பட்ட 40 பந்துகளில் ஓர் ஓட்டத்தைப் பெற்றது. டினுஜன் அந்த ஓட்டத்தைப் பெற்றுக் கொடுத்தார்.
பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி அணி 24 பந்துகளில் ஓட்டம் எதனையும் பெறாமல் சகல இலக்குகளையும் இழந்ததை அடுத்து, வெற்றிபெற்று மகுடம் சூடியது பற்றிக்ஸ். மூன்றாமிடத்தை வாதரவத்தை விக்னேஸ்வராக் கல்லூரி அணி தனதாக்கியது. (ம-422)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஏப். 3
அரியாலையின் 98 ஆவது சுதேசிய திருநாள் கொண்டாட்டததை முன்னிட்டு யாழ்ப்பாணம் மாவட்ட ரீதியாக இரு பிரிவாக கரப்பந்தாட்டத் தொடர் நடத்தப்பட்டு வருகிறது. 'ஏ' பிரிவினருக்கான ஆட்டங்கள் அரியாலை திருமகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இன்று இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து இளவாலை மத்திய விளையாட்டுக் கழகமும், இரவு 8 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது ஆட்டத்தில் அச்சுவேலியுத் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகமும்மோதவுள்ளன. (ம-23-108)

## வலிகாமம் தடகளம்

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான நடப்பு வருடத்துக்கான தடகளத் தொடர் இன்று முதல் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.
வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் இன்று, நாளை எதிர்வரும் வியாழன் என மூன்று தினங்கள் இந்தப் போட்டிகள் நடைபெறவுள்ளன. (ம-422)

## கிறாஸ்கொப்பேர்ஸ் அசத்தல் ஆட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 3
கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழகம் நடத்தும் துடுப்பாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் கிறாஸ்கொப்பேர்ஸ் விளையாட்டுக் கழக அணி 103 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.
கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழகம் நடத்தும் இந்தத் தொடரின் ஆட்டங்கள் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் நண்பகல் இடம்பெற்ற ஆட்டத்தில் கிறாஸ்கொப்பேர்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து றைட்ரோன் விளையாட்டுக் கழக அணி மோதியது.
முதலில் துடுப்பெடுத்தாடிய கிறாஸ்கொப்பேர்ஸ் விளையாட்டுக் கழக அணி 30 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 191 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக மயூரன் ஆட்டமிழக்காமல் 33 ஓட்டங்களையும், அஜித் 53 ஓட்டங்களையும், சாரங்கன் 31 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் திலக்சன், உதயசாந், நீல் ஆம்ஸ்ரோங் மூவரும் தலா 2 இலக்குகளையும், ரவிராஜ், நந்தகுமார் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.
192 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய றைட்ரோன் விளையாட்டுக் கழக அணி 21 . 3 பந்துப் பரிமாற்றங்களில் 88 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. நீல்ஆம்ஸ்ரோங் பெற்ற 31 ஓட்டங்களே அதிகபட்சம். பந்துவீச்சில் கபில், அஜித், மதுசன் மூவரும் தலா 2 இலக்குகளை வீழ்த்தினர். (ம-23)



## தடகளத் தொடர்

யாழ்ப்பாணம், ஏப். 3
யாழ்ப்பாணம் கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான இருபாலாருக்குமான தடகளத் தொடர் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இன்று முதல் எதிர்வரும் 6ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. (ம-422)

## உழவர் ஒன்றியம் முன்னேற்றம்

யாழ்ப்பாணம், ஏப். 3
திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம் நடத்தும் வடமாகாண அணிகளுக்கு இடையிலான கபடியில் ஆண்கள் பிரிவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் கிளிநொச்சி உழவர் ஒன்றிய அணி வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றது.
திக்கம் இளைஞர் கழக மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் கிளிநொச்சி உழவர் ஒன்றிய அணியை எதிர்த்து வல்வை அணி மோதியது.
ஆட்டம் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய உழவர் ஒன்றிய அணி ஆட்ட முடிவில் 101 : 32 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றது. (ம-422)





## வென்றது வீனஸ் அணி

யாழ்ப்பாணம், ஏப். 3
தம்புருவளை விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்ட அமரர் செல்வமாணிக்கம் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான கிரிக்கெட்டில் பருத்தித்துறை வீனஸ் அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.
மாதனை விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் கரவெட்டி ஸ்பேஸ் அணியை எதிர்த்து பருத்தித்துறை வீனஸ் அணி மோதியது. 7 வீரர்கள் பங்குபற்றும் 6 பந்துப் பரிமாற்றங்கள் கொண்டதாக இறுதியாட்டம் அமைந்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய வீனஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 6 பந்துப் பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து 63 ஓட்டங்களை பெற்றது. அதிகபட்சமாக கிருபரன் 22 ஓட்டங்களையும், நிரோஜன் 21 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ஸ்பேஸ் அணி சார்பில் அஜந்தன் 2 இலக்குகளையும் டெஸ்மன், ரஞ்சித் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஸ்பேஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 6 பந்துப் பரிமாற்றங்களில் 63 ஓட்டங்களைப் பெற, ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. அதிகபட்சமாக டெஸ்மன் 44 ஓட்டங்களையும், ரஞ்சித் 15 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் வீனஸ் சார்பாக நிறோயன், கயந்தன் தலா ஒவ்வொரு இலக்கையும் கைப்பற்றினர்.
இரு அணிகளும் சமமான ஓட்டங்களைப் பெற்றதால் சுப்பர் பந்துப் பரிமாற்றத்தில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. சுப்பர் பந்துப்பரிமாற்றத்தில் ஓர் அணி இரு இலக்குகளை இழந்தால் அந்த அணியின் சகல இலக்குகளும் இழக்கப்பட்டதாகக் கருதப்படும். ஸ்பேஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடி ஓட்டமெதனையும் பெறாத நிலையில், சகல இலக்குகளையும் இழந்தது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய வீனஸ் அணி 2 பந்துகளில் ஓர் ஓட்டத்தைப் பெற்றுச் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது. (ம-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவுகள் பதிலடி

பாகிஸ்தானுக்கு எதிரான ரி-20 தொடரின் மூன்றாவது ஆட்டத்தில் வெற்றிபெற்று தொடரை 2:1 என்றாக்கியது மேற்கிந்தியத் தீவுகள் அணி.

மேற்கிந்தியத் தீவுகளுக்கு சுற்றுப் பயணம் செய்துள்ள பாகிஸ்தான் அணி 4 ஆட்டங்கள் கொண்ட ரி-20 தொடரில் விளையாடி வருகிறது. முதலிரு ஆட்டங்களையும் பாகிஸ்தான் வென்ற காரணத்தால் அடுத்த இரு ஆட்டங்களிலும் வெற்றிபெறவேண்டும் என்ற நெருக்கடி தீவுகளுக்கு இருக்கவே செய்தது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற மூன்றாவது ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 8 இலக்குகளை இழந்து 137 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக கம்ரன் அக்மல் 48 ஓட்டங்களையும், அசாம் 43 ஓட்டங்களையும், சமன் 21 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பத்ரி 2 இலக்குகளையும், வில்லியம்ஸ், பிரீத்வைட், நரைன், சாமுவேல்ஸ் நால்வரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய தீவுகள் 31 பந்துகள் மீதமிருக்க, 3 இலக்குகளை இழந்து இலக்கை அடைந்தது. 91 ஓட்டங்களைக் குவித்த லூயிஸ் ஆட்டநாயகனாகத் தெரிவானார். அவரைவிட சாமுவேல்ஸ் 18 ஓட்டங்களையும், மொகமட் ஆட்டமிழக்காமல் 17 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ரன்வீர், நடப் கான், ரியாஸ் மூவரும் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர். (ம)



# டோனியின் தலைமையில் களமிறங்கும் சென்னை

## சீனிவாசன் நம்பிக்கை

அடுத்த வருட ஐ.பி.எல். தொடரில் டோனியின் தலைமையில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி களமிறங்கும் என்று அந்த அணியின் உரிமையாளர்களில் ஒருவரும் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் முன்னாள் தலைவருமான சீனிவாசன் நம்பிக்கை தெரிவித்தார்.

சென்னையில் நடந்த நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஐ.பி.எல். தொடர் ஆரம்பித்தபோது, என்ன செலவானாலும் முதலில் டோனியை ஒப்பந்திக்கவேண்டும் என்று முடிவெடுத்தோம். அந்த முடிவுதான் முக்கியமான முடிவு. அப்போது அவர் 2007 ஆம் ஆண்டு ரி-20 உலகக்கிண்ணத்தை வென்றிருந்தார். ஏனையவர்களிடமிருந்து டோனி வேறுபட்டவர். எம்மீதான தடை இந்த வருடத்துடன் முடிவுக்கு வருகிறது. அடுத்த வருடம் பெரிய அளவில் மீண்டு வருவோம். டோனியின் தலைமையில் அடுத்த வருடம் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி மஞ்சள் உடையில் களமிறங்கும் என சீனிவாசன் மேலும் தெரிவித்தார். (ம)

# ரி-20 தொடர் நாளை

பங்களாதேஷ் இலங்கை அணிகளுக்கு இடையிலான இரு ஆட்டங்களைக் கொண்ட ரி-20 தொடர் நாளை ஆரம்பமாகிறது.

கொழும்பு பிறேமதாச மைதானத்தில் நாளையும் எதிர்வரும் 6 ஆம் திகதியும் தொடரின் ஆட்டங்கள் நடைபெறவுள்ளன. இந்த இரு அணிகளுக்கும் இடையிலான டெஸ்ட், ஒருநாள் தொடர் ஆகியன 1:1 என்று சமநிலையில் முடிந்தன. இலங்கை அணி சொந்த மண்ணில் வைத்து தொடரைக் கைப்பற்றும் என்று நம்பிக்கை தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில், இந்தக் கருத்துக் கணிப்புக்களை பங்களாதேஷ் தவிடுபொடியாக்கியது. இதனால் ரி-20 தொடரையாவது 2:0 என்ற அடிப்படையில் கைப்பற்ற வேண்டும் என்ற சிக்கல் இலங்கைக்கு உள்ளது. (ம)

# இறுதியில் நவஜீவன்ஸ்

கரணவாய், ஏப். 3

பருத்தித்துறை தம்புறுவளை விளையாட்டுக் கழகத்தின் கரப்பந்தாட்டத் தொடரில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக பி அணி இறுதியாட்டத்துக்குத் தகுதிபெற்றது.

தம்புருவளை விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்த அரையிறுதி ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக 'பி' அணியும் தொண்டைமானாறு கலையரசி விளையாட்டுக் கழகமும் மோதின. மூன்று செற்கள் கொண்ட ஆட்டத்தின் முதலிரு செற்களையும் முறையே 25:16, 25:21 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்கு முன்னேறியது நவஜீவன்ஸ் பி அணி. (ம-108)



# மிக நெருக்கடியான அட்டவணையால் உடற்கல்வி ஆசிரியர்கள் திண்டாட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 3

வடமாகாண கல்வித் திணைக்களத்தின் பரீட்சை நேர அட்டவணையால் சுகாதாரமும் உடற்கல்வியும் வினாத்தாள்கள் மதிப்பீட்டு பணியில் ஈடுபடும் உடற்கல்வி ஆசிரியர்கள் பெரும் நெருக்கடிக்கு முகம்கொடுத்துள்ளனர்.

பாடசாலை மாணவருக்கான முதலாம் தவணைப் பரீட்சை கடந்த 23 ஆம் திகதி ஆரம்பித்து கடந்த 30 ஆம் திகதி வியாழக்கிழமை நிறைவடைந்தது. 6 முதல் 11 வரையிலான மாணவர்களுக்கு சுகாதாரமும் உடற்கல்வியும் பாடம் இறுதி நாள்களிலேயே நடைபெற்றது. 6 ஆம் ஆண்டு முதல் 10 ஆம் ஆண்டு வரையிலான மாணவர்களுக்கு கடந்த 29 ஆம் திகதி புதன் கிழமையும் 11 ஆம் ஆண்டு மாணவர்களுக்கு இறுதி நாளான 30 ஆம் திகதியிலேயே சுகாதாரமும் உடற்கல்வியும் பரீட்சை நடைபெற்றது.

இன்று யாழ்ப்பாணம், வலிகாமம் வலயமட்ட தடகளத் தொடர் ஆரம்பமாகிறது. எனின், மதிப்பீட்டுப் பணியில் ஈடுபடும் உடற்கல்வி ஆசிரியர்கள் பலர் மூன்று நாள் அவகாசத்தில் மதிப்பீட்டுப் பணிகளை நிறைவு செய்வதுடன் தடகளத் தொடருக்கு வீரர், வீராங்கனைகளை தயார்படுத்த வேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டுள்ளனர். சுகாதாரமும் உடற்கல்வியும் பரீட்சைஅட்டவணையை, பரீட்சை ஆரம்பித்த தினத்தில் இருந்து மேற்கொண்டிருந்தால் இந்த நெருக்கடி நிலை தோற்றம் பெற்றிருக்காதென்பது பலரினதும் கருத்து. (ம-422)



# வற்சன் தலைவர்

நடப்பு வருடத்துக்கான ஐ.பி.எல். தொடரில் பெங்களூர் அணியின் தலைவராக வற்சன் செயற்படவாய்ப்புள்ளது என்று கருதப்படுகிறது.

காயம் காரணமாக கோக்லி சில தொடக்க ஆட்டங்களில் விளையாடமாட்டார். வில்லியர்ஸும் தொடரில் இருந்து விலகிச் செல்லவுள்ளார். இதனால் ஆரம்ப ஆட்டங்கள் சிலவற்றுக்கு அதாவது கோக்லி அணிக்குத் திரும்பும் வரை வற்சன் தலைவராகச் செயற்படுவார் என்று கருதப்படுகிறது. (ம)

# மியாமித் தொடரில் ஜோகன்னா சம்பியன்

மியாமி ரெ்னனிஸ் தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் இங்கிலாந்து வீராங்கனை ஜோகன்னா கிண்ணம் வென்றார்.

அமெரிக்காவின் முக்கிய ரெ்னனிஸ் தொடர்களில் மியாமித் தொடரும் ஒன்று. பெண்கள் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டம் நேற்று நடைபெற்றது.

இங்கிலாந்து வீராங்கனை ஜோகன்னாவை எதிர்த்து டென்மார்க் வீராங்கனை கரோலினா வோஸ்னியாக்கி மோதினார்.

மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தின் முதலாவது செற்றை 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார் ஜோகன்னா. அவர் அடுத்த செற்றிலும் ஆதிக்கம் செலுத்தி அந்த செற்றையும் 6:3 என்று கைப்பற்றினார். இதனால் மூன்றாவது செற்றுக்கு வேலை வைக்காமல் 2:0 என்ற நேர்செற் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றார்.

இங்கிலாந்து வீராங்கனை ஒருவர் கிட்டத்தட்ட 40 வருடங்களின் பின்னர் கைப்பற்றும் ஒரு முக்கிய கிண்ணமாகவும் இது அமைந்தது. (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமியின் வருகை மிகச் சிறப்பானது

## சொல்கிறார் சேவாக்



பஞ்சாப் அணிக்கு மேற்கிந்தியத் தீவுகள் அணியின் முன்னாள் தலைவர் சமி சேர்த்துக் கொ ள்ளப் பட்டமை சிறப்பானது என்று பஞ்சாப் அணியின் ஆலோசகர் சேவாக் தெரிவித்தார்.

கூடுதலாக அணியில் இணைந்துள்ள டேரன் சமி, வருண் ஆரோன், டிநட ராஜன் போன்ற வீரர்கள் புதிய யோசனைகள் மற்றும் திறமைகளை அணிக்கு கொண்டு வருவார்கள். இந்த அணி ஆக்ரோசமான விளையாட்டு, துணிச்சல், இயல்பான ஆட்டத்தை வெளிப்படுத்துதல் போன்றவற்றில் கவனம் செலுத்தும். நாங்கள் அதிக நம்பிக்கை மற்றும் எதிர்பார்ப்புடன் இந்த பருவகாலத்தில் விளையாட இருக்கிறோம். எங்கள் அணி கிண்ணத்தை நோக்கிய பயணத்துக்கு தகுதியானதே என்று சேவாக் மேலும் தெரிவித்தார்.

(ம)

**தவறவிடப்பட்டுள்ளது**
அரசடி வீதிக்கும் அத்தியடி வீதிக்கும் இடையில் எனது பேர்ஸ், ஆவணங்கள் என்பன தொலைந்துவிட்டது.
கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு-077 4316132, 071040 8301

# தலைமைத்துவத்தில் ஒரு கண்; ஏற்றுக்கொள்கிறார் அண்டர்சன்



இங்கிலாந்து அணித்தலைவர் பதவிமீது தனக்கு ஒரு கண் இருந்ததை பகிரங்கமாக ஏற்றுக்கொண்டுள்ளார் அந்த அணியின் வேகப்பந்து வீச்சாளர் அண்டர்சன்.

இங்கிலாந்து அணியின் தலைவராக இருந்த அலிஸ்டர் குக், கடந்த வருடம் இந்தியாவுக்கு எதிராக 0:4 என்று அடைந்த தோல்வியை அடுத்து தனது பதவியில் இருந்து விலகினார். இதனால் புதிய தலைவராக எவரை நியமிப்பது என்பது தொடர்பில் ரூட், புரோட், ஸ்ரோக்ஸ் ஆகியோரைப்பரிசீலித்துவந்த இங்கிலாந்து கிரிக்கெட் சபை இறுதியில் ரூட்டை தலைவராக நியமித்தது. இந்த நிலையிலேயே அண்டர்சன் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கிலாந்து அணியின் தலைமைத்துவப் பதவிக்காகஎன்னைபரிசீலனைசெய்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். என்னுடைய தனிபட்ட கருத்தில், நான் அந்த பதவி குறித்து தீவிரமாக நினைத்தேன். வேகப்பந்து வீச்சாளர்களுக்கு தலைமைத்துவப் பதவி ஏன் கொடுக்கவில்லை என்பது குறித்து எனக்குத் தெரியாது. அவர்கள் அந்த வேலையை சிறப்பாக செய்வார்கள். வேகப்பந்து வீச்சாளர்களுக்கு காயம் ஏற்படும் அச்சம் இருக்கலாம். ஆனால், அனைத்து பந்து வீச்சாளர்களும் தலைவராகலாம் என்பது எனது கருத்து என அண்டர்சன் மேலும் தெரிவித்தார்.

(ம)

**யா/அரியாலை பிரப்பங்குளம் மகாமாரி அம்மன் ஆலயம்**
**கோயில் உதவியாளர் தேவை**

மேற்படி கோயிலுக்கு சைவசமய ஆசாரமுள்ள கோயில் உதவியாளர்கள் தேவைப்படுகிறார்கள். விருப்பமுள்ளவர்கள் 30.04.2017 இற்கு முன் கோயில்காரியாலயத்தில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். வேலை விவரம், சம்பளம் என்பன நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.
தொடர்புகளுக்கு: 077 854 3416
077 503 0710
நிர்வாகம்.

**SPOKEN ENGLISH**
WITH DIPLOMA CERTIFICATE
இம்முறை O/L,A/L எழுதியோர், இளைஞர், யுவதிகள்,தொழில் தேடுவோர்,வெளிநாடு செல்வோர் உயர்கல்வி மாணவர்கள் இணைய முடியும்.
ஆங்கிலத்தில் ஒரெழுத்துத்தெரியாதவர்கள்கூட மூன்றே மாதங்களில் சரளமாக ஆங்கிலத்தில் பேசமுடியும்!
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம்-08.04.2017
1. காலை 08.00-10.00 3. பி.பகல் 01.00-03.00
2. காலை 10.00-12.00 4. மாலை 03.00-05.00
திங்கள், புதன் பிரிவுகள் - 1. காலை 08-10 2. காலை 10-12 3. மாலை 3-4.30
செவ்வாய்,வியாழன் பிரிவுகள் - 1.காலை 08-10 2.காலை 10-12 3.மாலை 3-4.30
SAAMSON
Experts in English Training
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

"ஓம் சச்சிதானந்த பரப்பிரம்ம புருஷோத்தம பரமாத்ம ஸ்ரீ பகவதி சமேத ஸ்ரீ பகவதே நமஹ"
Jaffna's No 1 for Gr 6 to O/L
**எடிசன் அக்கடமி**
Intent + Effort + Grace = Success
யாழ்ப்பாணம், கலட்டி, நல்லூர், கொக்குவில், மானிப்பாய்
36 பேர் 9A
2016 O/L வாழ்த்துக்கள்

| | | |
|---|---|---|
| 01. R.கிருஷிகன் | 13. S.நதீஸ்கர் | 25. G.சங்கீரணி |
| 02. P.சானுஜன் | 14. S.தர்மதாசன் | 26. M.நிவேதா |
| 03. N.பானுஜன் | 15. T.ரேனுஜன் | 27. B.தாரணி |
| 04. R.அபிசாதன் | 16. B.சுகிரா | 28. S.தர்சிகா |
| 05. R.கிருஷாந்தன் | 17. T.ரூபவதனா | 29. M.துஷாரா |
| 06. S.தர்சிகன் | 18. S.ரியூரிக்கா | 30. S.மீனா |
| 07. R.ஆதிரையன் | 19. A.சோபிகா | 31. S.கோபிகா |
| 08. A.அனோஷிகன் | 20. J.கார்த்திகா | 32. S.பிலஹரி |
| 09. J.சஜீபன் | 21. M.சுபதா | 33. S.காயத்திரி |
| 10. A.ஜானுசன் | 22. S.பிரீத்தி | 34. R.யரணியா |
| 11. A.ஹரிசாந்த் | 23. R.மாதங்கி | 35. S.நிலக்சனா |
| 12. E.இளங்கீதன் | 24. K.பிறையொளி | 36. T.நிதர்சனா |

* இன்றுவரை எமது 230 மாணவர்கள் 9A பெற்றுள்ளனர் என்பதை பெருமையுடன் அறியத்தருகின்றோம்.
* 2011-19பேர், 2012 - 12பேர், 2013-16பேர், 2014-30பேர், 2015-24பேர்.

NALIN Information Technologies Pvt Ltd.
**NALIN INFORMATION TECHNOLOGIES (PVT) LTD.**
**வடமாகாண பாடசாலைகளுக்கு விசேட விலைகளில்**
**Fingerprint Time attendance Device**



உங்கள் பாடசாலைகளுக்கு விசேட விலையில் 2 வருட உத்தரவாதத்துடன் 1000 நபர்களுக்கான வரவினைப் பதிவுசெய்யக்கூடிய Fingerprint Time attendance Deviceகளைப் பொருத்திடுங்கள்.
வடமாகாணத்தில் எமது தொழில்நுட்பவியலாளர்களால் 500 இற்கு மேற்பட்ட அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் Fingerprint Time attendance Deviceகள் விசேடமாக பொருத்தப்பட்டுள்ளது.
**Rs. 14,500.00 முதல்**
* இச்சலுகை சித்திரை 15வரை மட்டுமே.
No. 195/2, Parameswara Junction, Palaly Road, Jaffna.
021 222 1121
077 766 7975

**வெளிவந்துவிட்டது**
குவி அச்சகத்தின் புதிய வெளியீடுகளாக
* Practise your Grammar Grade-8
* விஞ்ஞானம் தரம்-10 (வினாவிடை பயிற்சி நூல்)
* கணிதம் தரம்-7 (தமிழ் மொழி மூலம் & English Medium)
* கணிதம் தரம்-8 (தமிழ் மொழி மூலம் & English Medium)
* Happy Kids English Grade-1
சகல புத்தகக்கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.
K.V.Printers Book Distributing Centre
355, Clock tower Road, Jaffna.
T.P: 021 720 0237

FLC FRENCH LANGUAGE CENTRE
**பிரெஞ்சு மொழி வகுப்பு**
Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட International Diploma in French
இலகுவாக எழுத, வாசிக்க, சரியான உச்சரிப்புடன் கதைக்க...
2006 முதல் இன்றுவரை 1246 மாணவர்கள்
இல. 40, பலாலி வீதி, (ஆரியகுளம்) 15.04.2017 சனி 10am 0779 789 456 021 221 7781
No.181, 1st Floor, பிரதான வீதி, நெல்லியடி. 17.04.2017 பி.ப. 4.00 021 320 2973
IELTS Life Skills A1, B1 வகுப்புக்களும்.....
(இலுப்பையடி சந்திக்கு அண்மையில் கராஜ் முன்பாக)



புதுப்பொலிவுடன் கோலாகல திறப்புவிழா
SP
**ஷாம்பவி பதிப்பகம்**
☑ ஓவ் (F) செற் பிறிண்ட் ☑ பெனர் பிறிண்ட் ☑ ஸ்கிறின் பிறிண்ட்
☑ மக் பிறிண்ட் ☑ கணினி வடிவமைப்புக்கள் ☑ துண்டுப்பிரசுரங்கள்
☑ வியாபாரச் சிட்டைகள் ☑ விளம்பர அட்டைகள் ☑ றபர் சீல்கள்
☑ பாடசாலை உபகரணங்கள் ☑ காகிதாதிகள்
☑ திருமண, பூப்புனித நீராட்டு விழா அழைப்பிதழ்கள்
இன்று 03.04.2017 திங்கள்
**திருமண அழைப்பிதழ்களின் சங்கமம்**
உறவினர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
தொலைபேசி : 021 222 4143/ 077 618 4425/ 077 616 1125
267, 269, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Email:shampavi2009@gmail.com



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.04.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org